# உதயன்

சுடர் 30 கதிர் 307 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 12, செவ்வாய்க்கிழமை 29.09.2015


## கடலில் வேகமான காற்று

யாழ்ப்பாணம் ,செப் .29.
கடல் பிரதேசங்களில் தென் மேற்கு திசையில் 20-40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும். இதனை மீனவர் கவனத்தில் கொண்டு செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்

பக்.24

## நவம்பர் 20 இல் 2016 பட்ஜெட்

கொழும்பு, செப் 29
அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.
ஒகஸ்ட் 17 ஆம் திகதி பொதுத் தேர்தல் இடம்பெற்று புதிய அரசு - அமைச்சரவை பொறுப்பேற்றுள்ளது. அவ்வாறு புதிய அரசு உருவாகிய பின்னர் தாக்கல் செய்யப்படும் முதலாவது வரவு - செலவுத் திட்டமாக இது அமைகின்றது.

பக்.24

# முன்னாள் புலிகளை சிறை வைக்க முயற்சி

## வழக்குத் தாக்கல் செய்வதற்கு தயாராகிறது ஜாதிக ஹெல உறுமய



கொழும்பு, செப்ரெம்பர் 29
உயிருடன் இருக்கும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் ஜாதிக ஹெல உறுமய கட்சி ஈடுபட்டுள்ளது.
புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 12ஆயிரம் முன்னாள் போராளிகள், புனர்வாழ்வு அளிக்கப்படாது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்ந்துவரும் புலிகளின் உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய சாத்தியங்கள் குறித்து கட்சியின் சட்டத் தரணிகள் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.
மனித படுகொலைகள், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை, சமாதானத்தை சீர்குலைத்தமை, சிறுவர் போராளிகளை படையில் இணைத்தமை, அப்பாவிப் பொது மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை, அரசியல்வாதிகள் பொதுமக்களைக் குண்டு

பக்.24

## எக்னெலிகொட கடத்தல் குறித்து மேஜர் ஜெனரலிடம் விசாரணை

கொழும்பு, செப். 29
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக் காணாமற் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் தர அதிகாரி ஒருவரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர்.
இந்த விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மேஜர் ஜெனரல், கிரிதல இராணுவ முகாமுடன் தொடர்புடையவர் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
அதே வேளை, முன்னதாக, பிர

பக்.24

## காங்கேசன் துறைமுகத்தை மீள இயக்க இந்தியா முயற்சி

### ரணிலிடம் அனுமதி கேட்டார் மோடி

கொழும்பு, செப்.29
காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு வழங்குமாறு இந்தியா, இலங்கை அரசிடம் கேட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
இது குறித்து இந்தியாவிலிருந்து வெளிவரும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
கொழும்பு ஆட்சிப் பொறுப்பில் இந்தியாவுக்கு நெருக்கமான அரசு காணப்படுவதைத் தொடர்ந்து இலங்கையில் துறைமுகமொன்றை அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்கு இந்தியா மறுபடி புத்துயிர் அளித்துள்ளது. சீனாவை இந்த விடயத்தில் நெருங்குவதே அதன் நோக்கம்.
இதுவரை காலமும் யாழ்ப்பாணத்திலுள்ள

பக்.24

## சட்டவிரோதக் குடியேறிகளை அனுமதிக்காது ஆஸ்திரேலியா

### புதிய பிரதமரும் உறுதி



கொழும்பு, செப்.29
ஆஸ்திரேலியாவுக்குப் படகுகள் மூலம் சட்டவிரோதமாக வருபவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என அந்த நாட்டின் இலங்கைக் கான தூதுவர் ரொபின் மூடி தெரிவித்துள்ளார்.
ஆஸ்திரேலியப் புதிய பிரதமராக மல்கோல்ம் ரேன்புல் அண்மையில் பதவியேற்றார். இந்நிலையிலேயே தூதுவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:-
ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் சட்டவிரோதமாக வரும் குடியேற்றவாசிகளை அனுமதிப்பதில்லை எனப்

பக்.24

## அமெ. தீர்மானம் நீதிக்கான பாதை

### ஜனாதிபதியிடம் ஜோன் கெரி சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 29
இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவானது உண்மை, நீதி, இழப்பீடு என்பவற்றை வழங்குவதற்கான ஒரு பாதையை அமைத்துக் கொடுக்கும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெரி, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.
ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்க வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே ஜோன் கெரி மேற்கண்ட விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.
இரு நாடுகளுக்கு மிடையிலான அரசியல், பொருளாதார மட்டத்திலான உறவுகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.
அத்துடன், ஐ நா. மனித உரிமைகள் சபையின் 30ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்து ஓர் அறிக்கையை வெளியிட்டு இதன்போது உரையாற்றிய ஜோன் கெரி, ஒரு துணை அனுசரணையாளராக இணைந்து கொள்வதற்கான இலங்கை அரசின்

பக்.24

## பாடசாலை நேரங்களில் தனியார் வகுப்புகள் தடை

### கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, செப் 29
பாடசாலை நேரத்தில் தனியார் வகுப்புகள் நடத்தப்படுவதைத் தடைசெய்வதற்கு அரசு தீர்மா னித்துள்ளது எனக் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
பாடசாலை நேரமான காலை 7.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை தனியார் வகுப்புகள் நடத்தப்படுவதைத் தடுப்பதற்கு இன்னும் சில நாள்களில் முடிவெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
பாடசாலை நேரங்களிலும், தனியார் வகுப்புகளை தனியார் கல்வி நிறுவனங்கள் நடத்துகின்றன. இதனால் பாடசாலைக்கு வருவதைத்

பக்.24

## தந்தையர்களை விடுவிக்குமாறு பிள்ளைகள் நேற்று போராட்டம்

### வவுனியா செட்டிகுளம் பகுதியில்




வவுனியா, செப். 29
தமிழ் அரசியல் கைதிகளாகச் சிறைச் சாலைகளில் விசாரணை களின்றியும், விடுதலையின்றியும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது தந்தையர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி, அவர்களின் பிள்ளைகள் வவுனியா செட்டிகுளத்தில் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடு

பக்.24

## மனித உரிமை காக்க புதிய அரசியல் யாப்பு

### நியூயோர்க்கில் கூறினார் மைத்திரி



நியூயோர்க், செப். 29
புதிய அரசியல் யாப்பை நாட்டுக்கு அறிமுகப்படுத்தி நாட்டின் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
ஐ.நா சபையின் 70 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொட ரில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி, நோன்மதி தினமான நேற்றுமுன்தினம் நியூயோர்க் நகரில் உள்ள பௌத்த விகாரைக்குச் சென்று சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டதன் பின்னர், அங்கு வருகை தந்திருந்த இலங்கை மக்களிடம் உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பக்.24

## ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கை அடுத்த வாரம் சபையில்

கொழும்பு, செப். 29
ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை அடுத்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அரசு திட்டமிட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான முன்னள் நீதிபதி நிஷங்க உடலகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் காணாமற்போனவர்களை கண்டறிவதற்கான முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கைகளே இவ்வாறு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பக்.24

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இடைவிலகல் யாழில் குறைவடைகிறது

## யாழ்.மாவட்டச் செயலக புள்ளி விவரங்கள் கூறுகின்றன

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்.மாவட்டத்தில் பாடசாலையிலிருந்து சிறுவர்கள் இடைவிலகுவது மற்றும் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது என்பன குறைவடைந்து வருகின்றன என்று யாழ்.மாவட்டச் செயலக புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2010 ஆம் ஆண்டு 349 ஆகக் காணப்பட்ட பாடசாலை இடைவிலகல், இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையில் 39 ஆகக் காணப்படுகின்றது. சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் 2010 ஆம் ஆண்டு 83 ஆகக் காணப்பட்ட அதேவேளை, இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையில் 13 ஆகக் காணப்படுகின்றது.**

2010 ஆம் ஆண்டு 349 ஆகக் காணப்பட்ட பாடசாலை இடைவிலகல், 2011 ஆம் ஆண்டு 160 ஆகக் குறைவடைந்தது. 2012 ஆம் ஆண்டு 519 ஆக சடுதியாக அதிகரித்தது. 2013 ஆம் ஆண்டு 123 ஆகக் குறைவடைந்து 2014 ஆம் ஆண்டு மீண்டும் 196 ஆக அதிகரித்தது. ஆயினும் இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையில் 39 பேரே பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர்.

இது போன்று சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதலும், 2010 ஆம் ஆண்டு 83 ஆகக் காணப்பட்டு, 2011 ஆம் ஆண்டு 57 ஆக குறைவடைந்தது. 2012 ஆம் ஆண்டு 120 ஆக அதிகரித்தது. 2013 ஆம் ஆண்டு 54 ஆக மீளவும் குறைவடைந்தது. 2014 ஆம் ஆண்டு 50 ஆகக் குறைவடைந்து, இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையில் 13 ஆகக் காணப்படுகின்றது.

தொடர்ச்சியான விழிப்புணர்வு நடவடிக்கைகளின் காரணமாகவே, பாடசாலை சிறுவர்களின் இடை விலகல் மற்றும் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதல் குறைவடைந்து செல்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## சிறுவர், பெண்கள் வன்முறைக்கு எதிராக நடைபயணம்

சிறுவர் பிரச்சினை மற்றும் பெண்கள் வன்முறைக்கு எதிராக யாழ். நகரப்பகுதியில் நடைபயணம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது என தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் என்.இன்பம் தெரிவித்தார்.

ஒக்ரோபர் 1 ஆம் திகதி சர்வதேச சிறுவர் தினம் நாடளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் தேசிய மீனவர் ஒத்து ழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த நடைபயணம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது. இந்த நடைபயணம் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

இதுகுறித்து அவர் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நடைபயணம் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி யாழ். மாவட்ட செயலகத்தில் நிறைவடையவுள்ளது. நடை பயணத்தின் நிறைவில் சிறுவர் பிரச்சினைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரி யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகனிடம் மனு ஒன்று கையளிக்கப்படவுள்ளது. – என்றார். (ற-106)

## மாணவனை காணவில்லை என முறைப்பாடு

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய பாடசாலை மாணவனை காணவில்லை என பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள் ளது.

நேற்றுமுன்தினம் வீட்டில் இருந்து ரியூசனுக்காக சென்றவர் திரும்ப வில்லை என்றும் குறித்த மாணவனின் தாய் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற- ரி3)

# சிறுவர் துஷ்பிரயோகத்தை எதிர்த்து மாற்றுத் திறனாளிகள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, செப்.29

பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு நீதி வேண்டுமெனக் கோரி விசேட தேவையுடையோர் நேற்றுமுன் தினம் வவுணதீவில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

அண்மையில் பாலியல் துஷ்பிர யோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட கொட்டதெனியாவ சிறுமி மற்றும் யாழ்.புங்குடுதீவில் படுகொலை செய் யப்பட்ட மாணவி ஆகிய சம்பவங் களின் சூத்திரதாரிகளுக்கு தூக்கத் தண்டனை வழங்க வேண்டும் என்று இந்த ஆர்ப்பாட்டத்தின் போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

வாழ்வகம் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி வவுணதீவு சந்தியிலிருந்து ஆரம்பமாகி வவுண தீவு பிரதேச செயலகம் வரை சென்றதுடன் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரனிடம் மனுவும் கையளிக்கப்பட்டது. (ற)



## பருத்தித்துறை– வவுனியாவுக்கு புதிய பஸ் சேவை

மாங்குளம் செப்.29

பருத்தித்துறையிலிருந்து வவுனியா வரையான பஸ் சேவை ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடைபெறவுள்ளது என்று பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச் சபை முகாமையாளர் கந்தசாமி தெரிவித்துள்ளார். இச் சேவையானது பருத்தித்துறையிலி ருந்து பிற்பகல் 3மணிக்கு புறப்பட்டு வவுனியாவுக்குச் சென்று, பின்னர் வவுனியாவிலிருந்து இரவு 7மணிக்கு புறப்பட்டு பருத்தித்துறைக்கு இரவு 10மணிக்குத் திரும்பும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (422)

## கலாசாலை இறுதிப் பரீட்சைக்கு தோற்றாதோர் பதியலாம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றமுடியாது போனவர்கள், இறுதிப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள், நூனசித்தி அடைந்தவர்கள் தமது விவரங்களை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பதிவு செய்யுமாறு ஆசிரிய கலாசாலையின் அதிபர் அறிவித்துள்ளார்.

ஆசிரிய கலாசாலையில் இரண்டு வருடப் பயிற்சியை நிறைவு செய்து இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தவர்களுக்கே "பயிற்றப்பட்ட ஆசிரியர்" சான்றிதழ் வழங்கி இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3:II க்கு உள்ளீர்ப்புச் செய்யப் பட்டு அதற்கான சம்பளத்திட்டத்தின் பிரகாரம் ஊதியம் வழங்கப்படும். அந்த வகையில் பயிற்சியை நிறைவு செய்யாத ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் கல்வி அமைச்சு விவரங்களைத் திரட்டி வருகின்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சிபெற்று இறுதிப்பரீட்சைக்கு தோற்றத் தவறியவர்கள், பரீட்சையில் சித்தியடையாதவர்கள், நூனசித்தி அடைந்தவர்கள் தாம் பயிற்சி பெற்ற கல்வியாண்டு, பயின்ற பாடநெறி உள்ளிட்ட விவரங்களை கலாசாலை கடமை நேரத்தில் நேரிலோ 021 2230323 இலக்க தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-11)

# திடீர் போக்குவரத்துப் பரிசோதனைகள் சாதாரண பொதுமக்களுக்கு மட்டுமா?

## அரச, படையினர், பொலிஸ் வாகனங்களை கண்டுகொள்வதில்லை என மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், செப்.29

வடமாகாணத்தில் தற்போது மேற்கொள்ளப்படும் திடீர் போக்கு வரத்துப் பரிசோதனைகள் சாதாரண பொதுமக்களுக்கு மட்டுமா? எனக் கேள்வி எழுப்பியுள்ள பொதுமக்கள், அரச பஸ்கள், படையினர் மற்றும் பொலிஸாருக்கு அவை பொருந்தாதா? என்றும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து அதிகாரி மதிவண்ணன், பாதுகாப்புப் படையினரின் வாகனங்கள் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளும் அதிகாரம் எமக்குக் கிடையாது பொலிஸ் திணைக்கள வாகனங்களைப் பார்வையிட முடியும். – என்று தெரிவித்தார்.

வடபகுதியின் பல பகுதிகளிலும் இரவு, பகல் வேறுபாடுகள் இன்றி போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளும் போக்குவரத்து பொலிஸாரும் இணைந்து வாகனங்களின் தரம், இயந்திரநிலை, சில்லுறை, வேகக்கட்டுப்பாடு, சமிக்ஞைகள், புகைத்தல் நிலைமை என அனைத்தும் பரிசோதனைக்கு உட்படுத்தி சட்ட நடவடிக்கை மேற்கொள்கின்றனர். இவை வரவேற்கத்தக்க ஓர் ஆக்கபூர்வ செயற்பாடு எனக் குறிப்பிட்டுள்ள பொதுமக்கள், இது தொடர்பில் சில விமர் சனங்களையும் தெரிவித்துள்ளனர்.

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த சாரதியான ரவீந்திரன் இது குறித்துக் கூறுகையில்,

நாங்கள் சாரதியாகவே பணிபுரிகின்றோம். வாகன உரிமையாளர்கள் வேறு நபராகவே இருக்கின்றனர். ஆயினும் வாகனத்தின் தரம் தொடர்பான சட்ட நடவடிக்கைகளின்போது எமது சாரதி அனுமதிப் பத்திரமே சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றது. அது சட்டத்துக்கு உட்பட்ட செயல் என்பதால் அதனை ஏற்றுக் கொள்கின்றோம். ஆயினும் இ.போ.ச. பஸ் சாரதிகள் அனுமதிப் பத்திரம் மற்றும் ஆவணங்கள் எதுவுமின்றியே பயணிக்கின்றனர். அது எவ்வாறு என்பது எமக்குப் புரியவில்லை. எந்த இ.போ.ச. பஸ்ஸை மறித்து சோதனையிட்டாலும் அவர்களிடம் அனுமதி மற்றும் காப்புறுதி அனுமதி என்பவற்றின் மூலப்பிரதியோ அன்றி நிழற்பிரதி கூடக் கிடையாது. இவற்றையும் கருத்தில்கொள்ள வேண்டும். – என்று தெரிவித்தார்.

மட்டுவிலைச் சேர்ந்த சோ.இராதாகிருஷ்ணன் எனும் சாரதி தெரிவிக்கையில்,

வடபகுதியில் அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பயணிக்கும் படையினர் மற்றும் பொலிஸாரின் வாகனங்களும் கணிசமான அளவு பாவனையில் உள்ளன. பொதுமக்களின் வாகனங்களைத் துருவித் துருவி ஆராயும் அரச அதிகாரிகள் இவர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க துணிந்து முன்வருகின்றார்கள் இல்லை என்று குறிப்பிட்டார். குறித்த அதிகாரிகளுக்கு படையினர் மற்றும் பொலிஸாரின் வாகனங்களைச் சோதனை இடும் அதிகாரம் உள்ளதா? என்றும் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து அதிகாரி மதிவண்ணனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இ.போ.ச. பஸ்கள் வரிமற்றும் காப்புறுதிப் பத்திரங்களை எடுத்துச் செல்வதில்லை. எனினும் இவற்றை சாலை முகாமையாளர்கள் பெற்றுக் கொள்கின்றனர். இருப்பினும் இவற்றின் நிழற்படப் பிரதிகளைக் கண்டிப்பாகச் சாரதிகள் வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளோம்.

அதேவேளை பாதுகாப்புப் படையினரின் வாகனங்கள் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளும் அதிகாரம் எமக்குக் கிடையாது. பொலிஸ் திணைக்கள வாகனங்களைப் பார்வையிட முடியும். அவை தொடர்பில் பரிசோதனைகள் இடம்பெறுவது வழமை. இருப்பினும் இந்த ஆண்டு இதுவரை எவ்வித சோதனைகளும் இடம் பெறவில்லை. – என்றார். (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசம்பாவிதங்களில் ஈடுபடும் அனைவரையும் கைது செய்க

## சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பொலிஸாருக்கு உத்தரவு

சாவகச்சேரி, செப்.29
சாவகச்சேரி நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அசம்பாவிதங்களில் ஈடுபடும் அனைவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சாவகச்சேரி, கொடிகாமம் பிரிவுகளின் பொலிஸ் உத்தியோத்தர்களுடன் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதியில் அசம்பாவிதங்களில் ஈடுபடும் மாணவர்கள், இளைஞர்கள் என அனைவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு அவர் பொலிஸாருக்கு இதன்போது பணித்துள்ளார்.

மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்கள், மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள், வீதிகளில் பெண்களுடன் சேஷ்டையில் ஈடுபடுபவர்கள் போன்றோரையும் உடனடியாகக் கைது செய்யுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவிகளை அச்சுறுத்தும் வகையில் வீதிகளில் கூட்டமாக நிற்போரையும், மோட்டார் சைக்கிள்களில் திரியும் இளைஞர்களையும் உடன் கைதுசெய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ள நீதிபதி, தினமும் மாலை 4 மணி முதல் 6 மணிவரை பொலிஸார் இது குறித்துக் கண்காணிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இளைஞர்களிடையே போதைப் பொருள் பாவனையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. பொலிஸார் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்ற போதும், அவை குறைவடைந்து செல்கின்றது என்று கருத முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்தநிலையில் குற்றச் செயல்களைத் தடுக்கும் வகையில் நீதிமன்றங்கள் பொலிஸாருக்குகடும்பணிப்புரைகளை விடுத்து வருகின்றன. அண்மையில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனும் பொலிஸாருக்கு உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார். குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் காணும் இடத்தில் கைது செய்து நீதிமன்றில் முற் படுத்துமாறு அவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

அண்மைக் காலமாக நீதிமன்றங்கள் எடுத்துவரும். நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. (ற)

## 28 கசிப்புப் போத்தல்: ஒரு வருட சிறையும் ஒன்றேகால் லட்சம் அபராதமும்

யாழ்ப்பாணம், செப். 29
28 போத்தல் கசிப்புப் போத்தல்களுடன் கைதானவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதித்தது நீதிமன்று. தவிர ஒன்றேகால் லட்சம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது.

கிளிநொச்சி குமாரசாமிபுரம் பகுதியில் குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் அவ்வாறு கைது செய்யப்படும்போது அவரிடமிருந்து 28 கசிப்புப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவித்த பொலிஸார் அது தொடர்பில் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர்.

நீதிமன்றில் சந்தேக நபர் தன்மீதான குற்றத்தை ஒப்புப் கொண்டதனையடுத்து அவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தவிர ஒன்றேகால் லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. குறித்த அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் மேலும் 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் உத்தரவிட்டார். (ற-4,ரி3)

## பாலியல் குற்றவாளிகளுக்கு தூக்கு: வலியுறுத்தி கையெழுத்து வேட்டை

### வவுனியா பஸ் நிலையத்தில் நேற்று முன்னெடுப்பு



வவுனியா, செப்.29
பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் வன்புணர்வு படுகொலைகளைக் கண்டித்தும், அதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனையை நிறைவேற்றக் கோரியும் நேற்று வவுனியா மத்திய பஸ் நிலையத்தில் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய இணைந்த தொழிற் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் பெருமளவானவர்கள் கையெழுத்திட்டனர்.

அண்மையில் இடம்பெற்ற புங்குடுதீவு பாடசாலை மாணவி மற்றும் கொட்டதெனியா 5 வயதுச் சிறுமி ஆகியோர் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இவற்றில் தொடர்புடைய குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது என்று ஏற்பாட்டார்கள் தெரிவித்தனர். (ற)

## திடீர் மழையால் மரக்கறி, கடலுணவு விலைகளில் சிறு மாற்றம்

யாழ்பாணம், செப் .29
யாழ்பாணத்தில் பெய்த திடீர் மழை காரணமாக மரக்கறி மற்றும் மீன் விலைகளில் சிறிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வட மாகாண கடற்தொழில் இணைய செயலாளர் சுப்பிரமணியம்,

மீனவர்கள் வழமை போல தொழிலுக்குச் செல்கின்றனர். அதனால் கடலுணவு விலையில் பெரிய மாற்றங்கள் ஏற்படாது. – என்று தெரிவித்தார்.

அதேவேளை, திடீர் மழை பெரிய அளவு பாதிப்பை ஏற்படுத்த வில்லை என மரக்கறி வியாபாரிகள் தெரிவித்தனர்.

எனினும் மட்டுவில் பகுதியில் வெங்காய பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தப் பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது என்றும், மழை தொடருமானால் வெங் காயச் செய்கை அழிவடைய வாய்ப்புள்ளது என்றும் அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.(ற-ரி4)

## நகைகளை பறிகொடுத்தோர் முறைப்பாடு செய்யலாம்

யாழ்ப்பாணம், செப்.29
வல்லிர ஆழ்வார் ஆலயத் திருவிழாவில் யாரேனும் அடியார்கள் நகைகளைப் பறிகொடுத்திருந்தால் அது குறித்துப் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் முறையிடுமாறு பருத்தித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஆலயத் திருவிழாவில் பலர் நகைகளைப் பறிகொடுத்துள்ளனர் என்பது தற்போது தெரியவந்துள்ளது. பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் நகைகள் பல மீட்கப்பட்டுள்ளனஹையெஸ் வான் ஒன்றில் தப்பிச் செல்ல முற்பட்ட கும்பல் ஒன்றிடம் இருந்து 27 சங்கிலிகளும், 4 பென்ரன்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆயினும் எமக்கு 10 முறைப்பாடுகள் மட்டுமே கிடைத்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

களவுச் சம்பவங்கள் இடம்பெற்றால் அது குறித்துப் பொலிஸாரிடம் உடனடியாக முறையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ள அவர், ஆலயத்திருவிழாவில் யாரேனும் நகைகளைப் பறிகொடுத்திருந்தால் அது குறித் துப் பருத்தித்துறைப் பொலிஸாரி டம் முறைப்பாடு செய்யுமாறும் தெரிவித்துள்ளார். (ற-422)

## அமெரிக்கத் தீர்மானத்தைக் கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, செப். 29
இனஅழிப்புக்கு சர்வதேச குற்றவியல் விசாரணையை மறுத்து உள்நாட்டு விசாரணையை முன்னிறுத்தும் அமெரிக்கத் தீர்மானத்தைக் கண்டித்தும், சர்வதேச குற்றவியல் விசாரணைக்கான கோரிக்கையை முன்வைத்தும், சென்னையிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்தின் முன்பாக நேற்று பிரமாண்டமான கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் போது அமெரிக்கா மற்றும் இலங்கையின் தேசியக் கொடிகள் எரிக்கப்பட்டதுடன், ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆகியோரது உருவப் பொம்மைகளும் இதன் போது எரிக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தீவில் தமிழீழ தேசத்துக்கு எதிராக சிறிலங்காதேசம் நடத்தியது, நடத்திக் கொண்டு இருக்கும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டுமென்று பாதிக்கப்பட்ட தமிழர்கள் போராடிக் கொண்டிருக்கும் போது, அதை மறுத்து கொலைசெய்த இலங்கை இனவெறி அரசே தான் செய்த கொலையை விசாரிக்கும் உள்நாட்டு விசாரணை என்ற அயோக்கியத்தனத்தை இலங்கை மற்றும் இந்தியாவுடன் சேர்ந்து அமெரிக்கா தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜெனிவா மனித உரிமை கூட்டத் தொடரில் தீர்மானமாக கொண்டு வந்திருக்கிறது.



மேலும் இலங்கைக்கு சர்வதேச நிதிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் கொண்டு வரப்பட்டிருக்கும் அமெரிக்காவின் தீர்மானத்தைக் கண்டிக்கின்றோம். இவ்வாறு மே பதினேழு இயக்கம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகள், இயக்கங்களும் இணைந்து நேற்று நடத்திய போராட்டத்தின் போது தெரிவித்தன.

குறித்த அமைப்புக்கள் ஆறு விடயங்களை நேற்றைய போராட்டத்தின் போது முன்வைத்தன.

இலங்கைத் தீவில் 1948 ஆம் ஆண்டு சிறிலங்கா தேசம் விடுதலையடைந்த நாள் முதல், தமிழீழ தேசம் மீது சிறிலங்கா தேசம் திட்டமிட்டு நடத்துவது இன அழிப்பே என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும், இன அழிப்புக்கு சர்வதேச குற்றவியல் விசாரணையை மறுத்து, உள்நாட்டு விசாரணையை முன்னிறுத்தும் அமெரிக்க தீர்மானத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம், இன அழிப்புக்கு சர்வதேச குற்றவியல் விசாரணையே தேவை,

இன அழிப்புக்கு உள்ளான தமிழீழ தேசத்தின் விடுதலைக்கு பொது வாக்கெடுப்பே தீர்வு, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை அனைத்து நாடுகளும் நீக்க வேண்டும், தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை அரசு விசாரிப்பது என்பது, மீண்டும் தமிழர்களை இன அழிப்பு செய்வதற்கான நடவடிக்கை – போன்ற விடயங்களே முன்வைக்கப்பட்டன. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுக்கரை குளத்தின் வாய்க்கால்கள் சேதம்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

மன்னார், செப்.29
மன்னார் முருங்கன் கட்டுக்கரை குளத்திற்கு நீரை கொண்டு செல்லும் பிரதான வாய்க்கால்கள் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளது என்றும் அதனால் கட்டுக்கரை குளத்துக்கு அறுவியாற்று நீரை கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முருங்கன் 13 ஆம் கட்டை வாய்க்கால் தலைவர் செபஸ்தியாம்பிள்ளை பூபாலன் இதுகுறித்துத் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கின் காரணமாக கட்டுக்கரை குளத்திற்கு நீரைக் கொண்டு செல்லும் குஞ்சுக்குளம் தேக்கத்து அணைக்கட்டுக்கள் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளன. குறித்த அணைக்கட்டு சேதத்துக்கு உள்ளாகியுள்ளதால் குஞ்சுக்குளம் பாலமும் சேதமாகியுள்ளது.



கட்டுக்கரை குளத்தை நம்பி மன்னார் மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் தற்போது குறித்த அணைக்கட்டுகள் உடைந்துள்ளமையால் நீரை கட்டுக்கரை குளத்துக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த அணைக்கட்டுகளுக்கு மன்னார் மாவட்ட நீர்ப்பாசன திணைக்களம் பொறுப்பாக உள்ள போதும் அத்திணைக்கள அதிகாரிகள் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாத நிலையில் அசமந்த போக்குடன் செயற்பட்டு வருகின்றனர்.

கட்டுக்கரை குளத்திற்குச் செல்ல வேண்டிய நீர் சேதத்துக்கு உள்ளாகியுள்ள அணைக்கட்டினூடாக ஆற்று நீருடன் கலக்கின்றது. இது மட்டுமின்றி குறித்த பாலம் பலத்த சேதத்துக்கு உள்ளாகும் நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது.

அதிகாரிகள் இது விடயத்தில் தலையிட்டு குறித்த அணைக்கட்டுகளை சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.

(ற-56)

## பணி நிரந்தரம் தொடர்பில் கலந்துரையாடல்

வலி.வடக்கு, செப்.29
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 33 ஆண், பெண் தொழிலாளர்கள் தமது பதவியை நிரந்தரமாக்குவது தொடர்பில் அண்மையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளனர்.

சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றும் இன்னும் சுமார் 800க்கும் மேற்பட்டவர்கள் நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும், அந்தப் பட்டியலில் இவர்களுடைய பெயர்களும் இடம்பெற்று இருக்கலாம் எனவும் அதன்போது இவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படலாம் எனவும் அதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-86)

## வல்லிபுர ஆலய சூழலில் விற்கப்பட்ட 5 ஆயிரம் புகைபொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், செப். 29
வல்லிபுர ஆழ்வார் திருவிழாவின் போது ஆலய சூழலில் அமைந்திருந்த 5 உணவு விற்பனை நிலையகங்களில் விற்கப்பட்ட புகை பொருள்கள் சுகாதார அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிகரெட் உட்பட 5 ஆயிரம் புகை பொருள்கள் இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன.

பொதுவாகவே ஆலய சுற்றாடலில் புகை பொருள்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடையை வல்லிபுர ஆழ்வார் கோயிலிலும் நிர்வாகத்தினர் கடுமையாக நடைமுறைப்படுத்தியிருந்தனர். சுகாதாரப் பரிசோதனைகளும் கடுமையாக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் ஆலய சுற்றாடலில் இயங்கி வந்த உணவு விற்பனை நிலையங்கள் 5 இலும் புகை பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று கிடைத்த தகவலை அடுத்து தேர்த்திருவிழாவன்று களமிறங்கிய சுகாதாரப் பகுதியினர், குறித்த கடைகளில் இருந்து புகை பொருள்களைக் கைப்பற்றினர். அவற்றில் 4 ஆயிரத்துக்கு அதிகமானவை சிகரெட்டுக்கள் என்றும், பீடி போன்ற புகை பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றிய புகை பொருள்களை அந்தந்த இடங்களிலேயே அழித்தனர்.

இது தவிர, தீர்த்தத் திருவிழாவான நேற்றுமுன்தினம் வண்டிலில் காரம் சுண்டல் விற்பனை செய்த ஒருவரது உற்பத்திகள் புளித்துப் போய் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்தமை கண்டறியப்பட்டது. அதையடுத்து 50 கிலோ கிராம் காரம் சுண்டல் கைப்பற்றப்பட்டு சுகாதாரப் பகுதியினரால் அழிக்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-4)

## ஆசிரியர் கொலைச் சம்பவம் காடைத்தனமான செயற்பாடு

### இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம் செப். 29
யாழ்.நகரில் கடந்த வாரம் காடைத்தனமான தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியையின் கணவர் ஒருவர் அநியாயமாக உயிரிழந்த சம்பவத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் மிகக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது ஒரு காடைத்தனமான செயல் என்றும், இது தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதுமணத் தம்பதிகளாய் குடும்ப வாழ்க்கையில் இணைந்திருந்த சக ஆசிரியர்களுக்கு நடந்துள்ள இந்தக் கொடூரமான சம்பவமானது, ஜனநாயகம் மலர்ந்துள்ளது என்று அரசு தம்பட்டம் அடித்துக்கொள்ளும் இந்த வேளையில் – மக்கள் நிம்மதியாக வாழமுடியாத சூழலே காணப்படுகின்றது என்பதைக் காட்டுகின்றது. வயதைக் கூட மதிப்பிடாமல் தெருவில் கூடும் காடையர்களின் அட்டகாசங்களால் ஆசிரியர்கள் கூட நையப்புடைக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு, தாக்கப்பட்டு, கொலை செய்யப்படுகின்றார்கள் என்றால் – பொலிஸாரின் நடவடிக்கைகளிலும் சந்தேகம் ஏற்படுகின்றது.

ரவுடிகளை அடக்கி யாழ்.குடாநாட்டில் அமைதியான சூழலை ஏற்படுத்த வேண்டும் என முனையும் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் முயற்சிக்கு வேண்டுமென்றே முட்டுக்கட்டை போடுவதற்காக சில தீயசக்திகளுடன் இணைந்து பொலிஸாரும் உடந்தையாக செயற்படுகிறார்களா? என்னும் சந்தேகம் எழுகின்றது.

இப்படியான காடைத்தனங்களுக்கு இளைஞர்கள் மத்தியில் நிலவும் போதைப்பழக்கமும் முக்கிய காரணமாகின்றது. எனவே இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கும் சம்பத்தப்பட்ட தரப்பு முயலவேண்டும். பொலிஸாருக்கு மேற்படி அசம்பாவிதங்கள் தொடர்பாக தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றபோதும், அதனை அவர்கள் விரைந்து செயற்படாத தன்மைகள் பாரதூரமான விளைவை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். யாராக இருப்பினும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு நீதித்துறை பாரபட்சம் காட்டாமல் தண்டனை வழங்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு பாதிக்கப்பட்ட யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை யின் ஆசிரியைக்கும், அவரது குடும்பத்தினருக்கும், பாடசாலை சமூகத்துக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். – என்றுள்ளது. (ற-4)

## வல்லிபுரத்தில் கைக்குண்டு மீட்பு



நெல்லியடி, செப்.29
வல்லிபுரம் பகுதியில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் பருத்தித்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வல்லிபுர ஆழ்வார் தீர்த்த மாடிய கடற்கரையிலே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து மணலில் இருந்து மீட்கப்பட்ட குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் நேற்று செயலிழக்கச் செய்யப்பட்டது. இந்தப் பகுதியில் முன்னர் இராணுவமுகாம் அமைந்திருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-108)

# புனரமைப்பு பணிகள் பூர்த்தியாக்கப்படாத நிலையில் அராலி செட்டியார் மடம் - அராலி இந்துக் கல்லூரி வீதி

## அடுத்த கட்ட நிதியொதுக்கீட்டில் பூர்த்தியாகும் என பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.29
புனரமைப்பு வேலைகள் முழுமையாக பூர்தி செய்யப்படாது காணப்படும் அராலி வடக்கு கிராமத்தின் செட்டியார் மடத்தில் இருந்து அராலி இந்து கல்லூரிக்கு செல்லும் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் அந்த வீதியில் திருத்தப் பணிகள் அடுத்த கட்ட நிதி ஒதுக்கீட்டில் முழுமையாக்கப்படும் என்று தெரிவித்தார் சங்கானை பிரதேச செயலாளர் சோதிநாதன்.

அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா நிதி மூலம் வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அராலி வடக்கு ஜே/164 கிராம சேவையாளர் பிரிவில் செட்டியார் மடத்தில் இருந்து அராலி இந்து கல்லூரிக்கு செல்லும் வீதியைப் புனரமைப்பு செய்வது என்று வலி.மேற்கு பிரதேச சபையினருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான முதலாவது கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது குறித்த நிதி இரண்டு வீதிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், குறித்த இரு வீதிகளின் புனரமைப்புப் பணிகளும் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்துடன் குறித்த வீதிகளின் புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்ட பணம், ஒப்பந்தகாலம் என்பவற்றை உள்ளடக்கிய பெயர்பலகை[illegible] களில் காட்சிப்படுத்தப[illegible] என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வலி.மேற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது:-

கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தில் ஒரு கிராமத்தில் இரண்டு வேலைத்திட்டங்கள் செய்யப்பட வேண்டும். மக்கள் சம்மதித்தால் ஒரு திட்டத்தை முழுமையாக மேற்கொள்ளலாம், இல்லை என்றால் இரண்டு வேலைகள் செய்யவேண்டும். அராலியில் உள்ள இரண்டு வீதிகளும் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை மக்களால் விடுக்கப்பட்டிருந்தது.

அதையடுத்து குறித்த வீதிகள் இரண்டும் ஒரு வீதிக்கு 5 லட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டு அந்த வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டன. [illegible] பட்டிருந்தது. விரைவில் பெயர் பலகையும் நடப்படும். – என்றார்.

அதேவேளை, இது தொடர்பில் பிரதேச சபைச் செயலரைத் கேட்ட போது:-

வீதிகள் இரண்டுக்கும் ஒரு வீதிக்கு 4 லட்சம் ரூபா வீதம் இரண்டு வீதிகளும் திருத்தம் செய்யப்பட்டது. அதற்கான பெயர் பலகைகள் விரைவில் நடப்படும். – என்று தெரிவித்தார்.

அப்படியாயின் மிகுதி இரண்டு லட்சம் ரூபாவுக்கு என்ன நடந்தது? என்று அவரிடம் கேட்டபோது அது குறித்துத் தனக்கு எதுவும் தெரியாது என்று பதிலளித்தார்.

இது தொடர்பில் பிரதேச செயலாளரைக் கேட்டபோது:-

கிராமத்துக்கு என ஒதுக்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபாவும் மக்களுடன் ஆலோசித்த பின்னரே அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டன.

அதில் அராலியில் உள்ள ஒரு வீதி மக்கள் பங்களிப்புடன் செய்து முடிக்கப்பட்டது. மற்றையது மக்களின் பங்களிப்பு போதாமையாலும் நிதி பற்றாக் குறையாலும் பூர்த்தி செய்ய முடியாது போனது. ஆயினும் அந்த வீதியும் அடுத்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைக்கப்படும். வீதிப்புனரமைப்புக்கு என ஒதுக்கிய 1 மில்லியனில் இரண்டு லட்சம் ரூபா அராலி வடக்கை அண்மித்து இருக்கும் துருசு ஒன்றின் திருத்த வேலைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த துருசைப் புனரமைத்தால்தான் போக்குவரத்து செய்யமுடியும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அதையடுத்தே குறித்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.- என்றார்.

(ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வேலைக்காகக் காத்திருந்து வாய்ப்பை இழக்கும் பட்டதாரிகள்

## வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 29

வேலையில்லாத பட்டதாரிகள், அரச வேலையை மாத்திரம் எதிர்பார்க்கின்றனர். அதைவிட பல மடங்கு சம்பளம் கிடைக்கும் தனியார்துறை வேலைவாய்ப்பை அவர்கள் இழந்து கொண்டிருக்கின்றார்கள். -இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித் தார்.

'வேலையில்லாப் பட்டதாரிகள் தமக்கு வேலை வேண்டும் என்று நச்சரித்துக் கொண்டிருக்கின்றார்கள்.அரசசம்பளத்திலும் பார்க்கப் பல மடங்கு கூடிய வருமானத்தைத் தரும் தனியார் நிறுவனங்களில் தரப்படும் வேலைகளை எமது இளைஞர்கள் – யுவதிகள் உதாசீனம் செய்கின்றார்கள். ஓய்வூதியம் கிடைக்கு மாம். 40 – 50 வருடங்களின் பின்னர் கிடைக்கும் ஓய்வூதியத்துக்காக வலிய வரும் சீதேவியை உதாசீனம் செய்கின்றார்கள்' என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

வடமாகாண சுற்றுலாத்துறை மாநாடு கிறீன் கிறாஸ் விடுதியில் நேற்று இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

### அரச உத்தியோகத்தில் விடாப்பிடி

எமது சுற்றுலா அதிகார மையமானது யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து வெளிவரும் அல்லது வெளிவந்த பட்டதாரிகளுக்கு சுற்றுலா வேலை வாய்ப்புக்கள் பற்றியதும் – தேவையான திறன்கள் பற்றியதுமான கருத்தரங்குகளை பல்கலைக் கழகத்துடன் சேர்ந்து நடத்த முன்வர வேண்டும். பட்டதாரிகள் பலர் உண்ண உணவில்லையானாலும் அரச உத்தியோகமே வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது எனக்கு வியப்பைத் தருகின்றது.

அரச உத்தியோகங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. சிங்கள அலுவலர்களைத் தெற்கில் இருந்து அண்மையில் வடக்குக்கு அரசு அனுப்பியது நினைவிருக்கலாம். எப்பொழுது அவர்கள் இடத்துக்குத் தமிழ் மக்களை பதிலீடு செய்ய முன்வருவார்களோ தெரியாது. ஆனால் அரச சம்பளத்திலும் பல மடங்கு கூடிய வருமானத்தைத் தரும் தனியார் நிறுவனங்களில் வழங்கப்படும் வேலைவாய்ப்புக்களை எமது இளைஞர்கள் யுவதிகள் உதாசீனம் செய்கின்றார்கள். ஓய்வூதியம் கிடைக்குமாம். 40,50 வருடங்களின் பின்னர் கிடைக்கும் ஓய்வூதியத்துக்காக வலிய வரும் சிதேவியை உதாசீனம் செய்கின்றார்கள். ஓய்வூதியத் திட்டங்கள் பல இருக்கின்றன.

### வேலை செய்யாத வேலை

இன்று கூடிய் வருவாயைப் பெற்று இந்தத் திட்டங்களுக்கு மாதாந்தத் தொகையாகத் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தி வந்தால் உங்களுக்குக் கூடிய ஓய்வூதியத்தைப்பெறவாய்ப்பிருக்கிறது.ஆனால் எனது நண்பர் ஒருவர் கூறினார் – அதுவல்ல காரணம், வேலை ஏதும் செய்யாத வேலை வேண்டும் என்பதால்தான் எம்மவர் அரசு வேலைகளை நாடுகிறார்கள். அது சரியோ பிழையோ நானறியேன். ஆனால் வேலையற்ற பட்டதாரிகள் சுற்றுலாத் துறையில் போதிய வேலை வாய்ப்புக்களைப் பெறலாம் என்பதைக் கூறிவைக்கின்றேன்.

நான் அண்மையில் கொழும்பில் உள்ள ஒரு பெரிய விடுதியின் பிரதம சமையல்காரரைச் சந்தித்தேன். அவர் சுவிற்சர்லாந்து சென்று தமது படிப்பை முடித்துக் கொண்டு வந்தவர். சமையலில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். அவரது ஒரு மாதச் சம்பளம் சுமார் ஐந்து லட்சத்துக்குக் குறையாது என்று கேள்விப்பட்டேன்.

### படியையே பெறுகின்றார்கள்

என்னுடைய பால்யப் பருவத்தில் 'படி''படி' என்று பெற்றோர்கள் நச்சரிக்கும் போது கூறுவார்கள். 'நீ கிரிக்கெட் விளையாடி பரீட்சை யைக் கோட்டை விட்டாயானால் சமையல் காரனாகத்தான் போக வேண்டும்' என்று. இன்று கிரிக்கெட் விளை யாடுபவனும் லட்சங்களில் வரு மானம் பெறுகின்றான். சமையல் செய்பவனும் அவ்வாறே பெறுகின்றான். 'படி''படி' என்று படித்தவன் வெறும் 'படி'யையே பெற்றுக் கொண்டிருக்கின்றான் அடிப்படைச் சம்பளத்துடன்.

இதேபோலத்தான் இன்னொரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. என் தாயாரின் தங்கையார் சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இங்கிருந்து ஆஸ்திரேலியா சென்றார்கள். அவர் இருந்த வீட்டின் ஜன்னல்கள் தூசி படிந்து இருப்பதைக் கண்டு ஜனிடர் எனப்படும் வாயிலைச் சுத்தம் செய்யும் நபர் ஒருவரை தொலைபேசிப் புத்தகத்தின் அனுசரணையுடன் அழைத்திருந்தார்.

### மாற்றமடைகின்றது

அடுத்த நாள்காலை 9 மணிக்கு ஒரு விலையுயர்ந்த கார் வந்து நின்றதாம். சேர்ட், கோர்ட், டை எல்லாம் அணிந்த ஒருவர் இறங்கி வந்து தனது கார்ட்டைக் கொடுத்து விட்டு 'நான் ஜனிடர்' என்றாராம். இலங்கையில் இருந்து சென்ற என் சின்னமாவுக்கு ஒன்றும் புரியவில்லையாம். என்றாலும் 'சரி வேலை செய்யுங்கள்' என்றாராம். ஐந்து நிமிடங்களில் உடைமாற்றி வேலையில் ஈடுபட்டாராம். சரியாகப் 12 மணிக்கு சகலதும் துல்லியமாகச் சுத்தப்படுத்தப்பட்டு வீடு பளிச் சென்று இருந்ததாம். பில்லைக் கொடுத்தார். சின்னம்மாவுக்கு தலை சுற்றியதாம். டாக்டர் என்ற முறையில் இலங்கையில் சின்னம்மாவுக்குக் கிடைத்த மாதாந்தச் சம்பளத்தின் இருமடங்காக இருந்ததாம் அவரது கூலி. ஒருவாறு பணத்தைக் கட்டினார் சின்னம்மா. அதுமட்டுமல்ல, அன்று மாலை அவ்வூர் நகரபிதா கொடுத்த விருந்தில் மிக முக்கிய நபராக அந்த ஜனிடர் பங்கு பற்றினாராம்.

ஆகவே நாங்கள் பால்யப் பருவத்தில் நினைத்ததெல்லாம் தற்போது மாற்றமடைந்துள்ளதை நாங்கள் மனதில் இருத்த வேண்டும். அறுபது எழுபது வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் கிரிக்கெட் விளையாடுபவர் கையாலாகாதவர். சமையல்காரர் மிகக் குறைந்த தொழிலைச் செய்பவர்; ஜன்னல் கழுவுபவர் கடையிலும் கடையானவர். ஆனால் இன்று அவர்கள் யாவரும் சமூகத்தால் மிகவும் மதிக்கப்படுபவர்கள். காலம் மாறியுள்ளதை எமது மக்கள் உணர வேண்டும்.

### துப்பாக்கி ஏந்திய பெண்கள் இந்தத் தொழிலுக்கு ஏன் வரக்கூடாது ?

இதேபோன்றுதான் இன்று பெண்கள் சுற்றுலா விடுதிகளில் வேலை பெறுவதைத் தரக் குறைவாக நாம் எண்ணுகின்றோம். ஆனால் பெண்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரும் விதத்தில் அவர்களின் கடமை நேரங்கள், இருப்பிட வசதிகள் போன்றவை பாதுகாத்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பல பெண்கள் சேர்ந்து ஒரு நிறுவனத்தில் வேலை செய்வதால் அவர்களின் பாதுகாப்பு உறுதியாக்கப்படுகிறது. முன்னர்போல் நாங்கள் சிந்திக்கத் தேவையில்லை. இயக்கங்களில் போராடச் சென்ற எமது பெண்கள் ஏன் இப்பேர்ப்பட்ட தொழில்களில் தமது திறமைகளை வெளிக்காட்டக் கூடாது?

இன்னொன்றையும் நான் கூற வேண்டும். எமது சூழலில் பல கண்டனங்களுக்கு இலக்காகும் எமது இளைஞர், யுவதிகள் எமது சமூகத்தால் கண்டிக்கப்படும் தொழில்களையே வெளிநாடுகளில் இன்று செய்து இங்கு பணம் அனுப்புகின்றார்கள்.

### தொழிலுக்கான மதிப்பு

நான் புரூஸ்லெஸ் விமான நிலையத்தில் விமானத்துக்காகக் காத்து நிற்கும் போது என்னுடன் பக்கத்தில் இருந்து பேசியவர் அங்கு கழிப்பிடம் சுத்தம் செய்பவர். அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். வீடொன்றை அங்கு தவணை முறையில் வாங்கி இருந்தார். தனது குடும்பத்தினருக்கு எவ்வளவு பணம் மாதாமாதம் அனுப்புவார் என்பது பற்றி எல்லாம் பெருமையாகக் கூறிக்கொண்டிருந்தார்.

அவர் அங்கு செய்யும் வேலையை இங்கு செய்திருந்தால் அவரை அழ வைத்திருப்பார்கள் நம்மவர்கள். ஆனால் அவர் வேலை செய்யும் நாட்டில் தொழிலுக்குமதிப்புக் கொடுக்கின்றார்கள். ஒவ்வொரு தொழிலும் மதிப்பார்ந்த தொழிலே என்ற எண்ணம் அங்கு நிலை கொண்டுள்ளது.

### மேம்படுத்தலாம்

சுற்றுலாவில் பணத்தை முதலீடு செய்பவர்கள் தமது பணத்தையும் வருமானங்களையும் மேம்படுத்தவே நடவடிக்கை எடுப்பர். இது வணிகம் என்பதை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும். ஆனால் அவர்களின் வணிகம் பெருக, வளர அவர்கள் தமது நிறுவனங்களில் உள்ளவர்களை நல்ல விதத்தில் வைத்திருக்க வேண்டிய ஒரு கடப்பாட்டில் இருக்கின்றார்கள். இது எமக்கு நன்மை பயக்கும். உணவகத்தில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்கள் சிலரைத்தான் நாங்கள் பார்க்கின்றோம். இன்னும் பலர் வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது எமக்குத் தெரிவதில்லை.

லிகிதர்கள் மற்றும் பணிப்பெண்களைக் காணும் நாங்கள் உள்ளேயிருக்கும் முகாமையாளர், மேலாளர், கணக்காளர், சந்தைப்படுத்தும் அலுவலர்கள் போன்றோரைப் பார்ப்பதில்லை. மேலும் விளம்பரப்படுத்தும் முகவர் நிலையங்கள், கணக்காளர் நிலையங்கள், பொருள்களை விநியோகிப்பவர்கள், சந்தைப்படுத்துபவர்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் செய்பவர்கள் என்று பலரும் சுற்றுலா உணவகங்களுடன் தொடர்பு கொண்டிருப்பதை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சிறுகைத் தொழில்கள் செய்பவர்கள், குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் யாவருமே சுற்றுலாத் தொழிலால் தம்மை மேம்படுத்திக் கொள்ள முடியும் – என்றார். (ற–5,101)

# 'பட்ஜெட்' அலுவலகம் அமைக்க அரசு முடிவு

## நிதி அமைச்சர் தகவல்



கொழும்பு, செப்.29

இலங்கையில் முதல் தடவையாக வரவு–செலவுத் திட்ட அலுவலகமொன்று உருவாக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

வரவு –செலவுத் திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் இவ்வாறு வரவு –செலவுத் திட்ட அலுவலகமொன்று உருவாக்கப்பட உள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதி வரவு –செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இந்த முறை வரவு – செலவுத் திட்டம் அனைத்து மக்களுக்கும் நிவாரணங்களை வழங்கக் கூடிய வகையில் அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு – செலவுத் திட்ட அறிக்கையின் பரிந்துரைகள் யோசனைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் ஆலோசனைக்கு அமைய விசேட வரவு–செலவுத்திட்ட அலுவலக மொன்று நிறுவப்பட உள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (ற–வ)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நிதானத்துடன் செயற்படுவது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை என்பன சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். உடல் நலனில் அக்கறை செலுத்தத் தொடங்குவீர்கள்.

**இடபம்:** மனதில் புத்துணர்வும் சந்தோஷமும் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பெண்கள் சிக்கனத்தால் சேமிப்புக்கு வழி வகுப்பர். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் அவசியம்.

**மிதுனம்:** சாந்த குணத்துடன் பேசி நற்பெயர் காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்குப் புதியவர்களின் உதவி கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்கி மகிழ்வர். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** எந்தச் செயலையும் விழிப்புணர்வுடன் செய்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவில் ஈடுபட்டு மகிழ்வர். பெண்கள், பிள்ளைகளின் நலன் குறித்து ஆலோசிப்பர்.

**சிங்கம்:** நீதி, நேர்மைக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் தடை விலகி இலாபம் உயரும். பெண்கள் தாய் வீட்டாரின் அன்பைப் பெற முயற்சிப்பர். மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்

**கன்னி:** உறவினரின் செயற்பாட்டை விமர்சிப்பது கூடாது. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் வெளியூர்ப் பயணத்தால் வருமானம் காண்பர். மாணவர்கள் திட்டமிட்டுப் படிப்பர்.

**துலாம்:** முயற்சிக்குத் தகுந்த நற்பலன் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்தி அளிக்கும். குடும்பத்தில் சுப காரியம் பற்றிய பேச்சு நடக்கும். பெண்கள் உறவினர் மத்தியில் கௌரவம் பெறுவர்.

**விருச்சிகம்:** உற்சாகத்துடன் அன்றாடப் பணியில் ஈடுபடுவீர்கள். நீண்ட நாள் எதிர்பார்ப்பும் சுலபமாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் நல்ல வருமானம் கிடைக்கும். விருந்து உபசரிப்பில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**தனுசு:** நண்பர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம், கவனம். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். அரசியல்வாதிகள் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவர்.

**மகரம்:** சமூகத்தில் நல்லவர் எனப் பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு மகிழ்வர். மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து கல்வியில் சிறப்பர்.

**கும்பம்:** தனித்தன்மையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். உறவினர் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். அரசியல்வாதிகள் பிரயாணம் மூலம் இனிய அனுபவம் பெறுவர்.

**மீனம்:** இனிய பேச்சால் பிறரைக் கவர்ந்திழுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர். பெண்கள் ஆடம்பரமாகச் செலவழித்து மகிழ்வர்.



## ஒக்ரோபரில் திரைக்கு வருகிறது பத்து எண்றதுக்குள்ள

'ஐ' படத்துக்குப் பிறகு விக்ரம் நடித்து வரும் படம், பத்து எண்றதுக்குள்ள. இதில் விக்ரமுக்கு ஜோடியாக சமந்தா நடித்துள்ளார். கோலி சோடா படத்தை இயக்கிய விஜய் மில்டன் இயக்கும் இந்தப்படத்தை பாக்ஸ் ஸ்டார் ஸ்டூடியோஸ் மூலம் ஏ.ஆர். முருகதாஸ் தயாரிக்கிறார். அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்திள்ள இந்தப் படத்தின் டீசர் சமீபத்தில் வெளியானது. இது இரசிகர்களிடையே நல்ல வரவேற்புப் பெற்றது. இதையடுத்து விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிறு பாடல் காட்சி வெளியானது. இமான் இசையில் அமைந்த இந்த பாடல் இரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது. இந்த நிலையில் இந்தப் படத்தின் டிரைலரை செப்டம்பர் 30 ஆம் திகதி வெளியிட இருப்பதாக அறிவித்திருக்கின்றனர். இது இரசிகர்களுக்கு மீண்டும் விருந்தாக அமையும் என்று படக்குழுவினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்தப் படத்தை ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி வெளியிட இருக்கின்றனர்.























மனதை மயக்கும் மரத்தாலான குதிரைச் சிற்பங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயல்களின் மண்ணை அகற்ற கமநலத் திணைக்களம் தடை

## விவசாயிகளிடமிருந்து பொது அமைப்புக்கள் மண்ணைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியம்

கரணவாய், செப்.29

வடமராட்சிப் பகுதியிலுள்ள வயல்களில் மண் எடுப்பதற்கு கமநலத் திணைக்களம் தடை விதித்துள்ளதால் பொது அமைப்புக்கள் தமது தேவைகளுக்கு வேண்டிய மண்ணைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றன. வயல் நிலங்களை ஆழமாக்குதல் மற்றும் மண் போடுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கமநலத் திணைக்களம் தடைவிதித்துள்ள போதும் அது தொடர்பான அறிவித்தல்களை அதன் உரிமை யாளர்களுக்கு உரிய முறையில் தெரியப்படுத்தவில்லை. இந்தச் சூழ்நிலையில் கால போக நெற்செய்கைக்காக வயலை தயார்படுத்தலில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் வயலை ஆழமாக்கி, மண்ணை அகற்றி வருகின்றனர். வயலில் இருந்து அகற்றப்பட்ட மேலதிக மண்ணைப் பொது அமைப்புக்களின் தேவைகளுக்கு வழங்குவதற்கு வயல் உரிமையாளர்கள் முன்வந்துள்ள போதும், அதனை அகற்றுவதற்கும் கமநல சேவைகள் திணைக்களம் அனுமதி மறுத்து வருகின்றது. மழை ஆரம்பமாவதற்குள் அந்த மண்ணை அகற்றாவிட்டால் அவை மீண்டும் வயலுக்குள் சென்று மண் மேடாக மாறினால் நெற் செய்கை செய்யமுடியாத சூழ்நிலை ஏற்படவாய்ப்புள்ளதோடு, மீண்டும் அதனை அகற்ற ப்பெரும் தொகைப் பணம் செலவாகும் எனவும் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். இதேவேளை வடமராட்சிப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை மைதானப் புனரமைப்புக்கு துன்னாலைதெற்குப்பகுதியில்உள்ள வயலில் அகற்றப்பட்ட மண்ணை இலவசமாக வழங்குவதற்கு விவசாயி ஒருவர் முன்வந்து, அதற்குரிய சம்மதக் கடிதத்தையும் வழங்கியுள்ளார். இந்தச் சூழ்நிலையில் மண்ணைப் பாடசாலைத் தேவைக்காக ஏற்றிச் செல்ல கரவெட்டி கமநல திணைக்களத்திடம் தொடர்பு கொண்டபோது, அதற்கு தன்னால் அனுமதி வழங்க முடியாது எனக் கூறி, தலைமையகத்துடன் தொடர்புகொள்ளுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து பெரும் சிரமங்களுக்கு மத்தியில் யாழ். கமநல பணிப் பாளரிடம் தொடர்பு கொண்டு, மண்ணைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், அது கைகூடாத நிலையில் மைதா னப் புனரமைப்பில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாகப் பாடசாலைச் சமூகத்தினர் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஐ–108)

# நுணாவில் பகுதியில் வெடிக்காத கைக்குண்டு மீட்பு

சாவகச்சேரி,செப்.29

சாவகச்சேரி நுணாவில் மத்தி வனுவில் குளத்தில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் குளம் 30 வருடங்களுக்குப் பின்னர் மைத்திரியின் 100 நாள் வேலைத்திட்டத்திலான கிராமத்துக்கு ஒருமில்லியன்ரூபாவேலைத் திட்டத்தில் ஆழமாக்கப்பட்டது. நேற்று முன்தினம் மழை பெய்ததையடுத்து ஆழமாக்கப்பட்ட பகுதியின் கரையோரத்தில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று தெரிந்ததால் அந்தப்பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். அங்கு விரைந்த பொலிஸார் அந்தப் பகுதியில் பாதுகாப்பை ஏற்படுத்திவிட்டு குண்டு செயலி ழக்க வைக்கும் பிரிவினர் ஊடாக கைக் குண்டை அப்புறப்படுத்த அனுமதிக்குமாறு நீதிமன்றிடம்கோரியிருந்தனர். நீதிவான் அனுமதி வழங்கியதையடுத்து பொலிஸாரின் விசேட அதிரடிப் படையினர் அந்தக் கைக் குண்டை அப்புறப்படுத்தி மீட்டுச் சென்றுள்ளனர். (ஐ)

# மூதாட்டியின் சடலம் மீட்பு

மூதாட்டி ஒருவரின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட் டுள்ளது. அச்சுவேலி பத்தமேனி பகுதியில் தனிமையில் வசித்து வந்த சோமசுந்தரம் தவமணி ( வயது 74) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார். இவரது சடலம் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ–11)

# 13 கோடி ரூபா நஷ்ட ஈடு செலுத்திய கொக்காகோலா நிறுவனம்

## களனி கங்கைக்குக் கழிவுத் திரவங்களைத் திருப்பிய குற்றச்சாட்டு

கொழும்பு,செப்.29

களனி கங்கைக்குக் கழிவுத் திரவங்களைத் திருப்பிவிட்டிருந்த கொக்காகோலா நிறுவனம், சுமார் 13 கோடி ரூபாவை நஷ்ட ஈடாகச் செலுத்தியுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளரான பீ.டபிள்யூ. கே. பாலசூரிய தெரிவித்துள்ளார். கொக்காகோலா நிறுவனம் களனி கங்கைக்குக் கழிவுத் திரவங்களைத் திருப்பிவிட்டிருந்த குற்றச்சாட்டில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு கடந்த 24 ஆம் திகதி 13 கோடியே ஒரு இலட்சம் ரூபாவைச் செலுத்தியிருந்ததாக மேற்படி சபையின் கொழும்பின் பொது முகாமையாளர் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஆம் திகதி இடம்பெற்றிருந்த இந்தச் சம்பவத்தின் காரணமாக அம்பத்தலே மற்றும் பியகம நீர்ப்பாய்ச்சு நிலையங்களின் இயந்திர சாதனங்கள் மற்றும் தண்ணீரை வடிகட்டும் சாதனங்களை துப்புரவு செய்வதற்கு நாலரை இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டது. அத்துடன் பொதுமக்களுக்கு நீர் விநியோகத்தை மேற்கொள்ளஇயலாதுபோனதன் காரணமாக சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை ஈடுசெய்வதை முன்னிட்டு இந்த நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்த தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் காரணமாக கொழும்பு ஸ்ரீ ஜயவர்த்தனபுர , கோட்டை மற்றும் தெஹிவளை – கல்கிசை மாநகர சபைகளின் அதிகாரப் பிரதேசங்களுக்கு இரண்டு தினங்கள் வரையிலான காலத்துக்கு நீரை விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனிடையே தொழிற்சாலைகளினால் வெளியேற்றப்படும் இரசாயனத் திரவங்களின் காரணமாக களனி கங்கை நீரில் ஆசனிக் கலந்திருப்பதாக சில அமைப்புக்களால் மற்றும் தனி நபர்களால் மேற்கொள்ளப்படும் பரப்புரை பொய்யானது என்பது 15 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனை அறிக்கை களினால்நிரூபணமாவதாகவும் பாலசூரியதெரிவித்துள்ளார். வாரமொன்றுக்கு ஒரு தடவை இந்த அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ–22)

## மரண அறிவித்தல்



**Prof.Dr. மருது கந்தப்பு Ph.D**

பிறப்பு :- 02.05.1942 இறப்பு :- 26.09.2015

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறை வளன்புரத்தை வசிப்பிடமாகவும், லண்டன் Stanmore ஐ வதிவிடமாகவும் கொண்ட மருது கந்தப்பு 26.09.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு-மரகதமொழி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வி. எஸ். ஜேம்ஸ் அந்தோனியா பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிபுஸ்பத்தின் (மணி) அன்புக் கணவரும், மரகதமொழி (Scientist), கற்பகவல்லி (Scientist), Dr. மணி வண்ணன், மணிமாறன் (Engineer), Dr. பூங்கோதை ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம், பொன்னம்மா, பார்வதிப் பிள்ளை மற்றும் குமாரசாமி(லண்டன்), சிவகாமிப்பிள்ளை (லண்டன்), நாகம்மா (லண்டன்), வெற்றிவேல் (Solicitor- லண்டன்) ஆகி யோரின் அன்புச் சகோதரரும், Dr. யோகநாயகம், Dr. அசோகநாதன், Dr. சீலங்கா, பிரசானி (Scientist), Dr. சுரேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், ராஜ நாயகம் (லண்டன்), மேரி சறோஜா(லண்டன்), மதுரநாயகம் (லண்டன்), மரியநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், யதுசியா, பகலவன், தருசியா, ரதன், ஜெகான், நவிதா, றேயா, கதிரோன், விரன் ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 19, வைரவர் கோவில் வீதி,
வைரவபுளியங்குளம், வவுனியா
T.P:- 0777782052, 024 2221077

(63889) (10,17)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் மார்க்கண்டு இரவீந்திரன்**

மலர்வு 18.10.1954 உதிர்வு 10.10.2014



எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நிறைவு நாளன்று எமது இல்லத்தில் 29.09.2015 இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
T.P :077 674 7514

61/6 பாரதிவீதி
யாழ்ப்பாணம்

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



மின்னியது 04.05.1978 மறைந்தது 11.02.2009

**அமரர் கிருஷ்ணபிள்ளை திலகநாதன்**

ஆண்டுகள் ஆறு கடந்தும் ஆறவில்லை எம் துயர்
ஒழுக்கத்தாலும் பண்பாலும் உயர்ந்து நின்ற- உன்
உதவும் பண்பும், நேர்மையும் என்றும் எம் மனதில்- உனை
உயர்த்தியே வைத்திருக்கும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சூரியபவனம்
பாலைபட்,
புலோலி தெற்கு, புலோலி.

குடும்பத்தினர்.

(58548) (14,16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 7,067 பெண் தலைமைக் குடும்பங்கள்

## கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் புள்ளி விவரங்கள் தகவல்

கிளிநொச்சி, செப். 29

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்களைதலைமைத்துவமாகக்கொண்டு 7 ஆயிரத்து67 குடும்பங்கள்தற்போது வசிப் பதாக கிளிநொச்சி மாவட்டச் செய லகத்தின் புள்ளி விவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிர தேச செயலர் பிரிவுகளினும் உள்ள பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் புள்ளி விவர அடிப்படையில் கரைச்சிப் பிரதேசம்முதலிடத்தில்உள்ளது. கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 756 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 406 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 140 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 765 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் என மொத்தமாக 7 ஆயிரத்து 67 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. அதில் 20 வயதுக்கு உட்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் 34 காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் மேற்கொள்வதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் திட்டங்களை நடைமுறைப்படுத்திய போதிலும் மேலதிகமாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி3)

# கல்முனை நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு அந்தப் பகுதி தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பு

## சுமார் 800 ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடையும் ஆபத்து

அம்பாறை,செப்.29

கல்முனை நகரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தால் பல ஏக்கர் வயற்காணிகள் அழிவடைந்து போகும் நிலை ஏற்படும் என்பதால் அந்தத் திட்டத்துக்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனால் பாதிப்படையும் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

கல்முனை நகரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதால் அது கல்முனைப் பிரதேச மக்களுக்குப் பெரும் அநீதி இழைக்கும் செயற்பாடொன்றாகவே இருக்கும். அந்தப்பகுதி மக்களுக்குச் சொந்தமான வளம் மிக்க பல நூறு ஏக்கர் வயற் காணிகளை அவர்கள் இழந்துவிட நேரலாம். அதன் காரணமாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கப்படுமானால் அதற்கு எதிராக மாபெரும். எதிர்ப்புப் போராட்டமொன்று நடத்துவோம் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் தமிழ் மக்களுக்குப் பெருத்த பாதிப் பொன்று ஏற்படும் என்பதால், அது சம்பந்த மாக மீள ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியுள்ளதாகவும் அந்தப் பிரதேசத்தின் தமிழ் அரசியல் வாதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாகக் கல்முனை நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கல்முனைப் பிரதேசத்தில் சுமார் 800 ஏக்கர் வயல் நிலங்களை மண் போட்டு நிரப்பிவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும்– இந்த வயல் நிலங்களில் பெரும்பகுதி தமிழ் மக்களின் காணிகளே எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே இது சம்பந்தமாக தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக அந்தப் பிரதேசத்தில் உள்ள தமிழர் அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் கடிதங்களை அனுப்பி வைக்கவுள்ளனர். (ஐ-22)

# தீப்பெட்டி வழங்க மறுத்த வர்த்தகர் மீது தாக்குதல்

சாவகச்சேரி,செப்.29

நபர் ஒருவர் பீடி பற்ற வைப்பதற்கு தீப்பெட்டி கேட்டபோது வர்த்தகர் கொடுக்க மறுத்ததால் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இடம்பெற்றது. வர்த்தக நிலையத்துக்கு வந்த ஒருவர் பீடி பற்ற வைப்பதற்கு தீப்பெட்டி தருமாறு வர்த்தகரைக் கேட்டுள்ளார். பொது இடத்தில் பீடி பற்ற வைக்கக்கூடாது எனக் கூறிய வர்த்தகர் தீப்பெட்டி இல்லையெனக் கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த நபர் வர்த்தக நிலையத்தில் காணப்பட்ட பொருள்களைத் தூக்கி வீசியதுடன் வர்த்தகரையும் சோடாப் போத்தலை உடைத்து தாக்கியுள்ளார். கையில் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான வர்த்தகர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு,மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# அத்துமீறித் தாக்குதல்; சந்தேகநபர்களுக்கு விளக்க மறியல்

சாவகச்சேரி,செப்.29

வளவுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டினுள் காணப்பட்ட உடைமைகளை அடித்து நொறுக்கி சேதங்களை ஏற்படுத்திய நான்கு பேரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். கடந்த வாரம் சாவகச்சேரி நுணாவில் மேற்கு துர்க்கை அம்பாள் ஆல யத்துக்கு அருகில் இரு வீடுகளில் சிலர் அத்துமீறி உள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இதனால் 2 லட்சத்து 27 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளை அடித்து நொறுக்கி சேதமாக்கப்பட்டன. இந்தச்சம்பவம்தொடர்பாகசாவகச்சேரிபொலிஸார் நான்கு பேரைக் கைது செய்து, சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். இந்த நால்வரின் அராஜகத் தன்மையை வன்மையாகக் கண்டித்ததுடன் கடுமையாக எச்சரிக்கை செய்து நால்வரையம் எதிர்வரும் ஒக்ரோபர் எட்டாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இலவச யோகாசன வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், செப். 29

நல்லூரில் இலவச யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாகவுள்ள நாவலர் மணிமண்டபத்தில்இந்த யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. தொடர்ந்து 3 மாத காலப் பயிற்சி நெறியைக் கொண்ட இந்த யோகாசன வகுப்பில் கலந்து பயன்பெற விரும்பும் – ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை அல்லது அதற்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று திணைக்களம் கேட்டுள்ளது.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணி வரை ஆண்களுக்கும், காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணி வரைக்கும் பெண்களுக்கு மாக ஒவ்வொரு மணித்தியாலங்கள் இந்த யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன. பயிற்சி நெறியைப் பூரணமாக நிறைவு செய்பவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்படும். இந்து கலாசாரத் திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்படும் இந்தப் பயிற்சி நெறியைக் கற்றுக் கொள்வதன் ஊடாகவும், பயிற்சிகளைச் செய்வதன் ஊடாகவும் ஆரோக்கியமாக வாழ முடியும் என மருத்துவர்களும் வலி யுறுத்திவரும் நிலையில் ஆர்வமுடையவர்கள்ள இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-4)

**பெயர்மாற்றம்**

பள்ளிக்குடா பூகரியைச் சேர்ந்த **கிறேரியஸ்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **கிறேசியன்** எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

**கிறேசியன்.**

# மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில் கடனுதவி

வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகள் 9 பேருக்கு சுயதொழில் முயற்சியை மேற்கொள்வதற்காக ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபாவை சமூகசேவைகள் நலன்புரி மற்றும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சின் அங்கவீனம் உற்றோருக்கான தேசிய செயலகம் வழங்கியுள்ளது. நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சோ.சுதர்சன், சேமபுலம் வீதி உரும்பிராயைச் சேர்ந்த ஜெ.துசியந்தி, புத்தூர் கிழக்கைச் சேர்ந்த க.மதீஸ்வரன், இருபாலை கிழக்கைச் சேர்ந்த ந.நகுலேஸ்வரன், யோகபுரம் உரும்பிராயைச் சேர்ந்த கு.பாதீஸ்வரன், தோப்பு அச்சுவேலியைச் சேர்ந்த ந.ரமேஸ்வரன், செல்வபுரம் உரும்பிராயைச் சேர்ந்த ஆ.ரம்மியா, பாரதி வீதி அச்சுவேலியைச் சேர்ந்த இ.மகேஸ்வரி, யோகபுரம்உரும்பிராயைச்சேரந்த மா.அருந்தவராசா ஆகிய பயனாளிகள் தங்களுக்கான கொடுப்பனவுகளை பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு பிரதேசசெயலர் எம். பிரதீபன் அறிவித்துள்ளார். (ஐ-11)



**மதுரா அழகுக்கலை பயிற்சி நிலையம் - கோப்பாய்**

கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்

பதிவு திகதி 29/30.09.2015 மதியம் 2மணிவரை

பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

400 இற்கு மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களை உருவாக்கிய பயிற்சி நிலையம்தனது 7ஆவது அகவையில் கால் பதிக்கிறது. இப்பிரிவில் பயிற்சி பெறவிரும்பும் மகளிருக்கு மிககுறைந்த கட்டணத்தில் பயிற்சி வழங்கவுள்ளது. இதில் இணைய விரும்புவோர் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பயிற்சி விவரம் அழகுக்கலை டிப்ளோமா, அழகுக்கலை புரொபசனல், அழகுக்கலை அடிசனல், கேக்ஐசிங்டிப்ளோமா, ஹான்ட்வேர்க், சாறிவேக், தையல்பயிற்சி முடிவில் தரமான பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி ஆரம்பம்- 01.10.2015 காலம்- 3மாதம்

மகளிர் மட்டும்.

தொடர்பு: 077 936 2642 பழைய வீதி, கோப்பாய்

**காணி விற்பனைக்கு**

சங்கானை வல்லை வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் வீடு கட்டடக் கூடிய 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. இரவு7-9 மணிக்கிடையில் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு : 077 706 8434

**வேலையாள்கள் தேவை**

கொழும்பு - யாழ்ப்பாணம் பாரவூர்தி (லொறி) உதவியாளர்கள் தேவை.

தொடர்பு : 021 492 3724

**வீடு விற்பனைக்கு**

யாழ் போதனா ஆஸ்பத்திரிக்கும் புகையிரத நிலையத்திற்கும் இடையில் வீடு ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 344 8863

**ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்**

தரம் - 5புலமைப்பரிசில் பரீட்சை - 2016 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில் அன்பொளி கல்வியகம் யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில் அன்பொளி கல்விநிலையம் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி

அனுமதிகளை 28.09.2015 திங்கட்கிழமையிலிருந்து 05.10.2015 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு:- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன விழி அசைத்து சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்

இயக்குநர்கள்.

**ஜீவக வாத தைலம்**
**Jeewaka Vata Thailaya**

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டுவலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும், வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள்,கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு, அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி பாரிசவாதம்,கால்பாதம் கடித்தலும் வீக்கமும்,வாதம்,மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம்,காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25ml 150ரூபா | 50ml 280ரூபா | 100ml 450ரூபா

Manufactured & Marketed by:
Jeewaka Herbals
No.17/3 Wedagedara Koskandwala
Yakkala
[illegible] W/Au/L/3621
Contact:071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

# நயினாதீவு-குறிகாட்டுவான் அடுத்த வாரம் வழமைக்கு

யாழ்ப்பாணம், செப்.29

நயினாதீவுக்கும்– குறிகாட்டுவானுக்கும் இடையிலான கடற்பாதை சேவை இன்னமும் ஒரு வாரகாலத்துக்குள் வழமைக்குத் திரும்பிவிடும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடற்பாதையின் இயந்திரத்தின் ஏற்பட்ட பழுது காரணமாக இந்தச்சேவை தற்போது தடைப்பட்டுள்ளது.

அதற்கான உபகரணங்கள் விரைவில் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படும். இயந்திரத்தின் திருத்த வேலைகள் நிறைவு பெற்றதும் கடற்பாதையை விரைவாகவழமைபோன்று சேவைக்கு அமர்த்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கடற்பாதை பழுதடைந்ததால் நயினாதீவுக்கு பொருள்களை எடுத்துச் செல்வதில் வர்த்தகர்கள் சிரமப்பட்டும் வருகின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களில் நயினாதீவுக்குச் சொல்வோரும் கடற்பாதை பழுதடைந்ததால் அவற்றைக் கொண்டு செல்ல முடியாது சிரமப்பட்டு வருகின்றனர். (ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் எழுச்சிப்பிரிவின் ஆக்கப்பொருள் கண்காட்சி

சாவகச்சேரி,செப்.29

தென்மராட்சி பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி பிரிவின் பயனாளிகளால் ஆக்கப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு இன்றும் செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் கைதடி பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. முத்தான வியர்வை – 2015 என்னும் தொனிப் பொருளில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் காட்சிப்படுத்தல் நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக வாழ்வின் எழுச்சித் திட்ட யாழ். மாவட்டப் பணிப்பாளர் கமகேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலக பிரதிதிட்ட மிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன், கணக்காளர் திருமதி வ.மனோகரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ)

## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் செல்வி தேவலோஜினி
குமரவேள் அவர்களின் அன்புத் தந்தையார்

**இளையதம்பி குமரவேள்**

அவர்கள் 30.08.2015 இறைபதமடைந்ததையிட்டு
துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 11 1989

மறைவு 29 09 2011

*திதி: 29.09.2015*

**அமரர் நவரத்தினம் அனோஜன்**

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

*என்றும் நினைவுடன்*

மருதங்குளம்,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## நெஞ்சத்தில் நீங்கா நினைவுகளுடன் ஆண்டுகள் ஏழு



அன்னை மடியில் 1961.04.12

ஆண்டவன் அடியில் 2008.09.29

அமரர் உயர்திரு **கந்தசாமிப்பிள்ளை விக்னராஜேஸ்வரன்**
(ஆசிரிய ஆலோசகர் - SLPS நிக்கவெரட்டிய)

*திதி: 12.10.2015 (அமாவாசை)*

எப்போதும் இனியானை எம்மனத்தே வைத்தோமே
ஏழாண்டுகள் சென்றாலும் ஏங்கியே நாமிங்கு
ஏக்கத்தில் நிற்கின்றோம் திருமுகத்தைக் காண்பதற்கு
வரும் நாள் தான் எப்போது இருவிழியால் நீர்மல்கி
மலர் தூவி ஏத்துகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பன்னாலை,
தெல்லிப்பழை.

(64964) (14,16)

உங்கள் பிரிவுத்துயரால் வாடும்
அன்பு மனைவி குடும்பத்தினர்.
5ஆம் வட்டாரம், நயினாதீவு.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13.01.1942

மறைவு 12.10.2014

**அமரர்**
**சின்னத்துரை கதிர்காமத்தம்பி**

வல்வெட்டித்துறை கொத்தியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-பார்வதி தம்பதியரின் சிரேஷ்ட மகனும், வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்றவர்களான கந்தசாமித்துரை குணபூஷணம் தம்பதியரின் அன்பு மருமகனும், வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நிர்மலாவின் அன்புக் கணவருமான காலஞ்சென்ற சின்னத்துரை கதிர்காமத்தம்பி அவர்களுடைய முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வும், திவச நிகழ்வும் எதிர்வரும் 01.10.2015 ஆம் திகதி வியாழக்கிழமை காலை "பிருந்தாவனம்" ஊரிக்காடு வல்வெட்டித்துறையிலுள்ள தமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிருந்தாவனம், ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

திருமதி கதிர்காமத்தம்பி
நிர்மலா (மனைவி)

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் **காளியப்பன்**
**இராமு**

அன்னை மடியில்
01.10.1930



ஆண்டவன் அடியில்
29.09.2005

**திதி : 09.10.2015 - தேய்பிறை துவாதசி**

பத்தாண்டு ஆனாலும் ஓயுமோ உன் நினைவு – எம்
ஊனோடும் உறவோடும் ஒன்றாய்க்கலந்த அப்பாவே !
வேருடே நீர்சுரந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர் !
வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே விரும்பி ஈந்தீர் !
சீரான வாழ்வுதந்து சிறப்போங்கச் செய்த அப்பாவே !
சேயர் நாம் செய்வதறியாது சிந்தைகலங்கி நொந்தோம்
தீராத நினைவலைகள் தினந்தினமும் வந்தெம்மைத்
தெருட்டுவதும் தெய்வமே அறியாயோ?
நீராடுங்கண்களுடன் நிதமும்மைப் போற்றி நின்றோம்
நேயமுடன் வாராயோ ! நிம்மதியைத் தாராயோ

[illegible] வீதி,
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(11.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**தவமணி வன்னியசிங்கம்**

மலர்வு 04.09.1938 — உதிர்வு 08.10.2006

அன்புத் தெய்வமே, எமக்கெல்லாம் சேவை செய்து மறைந்த உங்களின் நினைவுகள், எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும், எம்முள்ளத்தில் அழியாமல் இருக்குமம்மா

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

ஈஸ்வரஜனனி
சகோதரர்கள்
555, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
222 1098

## தனிமையில் தவித்த மூதாட்டி முதியோர் இல்லத்தில் சேர்ப்பு

யாழ்ப்பாணம்,செப்.29

முழங்காவில் பிரதேசத்தில் எவரது துணையும் இன்றி தனிமையில் வாழ்ந்து வந்த மூதாட்டி ஒருவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளார். 93 வயதுடைய சோம சுந்தரம் பெரியநாயகி என்பவர் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்ட பின்னர் கிளிநொச்சி சமூக சேவைகள் திணைக் கள உத்தியோகத்தரால் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். எவரது துணையும் தனக்கு இல்லை என்று அந்த மூதாட்டி தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட மூதாட்டியைத் தெரிந்தவர்களோ, உறவினர்களோ இல்லத்துடன் தொடர்பு கொண்டு அவர் பற்றிய விவரத்தைத்தந்து உதவுமாறு இல்ல அத் தியட்சகர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

(ஐ–17)

## கலப்பைக்குள் மோட்டார் சைக்கிள் சிக்கி இருவர் காயம்

சாவகச்சேரி,செப்.29

வயல் உழவுக்காக வீதியில் சென்ற உழவு இயந் திரத்தின் கலப்பைக்குள் மோட்டார் சைக்கிள் சிக் கியதில் அதில் பயணித்த பெண் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி ஏ–9 வீதியில் இடம்பெற்றது. கலப்பையுடன் சென்ற உழவு இயந்திரத்தை முந்த முயன்றபோது மோட் டார் சைக்கிளின் சில்லு கலப்பைக்குள் சிக்கிய தாகத் தெரிவிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் பயணித்த கொக்குவில் மேற்கைச் சேர்ந்த இருவர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர். அவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு, ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள் ளார். உராய்வுக் காயத்துக்கு உள்ளான பெண் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

(ஐ)

# 45ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூர தினத்தன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்ப குல விளக்குகளான



அமரர் சின்னத்தம்பி ரவீந்திரன் — அமரர் சிறிஸ்கந்தவேள் விஜயமலர்

ஆகியோரின் அந்தியேட்டிக் கிரியைகள் 29.09.2015 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும்.

பின்னர் 01.10.2015 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னார்களது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். (64990.11.16)

மனைவி சத்தியானந்த தேவியும் (சத்தியா ரீசர்) குடும்பத்தினர்.
3ஆம் கட்டை, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
கணவர் – செ.சிறிஸ்கந்தவேள், சகோதரன் – சி.சிற்றரன் மற்றும் குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **நடராசா ஜெயராஜா** (விஜயகுமார்)

மலர்வு
23.11.1950

உதிர்வு
29.09.2015

அன்பாய் பண்பாய் அனைவரையும் அரவணைத்து
கண்ணாய் குடும்பத்தை உயர்வுறவே வழிகாட்டி
பொன்னாய் காத்திட்ட மன்னவனே மறைந்தனையோ?
மண்ணாய் எம் வாழ்வு மூன்றாண்டுகள் கடந்ததுவே
மறவா நினைவுடனே நடைப்பிணமாய் நாமிங்கே!

இல.07, சென்மேரிஸ், முதலாம் ஒழுங்கை, கொழும்புத்துறை.
குடும்பத்தினர்.

# ஈர விழிகளுடன் 45ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் **சின்னத்தம்பி ரவீந்திரன்** — அமரர் **சிறிஸ்கந்தவேள் விஜயமலர்**



அன்னை மடியில்
05.11.1958

ஆண்டவன் அடியில்
16.08.2015



அன்னை மடியில்
27.08.1954

ஈசன் அடியில்
16.08.2015

நெஞ்சத் துணிவும் நேர் கொண்ட பார்வையும்
கொஞ்சமும் குறையாத குணவியல்பும்
விஞ்ச முடியாத விகடக் கதைகளுமாய்
கொஞ்சி உறவாடி குதூகலிக்கும் கோமகனே
தஞ்சமென வந்தவரை தழுவி அரவணைத்து
பஞ்சாய் அவர் துயர் போக்கிடும் பாங்குமாய் – என்
நெஞ்சந்தனில் நீக்கமற நிறைந்திருக்கும் என்னவனே – ரவீந்திரனே
பிஞ்சு மனத்தவனே பிராண நாதனே– உ(ம்)மை
வஞ்சி எனை விட்டு வஞ்சகமாய்ப் பிரித்தவர் யார் ?
நெஞ்சு பொறுக்குதில்லை நேரில் வர மாட்டீரோ ?
குஞ்சரத்தானைக் கும்பிட்டு நிற்பவரே
தோன்றாத் துணையாய் இருந்து வழிகாட்டும் ஐயனே

மாசற்ற ஆடிப்பூரத்திலே அமரத்துவம் அடைந்தவளே
நேசத் திருமகளே எல்லோரும் விரும்பும்
பாசத்தின் பிறப்பிடமே கோலத் திருவுருவே – உம்
கணவனையும் வம்சத்தையும் எக்கணமும் நேசித்தாய்
ஈசனின் தொண்டிலே எம்முடன் இணைந்திருந்தாய்
சுற்றமும் உறவுகளும் உன் வரவுக்காய் காத்திருக்க– பாதி வழியிலே
பாசக் கயிறு வீசிப் பரந்தாமன் பணித்தனனோ ?
எல்லாம் வல்ல ஈசன் திருவடியை
வாசமுள்ள (விஜய) மலராக என்றும் அலங்கரித்து– எமக்கு
தோன்றாத் துணையாய் இருந்து வழிகாட்டும் அம்மா !

திருமதி. ரவீந்திரன் சத்தியா
3ஆம் கட்டை, மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை

ஈர விழிகளுடன்
உம் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி மற்றும் குடும்பத்தினர்.

3ஆம் கட்டை
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிமுகமாகிறது VAIO Canvas Z டேப்லட்



VAIO நிறுவனம் Canvas Z எனும் புத்தம் புதிய டேப்லட்டை அறிமுகம் செய்யவுள்ளது.
12.3 அங்குல அளவு, 2560 x 1704 Pixel Resolution ஆகியவற்றையும், LCD WQXGA+ IPS தொழில்நுட்பத்தையும் கொண்ட தொடுதிரையை உடைய இந்த டேப்லட்டில் Intel Core i7-4770 HQ Processor, பிரதான நினைவகமாக 8GB RAM மற்றும் 256GB சேமிப்பு நினைவகம் என்பன தரப்பட்டுள்ளன. மேலும் மைக்ரோசொப்ட் விண்டோஸ் 10 இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இந்தச் சாதனத்தில் Intel Iris Pro 5200 எனும் உயர் திறன்கொண்ட கிராபிக்ஸ் சிப் உள்ளடக்கப்பட்டுள்ளது.
இதனை தற்போது 2,199 டொலர்கள் செலுத்தி முற்பதிவு செய்து கொள்ள முடியும்.

# ஆயிரம் மைல் வேகத்தில் பறக்கும் கார்

உலகில் அதிநவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள அதிவேக கார் பிளட் ஹெவுண்ட் சுப்ப சொனிக் கார் (Bloodhound Superd Sonic car) ஆகும். அதாவது மணிக்கு சுமார் 1610 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் வகையில் இந்தக் கார் உருவாக்கப்பட்டுள்ளது.
997-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் காரான த்ரஸ்ட் எஸ்சிசி-யின் (Thrust SSC) மணிக்கு 1228 கிலோ மீற்றர் வேகம் தான், இதுவரையில் உள்ள அதிவேகமான லாண்ட் வெயிக்கல் ஸ்பீட் சாதனையாகும். ப்லட் ஹௌண்ட் சூப்பர் சோனிக் கார் உருவாக்க வீடியோவை பார்க்கும்போது த்ரஸ்ட் காரின் சாதனையை வெல்லும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. 2016-ஆம் ஆண்டு சூப்பர் சோனிக் கார் பரிசோதிக்கபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# அடோப் போட்டோ சொப் மற்றும் பிறிமிறி எலிமன்ட்ஸ் இல் புதிய வசதி




புகைப்படங்கள் மற்றும் வீடியோ எடிட்டிங் செய்வதற்காக Adobe நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட அப்பிளிக்கேஷன்களே Photoshop மற்றும் Premiere Elements ஆகும். இந்த அப்பிளிக்கேஷன்களின் புதிய பதிப்பை வெளியிடவுள்ளதாக அந்த நிறுவனம் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
இந்த நிலையில் இவற்றில் 4K Ultra HD தொழில் நுட்பத்துக்கு இயைபாக்கம் உடைய டூல்கள் உள்ளடக் கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
இவ் இரண்டு மென்பொருள்களையும் உள்ளடக்கிய பக்கேஜை 99.99 டொலர்களுக்கு கொள்வனவு செய்ய முடிவதுடன், தனித்தனியாக கொள்வனவு செய்ய வேண்டுமாயின் 149.99 டொலர்கள் செலுத்த வேண்டும்.















குடா நாட்டில் நேற்றுமுன்தினம் நண்பகல் பெய்த கடும் மழையின் பதிவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் மக்கள் கொண்டாடிய பாரம்பரிய அறுவடை திருவிழா




அறுவடை விழாவைக் கொண்டாடும் விதமாகவும், இலையுதிர் காலத்தின் ஆரம்பத்தைக் குறிக்கும் நோக்கிலும் பிரிட்டனில் பெரும் ஊர்வலம் ஒன்று நடத்தப் பட்டது.

இந்த விழா, 1875ஆம் ஆண்டுமுதல் வருடாவருடம் பாரம்பரியமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது: பிரித் தானியாவின் மாற்று அரச குடும் பம் என கொண்டாடப்படும் பேர்லி கிங்க்ஸ் அன்ட் குவின்ஸ் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

பேர்லி கிங்க்ஸ் அன்ட் குவின்ஸ் அமைப்பு இயலாதவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் கொண்ட கென்றிக்ரோப்ட் என்பவரால் சமேர்ஸ் டவுன் பகுதியில் தொடங்கப்பட்டதொன்று. அன்றுமுதல், தலைமுறை தலை முறையாக பேர்லி கிங்க்ஸ் குடும்பத் தினர் தொடர்ந்து இந்த ஊர்வலத்தை ஆண்டுதோறும் நடத்தி வருகின்றனர். இந்த ஊர்வலத்தை30 குடும்பங்கள் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் பருவகாலம் மாறியிருப்பதை குறிக்கும் நோக்கிலும் அந்த ஆண்டு முழுவதும் மேற்கொள்ளவிருக்கும் சமூகத் தொண்டுகளுக்குத் தேவையான பணத்தை திரட்டும் நோக்கிலும் இந்த ஊர்வலம் நடத்தப்படுகின்றது.

கில்டால் பகுதியில் இருந்து தொடங்கும் இந்த ஊர்வலம் நூற்றுக்கணக்கான மக்களின் பேராதரவுடன் சென் மேரிலி பௌ கோவிலில் முடிவடைகின்றது. என்பது குறிப்பிடத்தக்கது. (ற-ரி4)



ஜெருசலேமில் உள்ள அல் அஃசா பள்ளிவாசல் வாளாகத்தில் இஸ்ரேல் பாதுகாப்பு படையினருக்கும் பலஸ்தீ... இடையே கடும் மோதல் இடம்பெற்றுள்ளது. அதன் தொடர்ச்சியாக 4 பலஸ்தீனியர்கள் இஸ்ரேல் படையினரால் ... தெரிவிக்கப்படுகின்றது. பலஸ்தீனியர்கள் தம்மீது கற்களையும் பட்டாசுகளையும் வீசித் தாக்கின... என்றும் ... எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ள இஸ்ரேலியப் பொலிஸார், தற்போது நிலமை அமைதியடைந்துள்ளது... முஸ்லிம்கள் மற்றும் யூதர்களால் வணங்கப்படும் குறித்த பகுதியில் பெரும் பதற்றம் நிலவி வருவதுடன் அண்... மோதல்களும் இடம்பெற்று வருகின்றன.

# மருத்துவர் உதவியுடன் உயிரை மாய்த்த பெண்

## தீராத நோயின் கொடுமையால்

ஒட்டாவா, செப்.29

கனடாவைச் சேர்ந்த பெண்ணொருவர் மருத்துவர் உதவியுடன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். 18 ஆண்டுகளாகத் தீராத நோயுடன் போராடி வந்த குறித்த பெண் நோய் குணமாகாத நிலையில் இந்த முடிவை எடுத்துள்ளார்.

கல்கேரி நகரில் டோன்னா டெலோர்ம் என்ற பெண்மணி வழக்கறிஞராக பணியாற்றி வந்துள்ளார். இவர் ஸ்கிரோசிஸ் என்ற கொடுமையான நோயால் கடந்த 18 வருடங்களாக அவதியுற்றார். இந்த நோய் தாக்கினால் உடலில் உள்ள திசுக்களின் சில பகுதிகள் இறுகி பெரும் வேதனையை ஏற்படுத்தும். சிகிச்சைகள் மேற்கொண்ட பின்னரும் நோய் குணமாகாததால் இறுதியாக தன்னுடைய உயிரை தானே மாய்த்துக்கொள்ள முடிவு செய்துள்ளார்.

சமூக வலைத் தளத்தில் தனது சாவு குறித்து தகவல் ஒன்றைப் பதிந்துள்ளார். அதில், என்னுடைய சாவுக்கு நானே இரங்கல் பதிவு எழுதுவது மிகவும் வேதனையாக இருக்கிறது. என்னுடைய உயிரை மாய்த்துக்கொள்ள எத்தனையோ வழிகளைக் கையாண்டுள்ளேன். ஆனால், என்னால் சுயமாக உயிரை போக்கிக் கொள்ளும் தைரியம் மட்டும் இறுதி வரை கிடைக்கப்பெறவில்லை. தற்போது இந்த நோயால் சிறிது சிறிதாக உயிரை விடுவதைவிட மருத்துவரின் உதவியுடன் என்னுடைய உயிரை போக்கிக்கொள்ள முடிவு செய்துள்ளேன் என்று அவர் அந்த பதிவில் தெரிவித்திருந்தார்.

டோன்னாவின் கோரிக்கையை ஏற்ற டையிங் வித் டிஜிநிடி கனடா என்ற நிறுவனம் சட்டப்படி மருத்துவர் உதவியுடன் அவருடைய உயிரைப் போக்கத் தீர்மானித்தது.

கடந்த புதன்கிழமை அன்று, டோன்னாவைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள் தகுந்த விதிமுறைகளை பின்பற்றி அவருக்குச் சாவை ஏற்படுத்தியுள்ளனர். சக வழக்கறிஞர்களால் அன்பானவர் என்று பாராட்டப்படும் டோன்னாவின் சாவுச் செய்தி கடந்த வெள்ளியன்று அதிகாரப்பூர்வமாக வெளியாகி உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற-ரி4)



# ஹாதி அரசின் கைகளில் ஏடன்;

## 6 மாதங்கள் நீடித்த கடும் மோதல்களின் முடிவில்

ஏடன், செப்.29

ஏமனில் தொடர்ந்து அரச படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடும் மோதல் நடைபெற்று வரும் நிலையில் ஏமனின் இரண்டாவது பெரும் நகரமான ஏடன், ஜனாதிபதி ஹாதியின் படையினர் வசம் வீழ்ந்துள்ளது.

சுமார் 6 மாதங்கள் நீடித்த கடும் மோதல்களை அடுத்து மீண்டும் ஹாதி அரசு ஏடனில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

ஏடன் நகர் அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள போதும், அந்த நகரம் பெரும் அழிவைச் சந்தித்துள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. முக்கிய மருத்துவமனைகள் மற்றும் அரச அலுவலகங்கள் என்பன முற்றாகச் சேதடைந்துள்ளன என்றும் அவற்றை சீரமைக்க நீண்ட காலம் தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நாட்டின் பிற பகுதிகளில் நடைபெற்றுவரும் மோதல்களால் ஏடனில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவது அரசுக்குப் பெரும் சவாலாகவே காணப்படும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

# மாலைதீவு ஜனாதிபதி பயணித்த கப்பலில் வெடிப்பு

மாலி, செப். 29

சவூதி அரேபியாவுக்கு ஹஜ் யாத்திரை சென்ற மாலைதீவு நாட்டின் ஜனாதிபதி அப்துல்லா யமீன் அப்துல் கயூம் மற்றும் அவரது துணைவியார் மாலைதீவுக்குத் திரும்பும் வழியில் அவர்கள் பயணித்து வந்த கப்பல் வெடிப்புக்குள்ளாகியுள்ளது.

இவ் வெடிப்புச் சம்பவத்தில், ஜனாதிபதியின் துணைவியாருக்குச் சிறு சிறு உடற்காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், அவர் மாலைதீவில் உள்ள இந்திரா காந்தி ஞாபகார்த்த மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாலைதீவின் ஜனாதிபதியான கயூம் எதுவித காயங்களும் இன்றி இந்த விபத்தில் இருந்து தப்பியுள்ளார்.

இத் திடீர் வெடிப்புக்கான காரணம் என்னவென்று இதுவரை சரிவர கண்டறியப்படாத நிலையில், அந்தக் கப்பலின் இயந்திர கோளாறினால் அவ் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்க கூடும் என நம்பப்படுகின்றது. (ற)

# ஹொங்கொங் தீ விபத்தில் 10 படகுகள் எரிந்து நாசம்

ஹொங்கொங், செப்.29

ஹொங்கொங் நகரின் கப்பல்கள் மற்றும் சிறு படகுகள் நிறுத்தும் துறையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக நங்கூரமிடப்பட்டிருந்த பத்துப் படகுகள் எரிந்து சாம்பலாகியுள்ளன என்று அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



இந்தத் தீ விபத்தில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர். முதலில் மீன்பிடிப் படகில் ஏற்பட்ட தீ பரவத் தொடங்கியதையடுத்தே ஏனைய படகுகளும் தீக்கிரையாகின என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்தை நேரில் கண்ட ஒருவர் இது குறித்துத் தெரிவிக்கையில், அப்பகுதியிலிருந்து பெரும் புகை மண்டலம் எழும்பியது என்றும், அருகே சென்று பார்த்தபோது ஒரு படகிலிருந்து மற்றைய படகுகளுக்கும் தீ பரவிச் சென்றதை அவதானிக்க முடிந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

தீயணைப்பு பிரிவின் பேச்சாளர் குறிப்பிடுகையில், படகொன்றில் சமையல் எரிவாயு பயன்படுத்தப் பட்டமையே இத் தீ விபத்து நிகழக் காரணம் என தெரிவித்தார்.

ஹொங்கொங் மீனவர் ஒன்றியத்தின் பிரதித் தலைவர் இச் சம்பவம் குறித்து கருத்து வெளியிடுகையில் கடுமையான தீ பற்றி எரிந்தது. உடனடியாக அவசர சேவைப்பிரிவிற்கு அழைப்பு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அவர்கள் குறித்த இடத்துக்கு வந்து சேர்வதற்கு முப்பது நிமிடங்களுக்கும் மேல் சென்றதாக அவர் குறிப்பிட்டிருந்தார். அதுவரையும் தீ பரவல் கடுமையாகிக் கொண்டே சென்றதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம் பலஸ்தீனிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் ...பினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் ...ன்றும் ...தயடுத்துப் பதில் நடவடிக்கை ...டந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். ...ன் அண்மைய வாரங்களாக அங்கு அடிக்கடி (ற–ரி4)

## ஸ்பெயினின் பிராந்தியத் தேர்தல்

# தனிநாடு வலியுறுத்தும் கூட்டணிக்கு வெற்றி



லண்டன், செப். 29

ஸ்பெயினின் கத்தலோனிய பிராந்தியத் தேர்தலில் தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தும் கூட்டணி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ளது. 90 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் மொத்தம் உள்ள 135 இடங்களில் 72 இடங்களை இந்தக் கூட்டணி கைப்பற்றியுள்ளது.

வெற்றிக் களிப்பில் மக்கள் வீதியெங்கும், வெள்ளம் போல் காட்சியளித்தனர். கிட்டத்தட்ட ஐந்து லட்சம் மக்கள் வீதியில் குழுமி நின்றனர். தங்களுக்கான அரசியல் தீர்வாக நடைபெற்ற தேர்தல் அமையும் என நம்பிக்கை தெரிவித்தனர். தேர்தல் வெற்றிக் கொண்டாட்டத்தில் கட்சித் தலைவர்களும் பங்கெடுத்தனர்.

வாக்குப்பதிவுக்கு முன்னதாக முழுப் பெரும்பான்மை பெறும் பட்சத்தில் 18 மாதங்களுக்குள் கத்தலோனியவைத் தனிநாடாக அறிவிக்க இயலும் என இந்தக் கூட்டணி தெரிவித்திருந்தது. தனியாகப் பிரிந்து செல்ல கத்தலோனிய முடிவெடுக்கும் பட்சத்தில் அதை நீதிமன்றத்தின் வாயிலாகத் தடுத்து நிறுத்துவோம் என்று ஸ்பெயின் அரசு குறிப்பிட்டிருந்தது. இந்த நிலையில் தேர்தல் வெற்றிக்குப் பின் ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய கத்தலோனிய ஜனாதிபதி ஆர்தர் மாஸ், மக்களின் விருப்பம் விரைவில் நிறைவேறும் என்று குறிப்பிட்டுள்ளார். (ற–ரி4)



உலகின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு சந்திர கிரகணம் அவதானிக்கப்பட்டது. வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, மேற்கு ஆபிரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பாவில் நிலவு சிவப்பு நிறத்தில் காட்சியளித்தது. கிரகணத்தின்போது வழமையாகத் தெரியும் சந்திரனின் அளவைவிட 7–8 சதவீதம் பெரிதாகத் தெரிந்தது. சூரியன், சந்திரன், பூமி என்பன ஒரே நேர்கோட்டில் இருந்தன. நீள்வட்டப் பாதையில் சுற்றிவரும் சந்திரன் சராசரியாக 405,000 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும். எனினும் கிரகணம் காரணமாக 363,000 கிலோ மீற்றர் சராசரி தூரமாகக் கொண்டு பூமிக்கு மிக அருகில் சந்திரன் தனது பாதையில் பயணித்தது. (ற–ரி4)





## 'பேஸ்புக்' தலைமையகத்தை சுற்றிப்பார்த்த நரேந்திர மோடி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பேஸ்புக் நிறுவன தலைமையத்துக்கு சென்று பார்வையிட்டதுடன், அந்த நிறுவனத்தின் தலைவர் மார்க் ஸக்கர்பெர்க்குடன் கலந்துரையாடினார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் அமைந்துள்ள பேஸ்புக் அலுலகம் சென்ற மோடிக்குப் பெரும் வரவேற்பும் அளிக்கப்பட்டது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஸக்கரபெர்க்:–

பேஸ்புக் தலைமையகத்துக்கு வந்திருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் கேள்வி பதில் நிகழ்ச்சி நடத்தியுள்ளேன். இந்த நிகழ்ச்சியின் போது இந்தியாவில் இணையம் மூலம் மக்களை இணைப்பது பற்றியும் பேசியுள்ளேன். – என்றார்.

கலந்துரையாலின்போது கருத்துத் தெரிவித்த இந்தியப் பிரதமர் மோடி:–

அரசியல் தலைவர்களின் விழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் சமூக வலைத்தளங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன . முந்திய காலங்களில் 5 வருடங்களுக்கு ஒரு முறை தான் தேர்தல் வரும். ஆனால் இப்பொழுது சமூக வலைதளங்களின் ஆதிக்கத்தினால் 5 நிமிடங்களுக்கு ஒரு முறை தேர்தலைச் சந்திப்பது போன்ற உணர்வு. தினமும் பல மில்லியன் மக்களின் தொடர்புகளுக்காக பேஸ்புக், டுவிட்டர் சமூக வலைதளங்களை நான் பயன்படுத்துகிறேன்.– என்றார்.

மோடியும் , மார்க் சுக்கர் பேர்க்கும் சந்தித்து பேசும் போது, உருக்கமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். சிறிய வயதில் தான் பட்ட கஷ்டங்களை மோடி பகிர்ந்து கொண்டார், ரயில்வே நிலையத்தில் சிறுவயதில் தேநீர் விற்றேன், மிகவும் கஷ்டப்பட்டு பணத்தை சம்பாதித்தேன் என்றார். இவ்வாறனதொரு பின்னணி யில் இருந்து வந்தவர், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமராக இருப்பது எனக்கு வியப்பை தருகிறது என பேஸ்புக் நிறுவுநர் தெரிவித்துள்ளார். (ற–ரி4)

## 43 மாணவர் காணாமல்போன விவகாரம்: மெக்ஸிக்கோவில் ஆர்ப்பாட்டம்



குரேரோ, செப்.29

மெக்சிகோவில் 43 மாணவர்கள் காணாமல் போன விவகாரத்தில் உண்மை வெளிவரும் வரையில் தங்களது போராட்டம்ஓயாதுஎனஅவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26ஆம் திகதி குரேரோ மாகாணத்தில் உள்ள இகுலா நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஆசிரியர் பயிற்சி பள்ளி மாணவர்கள் காணாமல் போயினர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மாணவர்கள், பின்னர் சமூக விரோதக் கும்பல்கள் வசம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் அதன்பின் கொலை செய்யப்பட்டு அவர்களது உடல்கள் எரிக்கப்பட்டன என்றும் அரசுத்தரப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக நகர மேயர் மற்றும் அவரது மனைவி உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் காணாமல் போவதற்கு முன், அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய இடத்துக்கு நடைப்பயணமாக வந்த பெற்றோர் இந்த பிரச்சினையில் அரசு உரிய அக்கறை[illegible]வில்லை என குற்றம்சா[illegible]னர். தங்கள் பிள்ளைகளை மீட்டுத் தர வேண்டியது அரசின் கடமை என்றும் மாணவர்களின் பெற்றோர் குறிப்பிட்டனர்.

காணாமல் போன தமது பிள்ளைகள் நிலை குறித்து அரசு அறிவிக்க வேண்டும் என கோரி, காணாமல் போன மாணவர்களின் பெற்றோர்கள் காணாமல் போன தமது பிள்ளைகளின் புகைப்படங்கள் மற்றும் மலர்வளையங்கள் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் சிலர் தங்களின் கண்களில் சிவப்பு [illegible] ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்தனர். அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பாக சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட்டுசரியான நீதிவழங்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசமெழுப்பினர்.

ஜனாதிபதி என்ரிக்குவி பீன நைற்றோ இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்துவதற்கு புலனாய்வுக் குழுவொன்றை நியமிக்கவிருப்பதாககாணாமல்போன மாணவர்களின் உறவினர்களிடம் உறுதியளித்திருந்தார்.

ஆயினும், குறித்த மாணவர்கள் 43 பேரும் காணாமல் போய் ஒரு வருடம் கழிந்துள்ள நிலையில், பெற்றோர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வையாளர்களைப் பிரமிக்க வைத்த முத்தான வியர்வைக் கண்காட்சி

லக்ஸ்மன்

வளமும் இருக்கிறது. திறமையும் இருக்கிறது. எனினும் நாம் முயற்சியற்றவர்களாக இருந்துவிட்டோம். உழைப்பவர்களின் முத்தான வியர்வையின் பெறுமதி கண்காட்சியினூடாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர்த் தயாரிப்புக்கள் எல்லாமே மிகவும் சிறப்பாகவும் மனதைக் கவருவதாகவும் இருந்த இந்தக் கண்காட்சியைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தமை குறித்து நான் மிகவும் பெருமைப்படுகின்றேன் என உரும்பிராயைச் சேர்ந்த டெய்சிகா கூறியமை நியாயமான கருத்தாகும்.

கோப்பாய் பிரதேச செயலகம், 'முத்தான வியர்வை' என்ற பொருளினாலான உள்ளூர் மூல வளங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டதும், விவசாய முயற்சிகளின் ஏற்றங்களைக் கொண்டதுமான வாழ்வின் எழுச்சி வர்த்தகக் கண்காட்சியைப் பிரதேச செயலகத்தில் நடத்தியது. கடந்த 25ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் க.மகேஸ்வரன் கண்காட்சியைத் தொடக்கி வைத்தார். சமுர்த்தி வாழ்வெழுச்சித் திட்ட உதவிகளைப் பெற்றவர்கள் மட்டுமன்றி சுயமுயற்சியில் ஈடுபட்டிருக்கும் உதவிகள் கிடைக்காத உற்பத்தியாளர்களும் தமது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப் படுத்தி இருந்தனர். நுழைவாயிலில் உழைக் கும் மனிதர்களை நினைவூட்டும் வகையில் இரு உருவச்சிலைகள் பார்வையாளர்களைக் கவர ஒவ்வொரு கண்காட்சித் தொகுதியும் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன. முன்னதாகப் பயன்தரு மரங்களும் செடிகளும், என்னை எடுத்துச் சென்று பயன்பெறுங்கள் என பார்வையாளர்களை அழைப்பதுபோல் மெல்லிய காற்றில் தலைகுனிந்து வரவேற்பது போன்று அசைந்தாடி ஒவ்வொருவரையும் வரவேற்றன. நொறுக்குத்தீனி வகைகள், போசாக்கு மா உணவு வகைகள் மிகவும் நல்ல முறையில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறி வகைகள், முந்திரி ரசங்கள் என உள்ளூர்த் தயாரிப்புக்கள் ஒருபுறம் என்றால் மறுபுறத்தில் கைப்பணிப் பொருள்களான வாழை நாரில் உற்பத்தி செய்யப்பட்ட பொம்மைகள் உட்பட பெண்களுக்கான கைப்பைகள், மணிபர்ஸ்ஸுக்கள், தேங்காய் மட்டைகளைக் கொண்டு சீவி எடுக்கப்பட்ட விநாயகர், யானை, குரங்கு, ஆந்தை போன்ற சிற்பங்கள் பார்வையாளர்களை நகரவிடாமல் நீண்டநேரம் ரசிக்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டிருந்தன. கடைகளில் இவைகள் ரூபா 500, ரூபா 600 என்று விற்கப்படுவதாகவும் கண் காட்சியில் இவைகள் குறைந்த விலையில் வழங்கப்படுவதாகவும், இதைத் தாங்கள் தமது ஒரு பகுதி நேர வேலையாகக் கொண்டுள்ளதாகவும் சுய தொழில் முயற்சியில் கிடைக்கும் வருமானம் ஓரளவுக்கு குடும்பத்தைக் கொண்டு நடத்த உதவுவதாகவும் உற்பத்தியாளர்களால் தெரிவிக்கப்பட்டது. வாழைநார் உற்பத்திப் பொருள்கள் மிகவும் தரமாக உள்ளன. அவை கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுவதாக வும் கூறிய பிரசன்னராஜ் இதில் நல்ல வருமானம் கிடைக்கிறது. எனினும் இதில் பயிற்சி பெறப் பெரும்பாலானவர்கள் முன் வருகிறார்களில்லை எனவும் கவலை தெரிவித்தார்.





மட்பாண்டக் காட்சியில் நீர்ச்சாடிகள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள், உண்டியல்கள் எனப் பலவகைப் பொருள்கள் இடம் பெற்றிருந்தன. இவை அழகாகவும் நல்ல முறையிலும் உருவாக்கப்பட்டிருந்தன. இவற்றைக் காட்சிப்படுத்திய கந்தையா என்பவர், தான் பதினைந்து வருடங்களுக்கு மேலாக மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் பொதுமக்களிடத்தில் இவற்றுக்கு நல்ல கிராக்கி இருந்தபோதிலும் உற்பத்தியாளர்கள் குறைவு என்பதால் பொதுமக்களின் விருப்பங்களை நிறைவேற்ற வாய்ப்பில்லாமல் உள்ளது என்கிறார்.

பனம், பொருள்கள் நிறையவே காணப்பட்டன. அழகிய கூடைகள் தொப்பிகள் மற்றும் சாதாரண பெட்டிகள் குட்டான்கள் என்று பனம் பொருள்கள் குவிக்கப்பட்டிருந்தன. இவற்றை உற்பத்தி செய்வதற்கு தனியான நேரம் தேவையில்லை. வீட்டில் ஓய்வாக இருக்கும்போது உற்பத்தி பண்ணிக்கொள்ள முடியும். பொழுதுபோக்குடன் கூடிய கணி சமான வருமானத்தைப் பெறமுடியும் எனக் கூறும் நிரோஜன் எங்களுக்கு கற்பகம் மற்றும் தனியார் சிலரிடம் இருந்து கிடைக்கும் கேள்விகளுக்கேற்ப இவற்றை உற்பத்தி செய்கிறோம். எதிர்காலத்தில் எமது மண்ணில் உற்பத்தி யாகும் பொருள்களுக்கு நிறைய சந்தை வாய்ப்பு கிடைக்கும் என்ற எமது நம்பிக்கையுடன் கூடிய முயற்சி இது என்கிறார்.

சமுர்த்தி வாழ்வாதார உதவிகளைப் பெற்றவர்கள் தமது சுயமுயற்சியால் சிறுதொழில்களை முன்னெடுத்து வருபவர்கள் எனக் கணிசமான உள்ளூர் உற்பத்தியாளர்களின் தயாரிப்புக்களுடன் விவசாய கால்நடை மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மகளிர் அமைப்புக்கள் எனப் பெருமளவு உற்பத்தியாளர்கள் தமது பொருள்களை அறிமுகப்படுத்தவும் சந்தைப் படுத்தக்கூடிய வாய்ப்புக்களை எதிர் பார்ப்பவர்களாகவும் ஆர்வத்துடன் இந்தக் கண் காட்சியில் கலந்து கொண்டனர். அதே சமயம் வேறு சில தனியார் நிறுவனங்களும் தமது விற்பனைப் பொருள்களைக் காட்சிப்படுத்தின.

இந்தப் பகுதியில் உள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி சுயதொழில் முயற்சியில் நாம் எந்த அளவுக்கு முன்னோக்கிப் பயணிக்க முடியும் என்பதையும் விவசாயத்துறையில் சுகாதாரமான மக்களின் பயன்பாட்டுக்கு உகந்த உற்பத்திகளை எமது விவசாயிகளால் முன்னெடுக்க முடியும் என்பதையும் இந்தக் கண்காட்சி சுட்டி நிற்கிறது. அரசின் வாழ்வாதார உதவித் திட்டங்கள் எந்த அளவுக்கு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த் தியுள்ளது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் கண்காட்சி அமைவதற்கான செயற்பாடுக ளில் எமது பிரதேச செயலக்ம் மற்றும் கிராம அலுவலர்கள் மற்றும் பயனாளிகளின் தாராளமான ஒத்துழைப்பு கிடைத்தமையே கண் காட்சி மிகவும் சிறப்பாக அமையக் காரணம் எனப் பிரசன்னராஜ் தெரிவித்தார். றெஜிபோமில் வெட்டப்பட்ட வாளேந்திய சிங்கம், கடதாசிச் சுருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பறவைகளின் உருவங்கள் ஆலயங்களில் பயன்படுத்தப்படும் சிறிய கருங்கல் சிற்பங்கள் என கண்காட்சி பிரமாதமாக அமைந்திருந்தது. பெருமளவு பார்வையாளர்கள் இந்தக் காட்சியைப் பார்வையிட்டு மூக்கில் விரலை வைத்து அதிசயித்தனர். அந்தளவுக்கு தயாரிப்புக்களின் தரமும், அழகும் அவர்களை வியப்படையச் செய்திருந்தன. பார்த்த அனைவருமே பாராட்டும் வகையில் ஒவ்வொரு காட்சித் தொகுதிகளும் நல்ல முறையில் உருவாக்கப்பட்டிருந்தன.

தேசிய அளவில் கடந்த ஆண்டில் முதலிடம் பெற்றிருந்த கோப்பாய் பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி வர்த்தகக் கண்காட்சி போன்று இந்தமுறையும் தமக்கு முதலிடம் கிடைக்கும் என்று உறுதிபடக் கூறுகிறார்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள். அதற்காக தமது முத்தான வியர்வையைச் சிந்தியுள்ளார்கள் அவர்கள். கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் என்பதைச் சொல்லாமல் சொல்லியது அந்தக் கண்காட்சி.

# உயர் வெகுமதி வழங்கிய மஹாபொல லொட்டோ

லொத்தர் சீட்டிழுப்பில் புத்தாக்கங்களைப் படைத்து வரும் மஹாபொல லொட்டோ, தனது முதலாவது விற்பனையாளர் மாநாட்டின் போது, நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த சிறப்பாகத் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்த விற்பனைப் பிரதிநிதிகளைக் கௌரவித்திருந்தது. பிரதானமாக பெருமளவு பெறுமதி வாய்ந்த கொழும்பு மற்றும் காலி பிரதேசங்களைச் சேர்ந்த சிறப்பாகத் திறமைகளை வெளிப்படுத்தியிருந்த மொஹமட் மொஹைதீன் காசிம், திருமதி. கே.சேனநாயக்க, ஆசிரிபால மற்றும் நிமல்சிரி விக்ரமசேகர ஆகியோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகளை வழங்கியிருந்தது.

தமது வெற்றிகரமான செயற்பாடு தொடர்பில் காசிம் கருத்து தெரிவிக்கையில், 'ஒரு வருட காலப்பகுதிக்கு மேலாக மஹாபொல லொட்டோ உடன் பணியாற்றுவதன் மூலமாக, பெருமளவு அனுபவத்தை பெற்றுள்ளேன். அத்துடன், வாடிக்கையாளர்களுடன் எவ்வாறு பணியாற்றுவது என்பது தொடர்பிலும் அறிந்து கொண்டுள்ளேன். வாடிக்கையாளர்களுடன் நட்புறவாக பழகுவதன் மூலம், அவர்களை மீண்டும் மீண்டும் வரவைக்க முடியும் என்பதை அனுபவ ரீதியில் உணர்ந்து கொண்டேன' என்றார்.

மஹாபொல லொட்டோ கூட்டாண்மை தொடர்பாடல்கள் முகாமையாளர் ஹர்ஷினி சிறிநந்த கருத்துத் தெரிவிக்கையில், 'எமது சிறந்த விற்பனை பிரதிநிதிகளை கௌரவிப்பது என்பது அதிகளவு வரவேற்கத்தக்க விடயமாகும். அவர்களின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் அவர்களிடமிருந்து அறிந்து கொள்வது மூலமாக மஹாபொல லொட்டோ வலையமைப்பை மேலும் வளர்ச்சியடையச் செய்ய முடியும். சகல குழு அங்கத்தவர்களும் அவர்களின் சக அங்கத்தவர்கள் சிறப்பாக செயலாற்றியதைப் பார்த்துத் தாமும் சிறப்பாக செயலாற்றுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்' என்றார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், 'அண்மையில் மஹாபொல லொட்டோ கொழும்பு தலைமையகத்தைச் சேர்ந்த நபர் ஒருவர்




நாடு முழுவதும் விஜயத்தை மேற்கொண்டிருந்தார் இதன் போது பல விநியோகத்தர்களை இவர் சந்தித்து, வளர்ச்சிக்கானஅடுத்த கட்டமாக எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் கேட்டறிந்திருந்தார். மேலும், அவர்களின் கருத்துப்படி, மஹாபொல லொட்டோ என்பது வேகமாக வளர்ச்சியடையும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது. அடுத்து வரும் வாரங்களில் சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய பல செயற்பாடுகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது' என்றார். (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பான் கீ - மூனின் நம்பிக்கை பொய்த்துப் போகக் கூடாது

நாட்டின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.நா. சபையின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ளார். ஐ.நா. பொதுச் சபையில் உரை நிகழ்த்தவிருக்கும் ஜனாதிபதி உலகத் தலைவர்கள் பலரையும் சந்தித்து வருகிறார். ஏற்கனவே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசியுள்ள ஜனாதிபதி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவையும் சந்திக்க இருக்கிறார்.

சமீப காலம் வரை -- அதாவது கடந்த ஜனவரி 8 ஆம் திகதி வரை பதவியிலிருந்த ஜனாதிபதி, உள்நாட்டில் தம்மை ஒரு மகா வீரரைப் போன்று பாவனைசெய்து கொண்டு, வெளிநாடு செல்லும் போதெல்லாம் நூற்றுக்கணக்கான பரிவாரங்கள் மற்றும் அடிவருடிகள் புடைசூழ புறப்பட்டுச் செல்வார். அவருக்கென்று வாகன அணியொன்று வழி அனுப்பி வைக்க விசேஷ விமானம் அவரையும் பரிவாரங்களையும் ஏற்றிச் செல்லும்.

நாட்டில் மாபெரும் வெற்றியைச் சாதித்தவர், சிறுபான்மையினரை காலடியில் போட்டு மிதித்தவர் என்பது போன்ற திமிரும் ஒரு மமதைப் புன்னகையும் அவர் முகத்தில் பளிச்சிட்டுக் கொண்டிருக்கும். ஆனால் அதற்கு கடந்த ஜனவரி மாதத்தில் முற்றுப் புள்ளி வைத்த மூவின மக்களும் மிக எளிமையானவரும் ஜனநாயகவாதியுமான மைத்திரிபால சிறிசேனவை அரியாசனத்தில் அமர வைத்தார்கள். அந்த வகையில் மைத்திரிபால சிறிசேனவும் டாம்பீக தடல்புடல்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, அவசியமான ஒரு சிறு ராஜதந்திரக்குழுவும் அதிகாரிகளும் மெய்ப் பாதுகாவலர்களும் கொண்ட பரிவாரங்களுடன் வாஷிங்டன் சென்றுள்ளார். அங்கும் கூட தமக்கும் தமது குழுவினர்களுக்கும் பெரும் எடுப்பிலான விடுதிகள் மற்றும் மதுபானங்கள், ஆபாச தொலைக்காட்சிகள், களியாட்டங்கள் எதுவும் கிடைக்காத வகையிலான ஏற்பாடு செய்யும்படி அவர் உத்தரவிட்டிருந்ததாகவும் அறியவந்துள்ளது.

சிறுபான்மை மக்களை அடித்து நொறுக்கி அந்த வெற்றி மீது ஆட்சியில் அமர்ந்துவிட்ட ஆணவமோ, அலட்சியமோ அவரிடம் காணப்படவில்லை. மாறாக சிறுபான்மையினரான தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவில் பதவிக்கு வந்தவர் என்ற பவ்வியமும், இலங்கை நாட்டின் சகலதரப்பு மக்களதும் ஜனாதிபதி என்ற பெருந்தன்மையும் அவரிடம் காணப்பட்டன.

அதனாலேயே, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியூயோர்க்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முதன் முதல் சந்தித்தபோதே, இலங்கையின் சிறுபான்மை மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களை விரைவாக ஆரம்பிக்கும்படி அழுத்தம் கொடுத்துள்ளார்.

போர் முடிந்திருந்த காலகட்டத்தில் இலங்கை வந்திருந்த ஐ.நா. செயலாளர் நாயகம் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இவ்வாறான பேச்சுக்களை நடத்தியிருந்தார். இருவரும் ஏற்றுக் கொண்ட பல விடயங்கள் அடங்கிய கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. குறிப்பாக இந்திய - இலங்கை உடன்படிக்கையின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கு மேலாகவும் சென்று தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்குவார் என்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை முன்பெடுப்பார் என்றும், இலங்கை ஜனாதிபதி வாக்களித்திருந்தார். ஒரு தனிநாட்டின் தலைவருடன் செய்து கொண்ட உடன்பாடு அல்ல. அது நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட உலகநாடுகளின் மகாசபையின் செயலாளர் நாயகத்துக்கு வழங்கிய வாக்குறுதியாகும். கடந்த அரசினாலும் அதன் தலைவர்களாலும் அது உதாசீனம் செய்யப்பட்டது. காற்றில் பறக்க விடப்பட்டது. அதன் விளைவுகளையே இந்தநாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

பான் கீ - மூன் இவை அனைத்தையும் மனதில் வைத்துக்கொண்டே, இப்போதைய ஜனாதிபதி முன்னவர் போன்று பொறுப்பற்றுச் செயற்படமாட்டார் என்ற நம்பிக்கையில் பல விடயங்களை வலியுறுத்தியுள்ளார்.

சிறப்பாக "இந்தச் சந்தர்ப்பத்தைக் கைப்பற்றிக் கொள்ளுங்கள். நாட்டில் நீடித்த அமைதிக்கும் உறுதிப்பாட்டுக்கும் அடித்தளமிடுங்கள்" என்று பான் கி மூன் ஜனாதிபதியைக் கேட்டிருப்பது கவனத்துக்குரியது.

அரசியல் தீர்வொன்றை அவசரமாக காண்பதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம் என்பது செயலாளர் நாயகத்தின் நம்பிக்கை. செயலாளர் நாயகம் மட்டு மல்ல இன்று ஜெனிவாவில் கூடியுள்ள மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளும் இதனையே வலி யுறுத்துகின்றன.

போரின் போது இடம்பெற்ற மகா கொடுமைகளுக்கு நீதியை நாடி நிற்கும் தமிழ் மக்கள் அதற்கு அடிப்படையாக இருந்துள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றே வலியுறுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பான் கி மூன் இடித்துக்கூறியுள்ள கருத்துக்கள், தென்னிலங்கைத் தலைவர்களை விரைந்து செயற்பட வைக்கும் என்று எதிர்பார்ப்போம்.

# தலைகுனியும் குடாநாடு

மதுமிதன்

> நாட்டில் இடம்பெறுகின்ற கொலைச் சம்பவங்களை ஆராய்ந்து பார்க்கின்றபோது அவை பெரும்பாலும் முன்விரோதம் அல்லது காழ்ப்புணர்வு என்பவற்றினால், ஏற்படும் பழிவாங்கும் உணர்வு காரணமான திட்டமிடப்பட்ட கொலைகளாகவோ அல்லது திடீர் கோபாவேசத்தினால் ஏற்படும் கைமோசக் கொலைகளாகவோ அமைகின்றன.

புங்குடுதீவில் பாடசாலை மாணவி வித்தியாவின் மிலேச்சத்தனமான படு கொலையுடன் தலை குனிந்திருந்த யாழ். குடாநாடு இந்த வாரம் மீண்டுமொரு மனிதாபிமானமற்ற கோரத் தாண்டவத்தால் மீண்டும் தலைகுனிந்திருக்கின்றது. முன்னொரு காலத்தில் திருமூலரால் சிவபூமி என்று அழைக்கப்பட்ட யாழ்ப்பாணம் அன்பு, ஜீவகாருண்யம், பொறுமை, சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுப்பு போன்ற உயர்ந்த விழுமியங்களைக் கைக்கொண்டு வாழ்ந்த ஆசார சீலர்கள் நிறைந்த இடமாக விளங்கியது. ஆனால் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் யாழ்ப்பாணம் காட்டுமிராண்டிகளும், பண்பற்ற மனிதர்களும் வாழ்கின்ற ஒரு பிரதேசமோ என்று மற்றவர்களை நினைக்க வைக்கின்ற நிலைமைக்கு இட்டுச் செல்கின்றது. அதற்குச் சிகரம் வைத்தாற்போல கடந்த வாரம் யாழ்ப்பாணத்தின் இதயப்பகுதியாக விளங்குகின்ற யாழ். மத்திய பஸ் நிலையப் பகுதிக்கு அண்மையில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்று அமைந்துள்ளது.

சட்டத்தைக் கையிலெடுத்த ஒரு சமூக விரோதக் கும்பலால் ஓர் அப்பாவி மனித உயிர்காவு கொள்ளப்பட்டுள்ளது. மணமாலை சூடி ஒரு வாரம் கழிய முன்னரே ஒருவருக்கு பிணமாலை சூடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. காட்டு மிராண்டிக் கும்பலொன்றினால் இரும்புக் கம்பியால் கடுமையாகத் தாக்கப்பட்ட தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் ஒரு வாரத்துக்கும் அதிகமான நாள்கள் சிகிச்சை பெற்றும் சிகிச்சை பயனளிக்காமல் இறந்துள்ளார். அதாவது சட்ட விரோத கும்பலொன்றினால் ஈவிரக்கமில்லாமல் தாக்கப்பட்டு இடது கை முறிவடைந்த நிலையில் தலையில் ஏற்பட்ட பாரதூரமான காயத்தினால் சாவைத் தழுவியுள்ளார்.

நாட்டில் இடம்பெறுகின்ற கொலைச் சம்பவங்களை ஆராய்ந்து பார்க்கின்றபோது அவை பெரும்பாலும் முன்விரோதம் அல்லது காழ்ப்புணர்வு என்பவற்றினால் ஏற்படும் பழிவாங்கும் உணர்வு காரணமான திட்ட மிடப்பட்ட கொலைகளாகவோ அல்லது திடீர் கோபாவேசத்தினால் ஏற்படும் கைமோசக் கொலைகளாகவோ அமைகின்றன. ஆனால் இங்குஇடம்பெற்ற கொலை இவை எவற்றிலும் சாராமல் தட்டிக்கேட்க ஆளில்லாத சண்டப்பிரசண்டர்களால் மேற்கொள் எப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி 2 ஆம் ஒழுங்கையில் வசிக்கும் மாதவமணிவண்ணன் – தர்சினி என்ற யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியை, கொட்டகலை றொசிற்றா வீடமைப்புத் திட்டத்தை சேர்ந்த சண்முகவேல் மாதவமணிவண்ணனை மணம் முடித்து ஏழு நாள்களே ஆகியிருந்தன. சம்பவ தினத்தன்று நெல்லியடியிலுள்ள உறவினர்களையும் பார்த்து விட்டு திருமணமாகிய புதிய தம்பதியினர் என்பதால் கோயிலுக்கும் சென்று விட்டு இரவு ஒன்பது மணி அளவில் வீட்டுக்குத் திரும்பியிருந்தனர். வீட்டுக்கு வந்த பின்னர் வீட்டில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் இருந்ததால் தண்ணீர் வாங்குவதற்காக வெளியே வந்த அவர்கள் வீட்டிலிருந்த குப்பைகளை [illegible] [illegible] பைத் தொட்டிக்குள் போட்டு விட்டு நடந்து சென்று உணவகமொன்றில் தண்ணீர்ப் போத்தலை வாங்கிய பின்னர் தேநீரும் அருந்தி விட்டு வீடு செல்வதற்காக வெளியே வந்துள்ளனர். நடந்து சிறிது தூரம் வந்தபோது நேரம் பத்து மணியை எட்டியிருந்தது. அந்த நேரம் சடுதியாக அவர்களைச் சுற்றி வளைத்த மதுபோதையில் இருந்த கும்பலொன்று கெட்ட வார்த்தைகளால் கேவலமாகப் பேசியவாறு போக விடாமல் தடுத்து வைத்துள்ளது. தாங்கள் கணவன் – மனைவி என்றும், திருமணமாகியவர்கள் என்று கூறியும் அவர்களை அந்தக் கும்பல் போகவிடவில்லை. திருமணமாகியிருந்தால் திருமண பதிவுச் சான்றிதழை காட்டுமாறும் கேட்டு அவர்களை மிரட்டிய அந்தக் கும்பல் தொடர்ந்தும் கீழ்த்தரமாக நடந்து கொண்டுள்ளது. பலவாறு மன்றாடிக் கேட்டும் அவர்களை போக விடாததால் மனைவியான தர்சினி அவருடைய சகோதரனான சிவஞானம் சுகிர்தராஜ் என்பவருக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து தங்களைப் பத்துக்கும் மேற்பட்ட நபர்கள் தடுத்து வைத்துள்ளதாகவும் வந்து காப்பாற்றுமாறும் கோரியுள்ளார். அதற்கு அவரது சகோதரர் உடனடியாக பொலிஸாரின் துரித அழைப்பான 119 க்கு அழைப்பெடுத்து முறையிடுமாறும் தான் உடனடியாக வருவதாகவும் கூறியுள்ளார்.

கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் வரையும் அவர்களை தடுத்து நிறுத்தி வைத்துள்ளது அந்தக் கும்பல். இடைப்பட்ட நேரத்துக்குள் பொலிஸாருக்கும் பலமுறை அழைப்புக்கள் மேற்கொண்டும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து சேரவில்லை. பின்னர் தொலைபேசி அழைப்பைப் பெற்ற சகோதரன் தன்னுடைய தமக்கையும் கணவனும் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு வந்து நிலைமையை ஊகித்து மதுபோதையிலிருந்த கும்பலுடன் சமாதானமாகப்பேசி அவர்களைக் கூட்டிக்கொண்டு நடந்த சென்றுள்ளார். சிறிது தூரம் அவர்கள் நடந்து செல்வதற்கு முன்பாக அங்கு திரும்பவும் வந்த அந்தக் கும்பல் திருத்தவேலைகள் நடைபெற்று கொண்டிருந்த கடையொன்றிலிருந்த இரும்புக்கம்பியினால் மூவரையும் கடுமையாகத் தாக்கியுள்ளது. அந்த மோசமான தாக்குதலால் மூவரும் கடுங்காயத்துக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மாதவ மணி வண்ணன் சிகிச்சை பயனளிக்காமல் பின்னர் சாவைத் தழுவியுள்ளார்.

காயமடைந்தவர்களின் கூற்றுப்படி பொலிஸாரின் அசண்டைத்தனமும் இந்தக் கொலைக்கு ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது. யாழ். நகரின் மத்திய பகுதியில் அமைந்திருக்கின்ற பஸ் நிலையத்துக்கு 500 மீற்றர் தொலைவும் இல்லாத தூரத்தில் அமைந்திருக்கின்ற பொலிஸ் நிலையத்திலிருந்து தாக்குதல் சம்பவம் நடந்து முடியும் வரையும் பொலிஸார் குறித்த இடத்துக்குச் செல்லவில்லை. கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலத்துக்கும் அதிக நேரம் கும்பல் அவர்களைத் தடுத்து வைத்திருந்த போதும் பொலிஸார் வந்து அவர்களை மீட்கவில்லை. அது தவிர அந்தப் பிரதேசத்திலிருந்த பொது மக்கள், முச்சக்கர வண்டிச் சாரதிகள், கடைக்காரர்கள் யாருமே இந்தச் சம்பவத்தை தட்டிக் கேட்க முன்வரவில்லை. அல்லது பொலிஸாரை அழைக்க முன்வரவில்லை. காயமடைந்தவர்களின் கூற்றுப்படி அந்தப் பகுதியில் இருந்த முச்சக்கரவண்டிச் சாரதிகள் சிலரும், சில வர்த்தக நிலைய உரிமையாளர்களும் தம்மைத் தாக்கியோரில் இருந்ததாகத் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் யாழ். மக்கள் மத்தியில் பலத்த பீதியை உண்டு பண்ணியுள்ளது. நாளாந்தம் இரவு பகல் என்று இல்லாமல் ஆயிரக் கணக்கானோர் வந்து போகும் பகுதியில் இவ்வாறான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளமை மக்களின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இவ்வாறான ஒரு முக்கியமான இடத்தில் பொலிஸ் காவலரண் ஒன்றோ அல்லது பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு நடவடிக்கையோ மேற் கொள்ளப்படாதது ஏன் என்ற கேள்வியும் எழுகின்றது. திருமணமான தம்பதியர் அதாவது ஓர் ஆணும் பெண்ணும் வெளியே போவதற்குக்கூட பாதுகாப்பில்லாத பிரதேசமாக யாழ்ப்பாணம் மாறிவருகிறதா? என எண்ணத் தோன்றுகின்றது. பெண்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் அச்சுறுத்தல் மற்றும் அடக்குமுறையின் மற்றொரு வெளிப்பாடுதான் இந்தக் கொலைச் சம்பவம்.

இது யாழ்ப்பாணத்தின் சட்டத் துறைக்கும், நீதித்துறைக்கும் விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே எண்ணத்தோன்றுகின்றது. கடந்த வாரம் யாழ். மேல் நீதிமன்றின் கௌரவ நீதிபதி அவர்கள் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அதிரடிப் படையைத் துணையாகக் கொண்டு செயற்படுமாறு பொலிஸாருக்கு கட்டளையிட்டு சில நாள்களுக்குள் யாழ். நகரத்தின் மையப்பகுதியில் இந்தக் குற்றச் சம்பவம் அரங் கேற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் வெலிங்ரன் சந்திப் பகுதியில் புகைப்பட நிலையமொன்றை நடத்தி வரும் யாழ்ப்பாணம் அரசடிப் பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவர் கைது செய்யப் பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய இன்னொருவரும் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

நாளாந்தம் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்லும் யாழ். நகரத்தில் பொலிஸாரின் பிரசன்னத்தை காண்பதே அரிதாக உள்ளது. காலை வேளைகளிலும் நெருக்கடியான நேரங்களிலும் போக்குவரத்து பொலிஸாரைக்கூட யாழ் நகரின் மத்திய பகுதிகளில் காணக்கூடியதாக இருப்பதில்லை.

இப்போதுள்ள கேள்விகள் என்னவெனில், பொலிஸார் தமது பலவீனங்களை அடையாளம் கண்டு கொண்டு குற்றத்தடுப்பு முறைமையை சீர்செய்து கொண்டு, நடந்து முடிந்த இந்தக் குற்றத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வார்களா என்பதுடன் இனி எதிர்காலத்தில் இடம்பெற இருக்கின்ற குற்றச் செயல்களையும் தடுத்து நிறுத்துவார்களா என்பதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பஸ்களுக்கு விமோசனம் கிடைக்காதா?

எம்மிடையே எவ்வளவு போக்குவரத்துச் சாதனங்கள் புழக்கத்துக்கு வந்தாலும் எமது போக்குவரத்துக்காக நாம் பெரிதும் நம்புவது பஸ்களைத்தான். வரப்பிரசாமாகக் கிடைத்தவை இப்போது தடங்கல்களை ஏற்படுத்துவது தான் வருந்தத்தக்க விடயம். இதற்கு எம்மவர்கள்தான் காரணம்.

கடந்த 19 ஆம் திகதி அன்று 5 மணியளவில் யாழ்ப்பாணம் செல்வதற்காக நாச்சிமார் கோயிலடியில் பேருந்துக்காகக் காத்திருந்தேன். என்னோடு எட்டுப்பேர் நின்றார்கள். சனநெரிசலுடன் தனியார் பஸ்ஸும் (மினிபஸ்) அதன் பின்னால் இ.போ.ச. பஸ்ஸும் (சனநெரிசலின்றி) வந்தன. எவரும் நெரிசலின்றிப் பயணிக்கவே விரும்புவர். ஆனால் நாம் மறித்தும் இ.போ.ச. பஸ் நிற்கவேயில்லை. மாறாக மினிபஸ் நின்றது. நாங்களும் செல்ல வேண்டிய இடம் சென்றால் போதுமென்று நெரிசலின் மத்தியிலேயே வந்து சேர்ந்தோம். நான் பொறுக்க முடியாமல் யாழ்ப்பாணம் இ.போ.ச. பஸ் நிலையம் சென்று முகாமையாளரிடம் நடந்த சம்பவம் பற்றி முறையிட்டேன். ஆனால் அவர் அதை அலட்சியமாகத்தான் எடுத்துக் கொண்டார்.

ஏனெனில் இது இன்று நேற்றல்ல. தினமும் நடக்கிறது. மாவிட்டபுரத்தில் இருந்து வரும் இ.போ.ச. பஸ்கள் மினிபஸ்ஸை முன்னாடி செல்லவிட்டு தாங்கள் மிகவும் மெதுவாகவே செல்கின்றன. சுன்னாகம் வந்ததும் வேகமாகச் சென்று இணுவில் பகுதியில் மறுபடியும் உருட்டல்தான். சிலவேளைகளில் அவசரமாகச் செல்லவேண்டும் என இராணுவத்தினர் கே.கே.எஸ்.இல் ஏறினால் மினிபஸ்ஸை விரட்டி வந்து அவர்களை இறக்கி மினிபஸ்ஸில் மாற்றி ஏற்றி விட்டு மறுபடியும் பஸ்ஸை உருட்டுகிறார்கள். இதனால் பயணிகள் மிகவும் எரிச்சலடைகிறார்கள். பணம் கொடுத்துச் செல்பவர்கள் பணத்தைக் கொடுத்து மினிபஸ்ஸில் செல்லலாம். ஆனால் பருவகாலச் சீட்டில் (சீசன் ரிக்கற்) பயணிப்பவர்களின் நிலை என்ன? சகித்துத்தான் ஆகவேண்டும். எனவே இதற்கு உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துத் தினமும் பாதிக்கப்படும் பயணிகளுக்கு விமோசனம் பெற்றுத் தருமாறு பயணிகள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

– *எஸ்.அரவிந்தன்,*
யாழ்ப்பாணம்.

# முள்ளி மயானத்தைத் திரும்பிப் பார்ப்பீர்களா?


பருத்தித்துறை கொடிகாமம் பிரதான வீதியில் அமைந்துள்ள முள்ளி பொதுமயானம் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாததால் பற்றைகளாலும் செடி கொடிகளாலும் மூடிய நிலையில் காட்சியளிக்கின்றது. அதுமட்டுமல்லாது மயானத்தில் இறுதிக் கடமைகளை நின்று செய்யும் மடம் விழும் நிலையிலும் உள்ளது. இங்கு உடல்களைத் தகனம் செய்யச் செல்வோர் மிகப் பெரும் இடையூறுகளுக்கு மத்தியில் மழை வெயிலில் நின்றவாறு கடமைகளைச் செய்ய வேண்டிய பரிதாபமான நிலை காணப்படுகிறது. இந்த மயானத்தில் தற்போது பல கல்லறைகள் உயிர் நீத்தோர் நினைவாக கட்டப்பட்டுள்ளன. அவர்களின் ஞாபகார்த்த தினத்தில் உறவினர்கள் தமது உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி வரும் நிலையில் அந்தக் கல்லறைகளைக் கூட செடி கொடிகள் மூடி வருவது மனித உயிர்களுக்கே வெட்கக்கேடான மனித நேயமற்ற செயலாகும்.

மனிதனுடைய வாழ்வு என்றுமே நிலைப்பதில்லை. என்றோ ஒரு நாள் சாவை அரவணைத்து ஒவ்வொரு மனிதனும் மயானத்துக்குச் செல்லவேண்டியே நேரும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளே! தாயகத்தில் இதுபோன்று மயானங்கள் இருப்பின் கண்டும் காணாமல் இருக்காமல் உரிய நடவடிக்கை எடுத்து புனரமைப்புச் செய்ய முன்வாருங்கள். எமது இறுதிக்கட்ட இடம் மயானம் என்பதைத் தயவுசெய்து மறந்து விடாதீர்கள். தவறு செய்தால் மயானம்கூட உங்களுக்குத் தண்டனைதான் வழங்கும். எனவே முள்ளி மயானத்தையும் ஒருகணம் திரும்பிப்பார்ப்பீர்களா?

– ***அ.அன்பு,*** அக்கினிப்புயல்,(வரணி)

## வாசகர் திருமுகம்



# வரணிப் பிரதேசத்தில் வங்கிக் கிளை உருவாகுமா?

வரணிப் பிரதேசத்தில் இதுவரை அரச வங்கிக் கிளைகள் நிறுவப்படாததால் பொதுமக்கள் குறிப்பாக வயோதிபர்கள் பெரும் அவல நிலைக்கு உள்ளாகி வரும் நிலை காணப்படுகிறது. இந்தப் பகுதி மக்கள் வங்கித் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமானால், கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறை போன்ற இடங்களுக்கே செல்ல வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையால் நேரவிரயமும், வீணான பணச்செலவும் ஏற்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இந்தப் பிரதேசத்தில் வரணி மத்திய கல்லூரிக்கு அருகே சமுர்த்தி வங்கி அலுவலகம் ஒன்று மட்டும் தற்போது இயங்கி வருகின்றது. எனவே இந்தப் பிரதேசத்திலும் மக்கள் நலன் கருதி சமூக நலன் விரும்பிகள் அக்கறை எடுத்து ஒரு வங்கிக் கிளை உருவாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் எனப் பிரதேசவாசிகள் எதிர்பார்க்கின்றனர்.

– ***தமிழ்மறவன்,***
கறுக்காய்.

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# சந்தேகக் கண் கொண்டு நோக்கும் தமிழர் தரப்பு

ஜெனிவாவில் இன்று வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மான வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களில் குறிப்பாக, சர்வதேச விசாரணை என்ற விடயம் தவிர்க்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமிழ்த் தரப்பினர் திருப்தி கொள்ளவில்லை என்பதை பலதரப்பட்டவர்களிடமிருந்தும் வருகின்ற கருத்துகள் வெளிப்படுத்துகின்றன.

அமெரிக்கா தலைமையில் கொண்டுவரப்படுகின்ற இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதற்கு இலங்கை முன்வந்தமை தொடர்பிலும் பல்வேறு சந்தேகங்கள் வெளியிடப்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதனை எடுத்த எடுப்பில் வரவேற்றிருக்கக்கூடாது என்ற கருத்துகளும் வெளியாகியுள்ளன.

ஜெனிவாவில் இம்முறை நடைபெறும் விடயங்கள் தொடர்பில் கரிசனைகொண்டிருக்கின்ற தரப்பினர் சில விடயங்களை மனதில் தெளிவாக நிறுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். 2012ஆம், 2013ஆம், 2014ஆம் ஆண்டுகளில் இலங்கை தொடர்பாக கொண்டுவரப்பட்ட அனைத்துத் தீர்மானங்களையும் முற்றாக நிராகரித்திருந்த இலங்கை அரசு, இம்முறை அதன் போக்கில் மாற்றத்தைக் காண்பித்து இணை அனுசரணை வழங்கியிருக்கின்றது. போரில் வெற்றியைப் பெற்றுக்கொடுத்த படையினருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் எடுக்கப்போவதில்லை எனக் கூறிவந்த அரசு, தற்போது பொறுப்புக்கூறல் விடயத்தில் அர்ப்பணிப்புடன் நடந்துகொள்வதாக பகிரங்க வாக்குறுதியளித்துள்ளதுடன், வெளிநாட்டு மற்றும் பொது நலவாய நீதிபதிகளை உள்ளடக்கியதான நம்பகரமான உள்நாட்டுப் பொறிமுறை மூலமாக நீதியைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைக்கு முன்வந்திருக்கின்றது.

தமிழராகிய எமது எதிர்பார்ப்பின் அடிப்படையில் இது போதாது என்றாலும் இவ்வருட முற்பகுதியில் இருந்த மகிந்த அரசின் நிலைப்பாட்டுடன் ஒப்பிடும்போது இது ஒரு பெரும் முன்னேற்றம் என்பதை மறுதலிக்கமுடி யாது. போர்க் குற்றம் தொடர்பாக கதைப்பதற்கோ, எழுதுவதற்கோ முடியாதிருந்த நிலைமாறி எமது நீதிக்கான வேட்கையை அச்சமின்றி வெளிப்படுத்துவதற்கான கருத்து வெளியிடும் சுதந்திரம் தற்போதைய நிலையில் காணப்படுகின்றமையையும் பாராட்ட வேண்டும்.

தற்போதைய மைத்திரி - ரணில் அரசு பொறுப்புக் கூறல் விடயத்தை மட்டுமன்றி, தமிழர்களின் ஏனைய விடயங்களையும் வித்தியாசமாக அணுகுகின்றது என்பதை அதன் எட்டுமாத கால செயற்பாடு புலப்படுத்தி நிற்கின்றது. இது வெறுமனே ஜெனிவாவில் எதிர்கொண்ட நெருக்கடி நிலையில் இருந்து கழன்றுகொள் வதற்கான் கண்துடைப்புச் செயற்பாடுகளா அன்றேல் மனந்திருந்தலுடன் கூடியதாகப் பக்குவமிக்க மாற்றத்தின் வெளிப்பாடுகளா என்பதை அறிந்துகொள்வதற்கு இன்னமும் பல வருடங்கள் காத்திருக்கத் தேவையில்லை. அடுத்துவரும் மாதங்களில் அரசு அடியெடுத்துவைக்கும் பாதையிலிருந்தே இதனை உணர்ந்துகொண்டுவிட முடியும்.

நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தின் வழிகாட்டுதலுக்கு அமைவாக ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மின்னஞ்சலில் இலங்கை தொடர்பாகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மான வரைவின் தமிழ்மொழி பெயர்ப்புடன் இலங்கையின் அரசியல் சாசனத்திலுள்ள 13ஆவது உறுப்புரையின் 6ஆம் இலக்க இரண்டாவது பந்தியும் இணைக்கப்பட்டிருந்தது. இது இலங்கையின் தற்போதைய அரசமைப்புக்கமைவாக சர்வதேசச் சட்டத்தின் கீழ் குற்றங்களாகவும் தவறுகளாகவும் காணப் படும் விடயங்கள் தொடர்பில் நடவடிக்கையெடுக்க முடியும் என்ற விடயத்தைக் கோடிட்டுக் காட்டிநிற்கின்றதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

இலங்கையில் அரசியல்சாசனம் தற்போதைய தேவைப்பாடுகளைத் தாங்குவதற்குப் போதுமான்தாக இல்லை. புதிய அரசியல் சாசனம் இன்றியமையாதது என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இருக்கின்ற அரசியல் யாப்பிலிருந்து சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயத்தை வைத்து ஒரு விடயத்தைத் தெளிவாகச் சொல்ல முடியும். இதுவரைகாலமாக பதவியிலிருந்த அரசாங்கங்கள் அரசியல் யாப்பிலுள்ள நல்ல விடயங்களைக்கூட நடைமுறைப்படுத்த முன்வந்திருக்க வில்லை. இதற்கு அரசியல் திராணி அவற்றிடம் காணப் படாமையே முக்கிய காரணமாக அமைந்தது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் முன்பாகவும் சர்வதேச சமூகத்தின் முன்பாகவும் கடந்த 8 மாதங்களாக அளித்துவந்த வாக்குறுதிகளையும் காண்பித்த நல்லெண்ண சமிக்ஞைகளையும் அரசியல் திராணியுடன் நிறைவேற்றுமிடத்து இன்று சந்தேகக்கண் கொண்டு நோக்கும் தமிழர் தரப்பினரின் மனங்களையும் வென்றெடுக்கமுடியும் .

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு நல்லாட்சியும் மீட்சி தராதா?

இலங்கையில் நடைபெற்ற ஈழத்தமிழினத்தின் போராட்டமானது ஆயுதப் போராட்டமாக வடிவம் பெற்று மூன்று தசாப்தகாலம் வரை அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் போராக நடை பெற்று வந்தது. ஆயுதப் போராட்டம் இலங்கையின் கடந்தகால ஆட்சியாளர்களால் தோற்கடிக்கப்பட்டு ஆறு ஆண்டு காலம் கடந்து விட்டது. முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற தமிழின விடுதலைப் போரில் தமிழினம் விடுதலை பெறாத நிலையில் முன்னாள் ஜனாதிபதி களான சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ச ஆகியோரது காலத்தில் அரசுப் படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் விவகாரமானது இன்று வரையில் விடுதலைக்கான முடிவுக்கு காலம் வராத நிலையில் மைத்திரி ஆட்சியிலும் கேள்விக்குறியாக ஆகியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ்மக்களின்வாக்குகளால்வெற்றி பெற்றவர் என்பது நாடறிந்த விடயமாகும். தமிழ் மக்களுக்குதான் கடமைப்பட்டவர் என்பதை பதவியேற்றபோது, வெளிப்படையாக்க் கூறியவர். இருபது வருடங்களுக்கு மேலாக 600 தமிழ் அரசியல் கைதிகள் வரையில் சிறைகளில் வெளி உலகம் தெரியாதவாறு அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இன்னல்கள் சொல்லிலடங்காதவை. வார்த்தைகளில் கூறமுடியாதவை. தமிழ் அரசியல் கைதிகளை இந்த வருட முடிவுக்குள் விடுதலை செய்வோம். தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் நடவடிக்கையை தொடர்ந்து எடுத்து வருகின்றோம். விசாரணைக்காக சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளோம், விரைவில் விடுதலையாவார்கள். இப்படி ஜனாதிபதி, அமைச்சர்களான சுவாமிநாதன், விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்டோர் தொடக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை கூறிக் கொண்டிருக்கின்றனரே தவிர, 600 தமிழ் அரசியல் கைதிகளின் துரிதமான விடுதலையைத் தீவிரப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முயற்சிகள் போதாது அல்லது சந்தர்ப்பம் கிடைக்கின்றபோது, நடவடிக்கை எடுக்கின்றோம் எனக் கூறுவது, பின்னர் ஆறப்போடுவது என்றவாறு அவர்களின் நிலைமை இருக்கின்றது.

மூன்று தசாப்த காலப்போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஆறு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இலங்கை நாட்டிலிருந்து இன்று வரையில் பயங்கரவாதம் முற்று முழுதாக ஒழிக்கப்படவில்லை என்பதன் அடையாளம் தான் தமிழ் அரசியல் கைதிகள் என்ற அடையாளப்படுத்தலுடன் இன்னமும் சிறைகளில் விடுதலையடைய முடியாத நிலையில் நல்லாட்சி அரசிலும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பது தமிழ் அரசியல் கைதிகளின்உறவினர்கள்மத்தியில்பெரும் மன உளைச்சலையும் வேதனையையும் விரக்தியையும், பொறுமையற்ற நிலைமையையும் தீவிரமாக்கியுள்ளது.

மைத்திரி ரணில் ஒன்று சேர்ந்த தேசிய அரசு பதவியேற்று ஒரு மாதம் ஆகிவிட்டது. எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் செயற்பட்டு வருகின்றார்.

கடந்த காலங்களில் நீண்ட காலமாகவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அவை காற்றில் பறக்க விடப்பட்ட விடயங்களாகவே இருக்கின்றது. மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற நவம்பர் மாத வரவு–செலவுத்திட்டத்தின்போது, அதில் கலந்துகொண்டு உரையாற்றிய இன்றைய ஆட்சியில் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுள்ள திருமதி விஜயகலா மகேஸ்வரன் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்த்தரப்பிலிருந்த போது, அழுத்தம் கொடுத்துப் பேசியிருந்தார். 2014 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையின்போது, யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவனும் மகசின் சிறைக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து பொருள்களை வழங்கியதுடன், அவர்களின் விடுதலைக்கு முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் வாக்குறுதியளித்திருந்தார். இன்று வரையில் எதுவும் நடைபெற வில்லை.


போரின் எச்சங்களாகப் பயங்கரவாதத்தின் பெயரால் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் இளைஞர்கள், யுவதிகள் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இன்னல்கள், துன்பங்கள் கொடுமையானவை. 18.05.2009 அன்று அப்போதைய ஜனாதிபதியாகப் பதவியிலிருந்தவரான மகிந்த ராஜபக்ச இலங்கை நாட்டிலிருந்து பயங்கரவாதம் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டு விட்டது என்றும்– பயங்கரவாதமற்ற ஒரு தேசத்தில் நாம் காலடி எடுத்து வைத்துள்ளோம் என நாட்டு மக்களுக்கும், சர்வதேசத்துக்கும் தெரிவித்திருந்தார். அப்படிக் கூறியவர் தனது ஆட்சிக் காலத்தில் 10 – 20 ஆண்டுகளாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருந்தது ஏன்?

போர் முடிந்து விட்டது. தமிழர்களின் வாழ்வில் சுதந்திரமும், அமைதியும் உருவாகிவிட்டது. எந்த வொரு தமிழர்களும் தனது உயிர் குறித்து அச்சப்படத் தேவையில்லை என்று கூறப்பட்டது. ஆனால் பயங்கரவாதத்தின் பெயரால் கைது செய்யப்பட்டு 10–20 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற 600 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்களுக்கு இன்றும் உத்தரவாதம் இல்லாத நிலைதான் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் [illegible] தமிழ் அரசியல் கைதிகள் [illegible] குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதும், படையினரினதும், சிறைச்சாலை அதிகாரிகளாலும் சித்திரவதைப்படுத்தப்பட்டு கை, கால்களிலும் விலங்கு பூட்டப்பட்ட நிலையில் கொன்றொழிக்கப்பட்டிருந்தனர். சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக எத்தனையோ விதமான போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் உறவுகளாலும் மற்றும் தமிழ்க்கட்சிகள், அமைப்புகளாலும் நடத்தப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக மகிந்த அரசுடன் ஏராளமான பேச்சு வார்த்தைகள் நடந்தேறின. ஜனாதிபதி மைத்திரி ஆட்சியிலும் பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை சம்பந்தமாக ஆராயப்பட்டிருந்தன. எந்தவிதமான பலாபயன்களும் கிடைக்கவில்லை.

தமிழ் அரசியல் கைதிகள் கேட்பதெல்லாம் தங்கள் மீது குற்றங்கள் இருப்பின் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விசாரணை நடத்துங்கள், இல்லையெனில் தங்கள் மீது எந்தவிதமான குற்றச் சாட்டுக்களும் சுமத்துவதற்கு எந்த விதமான போதியளவு ஆதாரங் களும் இல்லையெனில் விடுதலை செய்யுங்கள். நிபந்தனையற்ற விடுதலை என்பதை தங்களால் ஏற்றுக்கொள்ளவும் முடியாது எனவும் கூறிப் போராட்டங்கள் பலவற்றையும் சிறையில் முன்னெடுத்திருந்தனர். சிறையிலே சிறைக் கைதிகள் பலர் தங்களது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா விரதப் போராட்டங்களையும் நடத்தியிருந்தனர்.

மகிந்த ஆட்சிக் காலத்தின்போது, தமிழ் அரசியல் கைதிகள் பலர் சிறைகளில் தாக்குதல்களுக்குள்ளாகினர். படையினரைக் கொண்டும் சிறை அதிகாரிகளாலும் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டங்கள் ஒடுக்கப்பட்டன. இரண்டு கைதிகளின் சாவினால் போராட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலையில் அவல வாழ்வைத் தொடர்ந்த படியிருக்கின்றனர்.

மகிந்த ஆட்சியின்போது, நீதி அமைச்சராக இருந்த சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ரவூப் ஹக்கீம் தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைகளை ஓரளவாவது ஏற்றுக் கொண்டு நடவடிக்கைகள் எடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் பயன் பூச்சியமாகவே இருந்தது. நீதி அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட [illegible] தமிழ் அரசியல் கைதிகள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்தப் போவதாக உறுதியளித்திருந்தார். எதுவுமே நடைபெறவில்லை. சட்டமா அதிபர் திணைக்களமும் தமிழ் அரசியல் கைதிகள் விசாரணைக்கான விடயத்தில் குற்றப் பத்திரங்களைத் தாக்கல் செய்யாமல் காலத்தைக் கடத்திவிட்டது. ஒரு நாட்டின் அரசியல் ரீதியான மோதலின் காரணமாகப் படையினரால் கைது செய்யப்படுபவர்கள் தான் அரசியல் கைதிகள் என்கிற அடையாளப்படுத்தலுடன் சிறைகளில் தடுத்து வைக்கப்படுகின்றனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்றவர்களினதும் உயிருக்கு உத்தரவாதமளிப்பதும் அதற்கு பொறுப்புக் கூறுவதும் அவர்களது சுயகௌரவத்துக் களங்கம் ஏற்படாத வகையில் அவர்களது சுய கௌரவத்தைப் பாதுகாப்பதும் அந்தந்த நாட்டு அரசினதும் கடமையாகும்.




ஒரு நாட்டில் இன முரண்பாட்டு மோதல்கள் முற்று முழுதாக முடிவுற்ற பின் அரசியல் கைதிகள் என்ற பெயருடன் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் அனைவரும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது சர்வதேச போரியல் நியதி. ஆனால் மேற்கூறப்பட்டவை யாவையுமே இலங்கையில் மகிந்த ஆட்சிக் காலத்திலும் நடைமுறைப்படுத்தப் படவேயில்லை. ஜனாதிபதி மைத்திரி ஆட்சிக்கு வந்து ஒன்பது மாதமாகி விட்ட போதிலும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் சிறிதளவேனும் நடவடிக்கைகளுக்குத் தயாராகவேயில்லை.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஏழு ஆண்டுகளாகிய நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் துயரவாழ்வுத் துன்பங்கள் பலமடங்காக அதிகரித்துவிட்டன. இன ரீதியிலான துவேசங்கள் இவர்கள் மீது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த தாயினும் மேலும் பெரும் மனப் பாதிப்புக்கள் இதனால் உண்டாகியிருந்தது.

தமிழ் அரசியல் கைதியின் சிறை வாழ்வு குறுகிய காலப் பகுதியல்ல. ஒரு பகுதிக்காலமானது இளமை வாழ்வுக்குரியது. அதனை அவர்கள் சிறையில் புதைத்துவிட்டனர். எழுதப்படாத சட்டத்தின் கீழ் நியாயமற்ற தீர்ப்பினால் தண்டனை பெற்றவர்கள் போல் இளவயது வாழ்க்கை என்னவென்று தெரியாத பிறவிகளாகி விட்டனர்.

இலங்கை பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்த நாடு, ஜனநாயகநாடு என்று கூறப்பட்டிருக்கின்ற காலப் பகுதியில் பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குள் தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் நீண்ட காலத்துக்குப் புதிய நல்லாட்சியிலும் சிறை வாழ்வை அனுபவிக்க வேண்டுமா? விடுதலை என்பது மைத்திரி ஆட்சியிலும் இல்லையா? 600 தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் யாருடைய தீர்ப்பின் பிரகாரம் ஆயுள் தண்டனைக் கைதிகள் போல் எந்த விசாரணைகளும் இல்லாமல் 15 ஆண்டுகாலம் தொடக்கம் 20 ஆண்டுகள் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற கேள்விகள் நியாயமாக இருக்கின்றது.

வவுனியாவில் பொது மக்களால், சிறைக் கைதிகளின் உறவுகளால் அண்மையில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது. தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் இல்லையெனில் அவர்கள் மீது விசாரணைக்குட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவும் எனக் கோரியிருந்தனர்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெற்று முடிந்துள்ளன. இரண்டு தேசியக் கட்சிகளும் ஒன்று சேர்ந்த, தேசிய அரசின் நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. புதிய நாடு, புதிய ஆட்சி என்று ஜனாதிபதி மைத்திரியும், பிரதமரான ரணிலும் கூறிக்கொண்டாலும் தமிழினத்தின் அடிப்படைப் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளுக்கு வரவேயில்லை.

இலங்கையில் நல்லாட்சி மலர்ந்துள்ளதாக அரசும் தமிழ்க் கட்சிகளும் வாயாரப் புகழ்ந்தாலும் நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சம்பந்தமான விடயத்தில் கவனமெடுக்காதது தமிழர்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதி மைத்திரியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்ப காலப் பகுதியில் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தது. இன்று வரையில் ஒரு சிலராவது விடுதலை செய்யப்படவில்லை.

தமிழினத்தின் பார்வையில் அன்றும் சரி, இன்றும் சரி எந்த அரசாக இருந்தாலும் தமிழர்கள் விடயத்தில் ஒரே மட்டையில் ஊறிய குட்டைகள் தான் என்பதை நன்றாக அறிந்து கொண்டவர்கள். இன்றைய நல்லாட்சியையும் இலகுவில் தமிழ் மக்கள் முழுமையாக நம்பக் கூடிய நிலையில் இல்லை. தமிழ் அரசியல்வாதிகள் நம்பிக்கை வைத் திருக்கலாம். அவர்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையைப் பொறுத் தது.

ஜனாதிபதி மைத்திரி தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒன்று சேர்ந்த தேசிய அரசின் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தனும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை செல்வம் அடைக்கலநாதனும் துர்திர்ஷ்டவசமாகப் பெற்றுக் கொண்டுள்ளனர். மூன்று தமிழ் மாவட்டங்களிலும் மாவட்ட அபிவிருத்தி அமைச்சுப் பதவியையும் பெற்றுக் கொள்கின்ற வாய்ப்பையும் பெறவுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலிந்து பெற்றார்களோ, இல்லையோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பதவிக்கான பலத்தின் அடிப்படையில் பேரத்தின் உச்சத்தில் வைத்து தமிழினத்தின் இன்றைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற நம்பிக்கையின் அடிப்படையில் காலம் தாழ்த்தாது தமிழ் அரசியல் கைதிகளின் மீதான விடுதலைக்கான வழிக்காகவோ விசாரணைக்கான வழிக்காகவோ மைத்திரி அரசுக்கு அழுத்தம் கொடுத்துப் போராட வேண்டிய கடமைப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ள பதவிகள், அதிகாரங்களை உறுதியாகப் பற்றிக் கொண்டு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் பதவிகளை அலங்கரித்துக் கொண்டு இருப்பதில் பயனேதும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | | | 6 | |
| | 3 | | | 8 | | 7 | | |
| 9 | | 8 | | | | | | 1 |
| | | 4 | | 5 | | | 3 | |
| | | | 8 | | 2 | | | |
| | 2 | | | 6 | | 9 | | |
| 1 | | | | | | 8 | | 4 |
| | | 3 | | 9 | | | 2 | |
| | 9 | | | | 6 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 3 | 6 | 7 | 8 | 1 | 9 | 4 |
| 6 | 4 | 7 | 1 | 2 | 9 | 5 | 8 | 3 |
| 9 | 8 | 1 | 3 | 4 | 5 | 2 | 6 | 7 |
| 2 | 3 | 5 | 9 | 1 | 6 | 7 | 4 | 8 |
| 8 | 9 | 6 | 7 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 7 | 4 | 2 | 8 | 3 | 6 | 5 | 9 |
| 3 | 5 | 2 | 4 | 9 | 1 | 8 | 7 | 6 |
| 4 | 1 | 8 | 5 | 6 | 7 | 9 | 3 | 2 |
| 7 | 6 | 9 | 8 | 3 | 2 | 4 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங் குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள் ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# தேவைக்கு அதிகமாக தண்ணீர் குடிப்பது நல்லதா?

தண்ணீர் குடிப்பது குறித்து ஏகப்பட்ட குழப்பங்கள் பலருக்கும் இருக்கும். பொதுவாக, எமது உடலுக்குத் தண்ணீர் தேவையெனில் எமக்குத் தாகம் ஏற்படும். அப்போது தண்ணீர் குடித்தால் போதுமானது. லீற்றர் லீற்றராகக் குடிக்கத் தேவையில்லை. தாகமே எடுப்பதில்லை என் பவர்களுக்குக் கபம் அதிகமாகிறது என்று அர்த்தம். அதேபோன்று, அதிக தாகம் எடுப் பவர்களுக்கு பித்தம் அதிகமாக இருக்கிறது என்று அர்த்தம்.

உடற்தேவைக்கு அதிகமாகத் தண்ணீர் குடித்தால், செரிமானப் பிரச்சினை நிச்சயம் ஏற்படும். காரணம், வயிற்றில் சூட்டினாலேயே செரிமானம் ஏற்படுகிறது. அதிகமான தண்ணீர் அந்தச் சூட்டைக் குறைக்கும் போது, செரிமானம் தடைப்படும். தாகம் எடுத்தும் தண்ணீர் அருந்தாமல் தவிர்க்கிற வர்களுக்கு, நீர்ச்சத்துக் குறைந்து, சரும வறட்சி, சுருக்கம், முடி உதிர்வு, கரு வளையம், காலில் வெடிப்பு போன்றவை ஏற்படும். காலையில் எழுந்ததும் ஒரு குவளை தண்ணீர் குடித்த பின்னரே காலைக் கடமைகளை முடிக்கப் பழக்கப்படுத்திக் கொண்ட வர்களுக்கு, அவர்களின் உடலில் கழிவை வெளியேற்றும் வாயு உற்பத்தி நின்றுவிட்டது என்று அர்த்தம். தானாக நடக்க வேண்டிய விடயத்தை தண்ணீர் குடித்துத் தான் தூண்ட வேண்டும் என்றால், உடலில் பிரச்சினை உண்டு என்றே அர்த்தம். பொதுவாக, வெதுவெதுப்பான தண்ணீர் குடிப்பது, ஜீரணக் கோளாறுகளைத் தவிர்க்கும். குறிப்பாக, காலை எழுந்ததும் உணவைத் தவிர்த்து, ஒரு பழம் சாப்பிடலாம். தண்ணீரைக் குழந்தைகளுக்கு சில்வர் பாத்திரத்தில் வைத்தும், உடல் உழைப்பாளிகளுக்கு இரும்புப் பாத்திரத்தில் வைத்தும் கொடுக்கலாம். வெயில் காலத்தில் கண்டிப்பாக மண் பானையைத் தான் பயன்படுத்த வேண்டும். கர்ப்பிணிப் பெண்கள், செப்புப் பாத்திரத்தில் வைத்த தண்ணீரைக் குடிக்கக் கூடாது.

நிலத்தடி நீரை நன்றாகக் கொதிக்க வைத்து, வெதுவெதுப்பான நிலையில் குடிப்பது சிறந்தது. தண்ணீரை லேசாகச் சூடுபண்ணுவதும், வெந்நீரில் பச்சைத் தண்ணீர் கலந்து வெதுவெதுப்பாகக் குடிப்பதும் தவறு. இதனால் கிருமிகள் அழியாது.




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 700 | 800 | 500 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 350 | 280 | 400 |
| கணவாய் | 600 | 600 | 300 | 700 | 700 | – |
| பாரை | 700 | 600 | 500 | 650 | 500 | 420 |
| சுறா | 600 | 600 | – | 700 | 700 | – |
| சீலா | 350 | 500 | 300 | 400 | 400 | – |
| விளை | 900 | 500 | – | 500 | – | 350 |
| முரல் | 400 | 400 | – | 350 | 400 | – |
| கும்பிளா | 500 | 350 | 300 | 400 | 300 | 350 |
| கிழாக்கன் | 500 | 800 | 300 | 500 | 300 | 400 |
| ஒரா | 450 | 400 | 300 | 400 | – | – |
| திரளி | 300 | 300 | 100 | 300 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | 200 | 300 | – | 300 |
| சூடை | 200 | 200 | 80 | 120 | 150 | 80 |
| ஒட்டி | 300 | 300 | 100 | 350 | – | – |
| திருக்கை | 200 | 350 | 250 | 250 | 200 | 170 |
| பாலை | 450 | 300 | – | 450 | 200 | – |
| வாழை | 180 | 200 | – | 350 | 200 | – |
| கொய் | 100 | 150 | 100 | 100 | 50 | [illegible] |
| மதனம் | 200 | 250 | – | 250 | – | 250 |

## நாளை

புரட்டாதி–13
புதன்கிழமை
30.09.2015

திதி: திருதியை
பி.இ.02.21 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
பி.ப.04.59 வரை
சுபநேரம்:
04.32–06.02 வரை
இராகுகாலம்:
12.02–01.32 வரை




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 30 | 40 | 60 | 40 | 60 | 60 | 30 |
| கத்தரி | 70 | 80 | 80 | 60 | 60 | 60 | 80 | 40 |
| கரட் | 60 | 80 | 50–100 | 80 | 100 | 100 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 50 | 60 | 50 | 40 |
| பயிற்றை | 70 | 60 | 60 | 60 | 40–60 | 80 | 100 | 50 |
| பாகல் | 100 | 80 | 120 | 100 | 80 | 120 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 70 | 100 | 70–80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 80 | 90 | 100 | 100 | 120 | 70 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 90 | 70 | 100 | 100 | 60 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 120 | 100 | 100 | 100 | 90–100 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 70 | 50 | 50 | 50 | 60 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 30 | 30 | 25 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 70 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 160 | 150 | 200 | 120 | 140 | 160 | 200 | 120 |
| புடோல் | 50 | 50 | 30 | 40 | 50–60 | 40 | 60 | 40 |
| கோவா | 80 | 80 | 60 | 60 | 50–60 | 80 | 100 | 50 |
| வெண்டி | 80 | 40 | 40 | 50 | 60 | 40 | 50 | 25 |
| போஞ்சி | 160 | 140 | 160 | 160 | 140–160 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 100 | 70 | 80 | 80 | 70–80 | 100 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 40–60 | 40 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 90 | 90–120 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 160 | 150 | 160 | 120 | 140–180 | 240 | 160 | 180 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 80 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 120 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 100 | 60 | 100 | 80 | 120 | 80 |

## துணிவுடன் உங்களது கடமையைச் செய்யுங்கள்

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



சிறிய நாய்க்குட்டிகளின் குரைப்பைக் கேட்டு நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. எழுந்து நின்று துணிவுடன் உங்களது கடமையைச் செய்யுங்கள். பிறருக்கு நன்மை செய்வதன் மூலம் எமக்கு நாமே நன்மை செய்தவர்களாகிறோம். நன்மை பெறுவதற்கான ஒரே வழி இது மட்டும் தான். எப்போதும் விரிந்து மலர்வதுதான் வாழ்வின் பயனாகும். உங்கள் மனம் பரந்த நோக்குடன் திகழட்டும். தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகிய மூன்றும் வெற்றிச்சிகரத்தை எட்டிப் பிடிக்கத் தேவையான குணங்கள். இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும். கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத்தவிர தனியாக வேறு ஒரு கடவுள் உலகில் இல்லை. உயிர்களுக்குச் சேவை செய்வதன் மூலம் நாம் கடவுளுக்கே சேவை செய்தவராகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டகரமான வாழ்க்கை

நேற்றைய உதயன் பத்திரிகையில் நவரத்தினங்களுள் ஒன்றான 'வைரம்' பற்றிப் பார்த்தோம். இன்று அதன் தொடர்ச்சியாக 'நீலம்' பற்றிப் பார்ப்போம். பிறவியிலேயே சிலருக்கு அதிர்ஷ்ட அமைப்புக்கள் அமைந்திருக்கும். சிலர் தங்கள் உழைப்பினாலும், தெய்வ வழிபாட்டினாலும், சாமர்த்தியத்தினாலும் அதிர்ஷ்டகரமான நல்வாழ்வை அமைத்துக் கொள்வார்கள். அந்த வகையில், ஒவ்வொருவரின் அதிர்ஷ்டத்தையும் மேன் மேலும் பெருகச் செய்யும் ஆற்றல் மிக்க நவரத்தினங்களுள் ஒன்று 'நீலம்'.



**நீலம்**


நீலம் அலுமினியம் டிரை ஒக்ஸைடு என்ற மூலப்பொருளால் ஆனது. இந்தக் கல்லுக்கு நீல நிறத்தைத் தருவதற்கு டைட்டானியம் என்ற வேதிப்பொருளும் உள்ளது. ஆழ்ந்த நீல நிறமுள்ள நீலக்கல்லில் டைட்டானியம் அதிகம் இருக்கும். இதன் நிறத்தின் பெயரே கல்லின் பெயரானது. முன்பெல்லாம் உயர்தரமான நீலம் இந்தியாவின் காஷ்மீரில் கிடைத்து வந்தது. தற்போது இந்தியாவில் கிடைப்பது அரிதாகிவிட்டாலும் தாய்லாந்து, இலங்கை, கென்யா, தான்சானியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து கிடைக்கப்பெறுகிறது .

நீலம் கடினத்தன்மை அதிகமுடையதாக இருப்பதால் நீண்ட நாள்களுக்கு, பளபளப்புக் குன்றாமல் இருக்கும். வெளிர் நீலக் கற்கள் பாங்கொங்கில் அடர் நீலமாக மாற்றப்பட்டு பாங்கொங்கில் நீலம் என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. அதிக எடையும், சுத்தமான தன்மையும் கொண்ட கல்லை கெட்டி நீலம் என்கிறார்கள்.

மியன்மார் மற்றும் காஷ்மீரில் அற்புதமான நீலக் கற்கள் கிடைக்கின்றன. இவை அழகான ஒளிமிகுந்த, கண்களைக் கவரக்கூடியவையாக இருக்கும். நீலக் கல்லை அணிவதால் போட்டி, பொறாமை மற்றும். கண் திருஷ்டிகள் விலகும். மன அமைதியையும், சுகமான, ஆபத்தில்லாத பயணங்களைத் தரும். இடமாறுதலையும், நாள்பட்ட துன்பங்களையும் போக்கும். நீலக் கல்லிலேயே தோஷ மற்ற இந்திரக் கல் கிடைக்கப்பெற்று, அதை அணிபவர்களுக்கு ஏழ்மை விலகிச் செல்வம், செல்வாக்கு, புகழ், பெருமை போன்ற யாவும் தேடி வரும். கஷ்டங்கள் அனைத்தும் விலகும். நீலக் கல்லை நீல நிற சனிக் கிரகத்தின் ஆதிக்கத்துக்குள்ளோரானான மகர, கும்பராசி உடையவர்களும், ஏழரைச் சனி, அஷ்டமத்துச் சனி, சனி திசை போன்றவை எண் கணிதப்படி 8,17, 26 எண்ணில் பிறந்தவர்களும் அணியலாம். மருத்துவ ரீதியாகவும் வாதநோய், பாரிச வாதம், எலும்பு வியாதி, பல் நோய், ஜலதோஷம், சித்த சுவாதீனம், உடல் சோர்வு, மந்த நிலை போன்ற நோய்களிலிருந்தும் ஓரளவுக்கு விடுதலை கிடைக்கும்.

நீலக்கல்லை வெள்ளியில் பதித்து உடலில் படும்படி நடுவிரல் அல்லது ஆள்காட்டி விரலில் அணிந்து கொள்ள வேண்டும். சனிக்கிழமைகளில் அணிவது உத்தமம். நீலக்கல் அணிவதால் எம்மைப் பிடித்துள்ள நீச குணங்கள் விலகி சனிக்கிரகத்தின் அருளை முழுமையாகப் பெறமுடியும்.

நீலக்கல்லுக்குப் பதிலாக அக்கோமரின் கற்களையும் அணியலாம். இதுவும் பார்ப்பதற்கு அழ காகவும், வெளிர்நீல நிறமுடையதாக வும் விலையில் சற்றுக் குறைவாகவும் கிடைக்கின்றது. சனியால் ஏதாவது பாதிப்பு உடையவர்கள் அந்தக் காலங்களில் மட்டும் இந்தக் கற்களை அணிந்து கொள்ளலாம். மற்றோர் அணிவது கூடாது. அழகுக்காகவும் சிலர் அணிகிறார்கள்.



# கணவன்- மனைவி மகிழ்ச்சியாக...






- வேலையிலிருந்தோ, வெளியூர் பயணத்திலிருந்தோ அல்லது எங்கிருந்து வீட்டுக்கு வந்தாலும் நல்ல வாழ்த்துக்களைத் தெரிவித்தவாறு வீட்டில் நுழையுங்கள்.
- மலர்ந்த முகத்துடன் மனைவியைச் சந்தியுங்கள்.
- வெளியில் சந்தித்த நல்ல செய்திகளைத் தெரிவித்துவிட்டு மற்றச் செய்திகளை வேறு சந்தர்ப்பத்துக்காகத் தள்ளி வையுங்கள்.
- நேர்மறையான நல்ல வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசுங்கள். எதிர்மறையான வார்த்தைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- உங்களின் வார்த்தைகளுக்கு மனைவி பதில் கொடுக்கும்பொழுது செவி தாழ்த்துங்கள்.
- தெளிவான வார்த்தைகளைக் கொண்டு பேசுங்கள். அவள் புரிந்து கொள்ளவில்லையெனில் மீண்டும் மீண்டும் சொல்லுங்கள்.
- மனைவியைச் செல்லமாக அழகிய பெயர்களைக் கொண்டு அழைக்கலாம்.
- நல்ல விடயங்களை அவளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- நீங்களிருவரும் ஆனந்தமாகக் கழித்த அனுபவங்களை இருவரும் தனித்து இருக்கும்பொழுது மீட்டுப் பாருங்கள்
- ஒருவருக்கொருவர் போட்டி போட்டு, பந்தயங்களில் ஈடுபடுங்கள். அது விளையாட்டாகவோ, பொது அறிவு போன்ற கல்விகளைக் கற்பதிலோ அல்லது வேலை செய்வதிலோ இருக்கலாம்.
- வீட்டு வேலைகளில் எதிலெல்லாம் மனைவிக்குத் துணைபுரிய முடியுமோ அதிலெல்லாம் உதவுங்கள். மிக முக்கியமாக அவள் நோயுற்றோ களைப்படைந்தோ இருந்தால்.
- கடினமான வீட்டு வேலைகளில் மனைவி ஈடுபடும்பொழுது நன்றி தெரிவித்து அவளை உற்சாகப் படுத்துங்கள்.
- குடும்ப விடயங்களில் உங்கள் மனைவியுடன் கூடிய ஆலோசனை செய்யுங்கள். அவளிடம் ஆலோசனை செய்யப்பட வேண்டும் என அவள் எதிர்பார்க்கும் சிறப்புத் தருணங்களில் அவளின் உணர்வுக்கு மதிப்பளியுங்கள்.
- மனைவியின் கருத்துக்களை துச்சமாக நினைக்காமல் கவனமாகக் கேளுங்கள். மனைவின் கருத்து சிறந்ததாக இருந்தால் அவளின் கருத்தைத் தேர்ந்தெடுக்கத் தயக்கம் காட்டாதீர்கள். ஆலோசனை தந்து உதவியதற்காக அவளுக்கு நன்றி கூறலாம்.
- உங்களின் [illegible] தேவையான நல்ல அறிவுரைகளை [illegible] பெறுங்கள்.
- நீங்கள் வீட்டில் இல்லாதபொழுது இரத்த பந்த உறவினர்களிடம் அவளுக்குத் தேவையான, அவசியமான உதவிகளைச் செய்து தரும்படி கேட்டுக்கொள்ளலாம். குடும்பச் செலவுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்துச் செல்லுங்கள்.
- எதிர்பாராத நேரத்திலோ இரவு நேரத்திலோ வீடு திரும்புவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பிரச்சினைகள் எதுவும் வராது என எண்ணினால் மனைவியையும் உடன் அழைத்துச் செல்லலாம்.
- கணவன் என்பவன் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்பவனாக இருத்தல் வேண்டும். மாறாக, கஞ்சத்தனம் செய்யக் கூடாது. (வீண் விரயமும் செய்யக் கூடாது).
- அவளுக்கு ஊட்டிவிடும் உணவு முதல் அவளுக்காகச் செய்யும் அவசியச்செலவுகள்வரை அனைத்துக்குத் இறைவனிடம் நற்கூலி இருக்கிறது என்பதை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்.
- அவசியத் தேவைக்கான பணத்தை உங்களிடம் கேட்பதற்கு முன்னரே கொடுப்பதுதான் சிறந்தது.
- மனைவியின் குடும்பத்தினருக்கும் தோழிகளுக்கும் மரியாதை செய்யுங்கள்.அவளதுபெற்றோர்கள் மற்றும் உறவினர்களைப் பார்க்க அழைத்துச் செல்லுங்கள். உங்களின் வீட்டுக்குவர அவர்களுக்கு அழைப்புக் கொடுங்கள். அப்படி வரும்பொழுது அன்புடன் வரவேற்று உபசரியுங்கள். அவசியமான தருணங்களில் அவர்களுக்கு ஒத்தாசையாக இருங்கள். பொருளாதாரம் மற்றும் உங்களின் சக்திக்குட்பட்ட உதவிகளைச் செய்யுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நட்புக்குத் துரோகம்

அது ஓர் அடர்ந்த காடு. அந்தக் காட்டில் வசித்து வந்த ஒரு நரியும், ஒரு கழுதையும் சேர்ந்து ஓர் உடன்படிக்கை செய்து கொண்டன. அதாவது நாள்தோறும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து இரைதேடச் செல்ல வேண்டும் என்றும், இரண்டு பேரில் எவருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும், மற்றவர் ஆபத்தை விலக்கப் போராடுவது என்றும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்து கொண்டன.

ஒருநாள் நரி, தனது நண்பனான கழுதையை இரை தேடுவதற்கு அழைத்துச் செல்வதற்காக கழுதையின் இருப்பிடத்தை நோக்கி அந்த அடர்ந்த காட்டின் வழியே சென்று கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றதும், சிங்கம் ஒன்று அந்த நரியை வழி மறித்தது. சிங்கத்தைக் கண்டு அந்த நரி நடுங்கியது. எப்படியாவது உயிர்தப்ப வழியுண்டா என யோசித்தது.

நரி உடனே சிங்கத்தை நோக்கி, மன்னாதி மன்னா! அற்பப் பிராணியாகிய என்னைக் கடித்துத் தின்பதால் உங்கள் பசி சற்றும் அடங்கப்போவதில்லை. உங்களுக்கு நான் மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்ய முடியும். எனது நண்பனாக, கொழுத்த கழுதை ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் சிரமமில்லாமல் பிடித்துக் கொள்வதற்கு ஓர் ஏற்பாட்டைச் செய்கிறேன். அந்தக் கழுதை, இரண்டு மூன்று நாள்களுக்கு உங்கள் உணவுக்கு ஆகும்! எனக் கூறியது. அந்த ஏற்பாட்டுக்கு சிங்கம் ஒப்புக் கொண்டது. நரி, சிங்கத்தை ஓரிடத்தில் மறைவாக இருக்குமாறு கூறிவிட்டு கழுதையின் இருப்பிடத்துக்குச் சென்றது. நண்பனே! இரை தேடச் செல்லலாமா? என, கழுதையை அழைத்துக்கொண்டு சிங்கம் மறைந்திருந்த இடத்துக்கு வந்தது.

கழுதையை, சிங்கம் மறைந்திருக்கும் இடத்துக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தியது நரி. சிங்கம், கழுதையின் மீது பாய்ந்து அதைக் கொன்றது. பிறகு சிங்கம், நரியின் மீதும் பாய்ந்து பிடித்துக் கொண்டது. நரி பதறிப் போய், மகாராஜா! எனக்குப் பதிலாகத் தானே கழுதையைக் கொண்டு வந்தேன். இப்போது என்னையே கொல்ல முயல்கிறீர்களே, என்று நரி நடுக்கத்துடன் கேட்டது.

நெருக்கமான நண்பனையே காட்டிக் கொடுக்கத் தயங்காத உன்னை நம்ப முடியாது. நாளை நீ உயிர் தப்புவதற்காக பலம் வாய்ந்த ஒரு விலங்கிடம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம். ஆகவே, உன்னை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது என்று கூறிக் கொண்டே சிங்கம், நரியையும் கொன்று வீழ்த்தியது.

நீதி: கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களால் உங்களுக்கு தீமை தான் ஏற்படும்.

## நம்பினால் நம்புங்கள்

- சிறு மூளை உடல் சமன்பாடு, அசைவுகளை இணைத்தல் ஆகிய பணிகளைச் செய்கிறது.
- உணவுப் பாதையின் நீளம் வாய் முதல் மலவாய் வரை 15 அடிகள்
- நகமாக வளரும் புரதப் பொருள் கரட்டின்.
- எலும்பு மச்சை ஒரு நாளைக்கு 25000 கோடி குருதிச் சிவப்பணுக்களை உருவாக்குகிறது.
- மூக்கில் 60 மில்லியன் உணர்வுச் செல்கள் உள்ளன.
- மனித உடலிலுள்ள எலும்புகள் ஒன்பது கிலோ நிறை கொண்டதாக இருக்கும்.
- பெருவிரலுக்கும் மூளைக்கும் தொடர்பு அதிகமாக உள்ளது.
- நமது தலையில் சுமார் 1,50,000 முடிகள் உள்ளன.
- 30 வயதுக்கு மேல் புதிய தலை முடி உருவாகுவதில்லை.
- குருதி உறைதலுக்கு காரணமான நொதி திராம்பின்.
- ஒரு மனிதனின் உடலில் ஒரு நாளைக்கு ஒன்று முதல் ஒன்றரை லீற்றர் சிறுநீர் உற்பத்தியாகிறது.
- இருமும் போது ஏற்படும் ஒலியின் வேகம் மணிக்கு 245 மைல்கள்.
- இருதயப் பணியின் ஒரு சுழற்சி முடிய 0.8 வினாடி நேரமாகிறது.




## வெற்றியின் இரகசியம் விடாமுயற்சி!



ஓரிரு முறை முயற்சி செய்து விட்டு, இதற்கு மேல் என்னால் முடியாது... என்று சொல்பவன் சராசரி. எனது இலட்சியத்தை எட்டும் வரை, முயற்சி செய்து கொண்டேயிருப்பேன்... என்று சொல்பவன், சாதனையாளன். தோல்வியால் துவண்டவர்களை, இந்த உலகம் நினைவில் வைத்திருப்பதில்லை. தோல்வி உங்களுக்கு, புதிய உற்சாகத்தையும், வைராக்கியத்தையும் கொடுக்க வேண்டுமே தவிர, விரக்தியைக் கொடுக்கக் கூடாது. எவருக்கும் முதல் முயற்சியிலேயே, மிகப் பெரிய வெற்றி கிடைத்து விடுவதில்லை. தடைக்கற்களை, முன்னேற்றத்துக்கான படிக்கற்கள் என்று நினைத்துக் கொள்வோம். வீழ்ந்தோம் என்று இந்த உலகம், நம்மைப் பற்றிச் சொல்லும்போது, அதே உலகம், வென்றோம் என்று சொல்லும்படி சாதித்துக் காட்டுவோம். தோல்வி என்றைக்கும் நிரந்தரமானதல்ல. எம்முடைய முயற்சிகளில், சில தோல்வியைத் தழுவலாம். ஆனால், முயற்சியே எடுக்காமல் விட்டு விட்டால், எம்முடைய வாழ்க்கையே தோல்வியில் முடியும். உடனுக்குடன் பயனை எதிர் பார்ப்பது, உடனே பயன் கிடைக்காவிட்டால், சோர்ந்து விடுவது சிறுபிள்ளைத்தனம். பிரச்சினையைக் கண்டு ஓடி ஒளிவது கோழைத்தனம். ஓடி ஒளிவதால், பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதில்லை. பிரச்சினையின் தன்மைக்கேற்ப, தீர்வு உடனே கிடைக் கலாம் அல்லது சில காலம் கழித்துக் கிடைக்கலாம்.

ஓர் ஊருக்குச் செல்வதற்குப் பல வழிகள் இருப்பதுபோல, எம்முடைய இலக்கை அடைவதற்கும், பல்வேறு வழிகள் உள்ளன. ஒரு வழி அடைபட்டால், மாற்று வழி பற்றி யோசிக்க வேண்டும். மிகப் பிரபலமான விஞ்ஞானி, அல்பாட் ஜன்ஸ்ரீனிடம், முட்டாள்த் தனத்துக்கு விளக்கம் கேட்ட போது, ஒரே வேலையைத் திரும்பத் திரும்ப ஒரே மாதிரிச் செய்துவிட்டு, வித்தியாசமான பயனை எதிர் பார்ப்பதற்குப் பெயர்தான் முட்டாள்த் தனம்... என்றாராம்.

அலெக்சாண்டர் கிரகாம் பெல், காது கேளாத தனது மனைவிக்கு, காது கேட்பதற்காக கருவி கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது தான், தொலைபேசியைத் தற்செயலாகக் கண்டுபிடித்தார். உங்களுக்குப் புதிய வாய்ப்பு, பிரச்சினை உருவத்தில் வரலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எமக்குத் தோல்வியோ, பின்னடைவோ வரும்போது, எம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகள் இதோ... தோல்வி அல்லது பின்னடைவுக்கு என்ன காரணம்? எங்கே தவறு நடந்தது? நான் இதிலிருந்து கற்றுக்கொண்ட பாடம் என்ன? இனிமேல் இந்த மாதிரித் தவறு நிகழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? சாதனையாளர்கள், தங்களுடைய முதல் முயற்சியிலேயே வெற்றிபெற்று விடுவதில்லை. தான் இழந்த நாட்டை மீட்கப் போராடிய ராபர்ட் புரூஸ், இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடித்த வாஸ்கோடகாமா, எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த எட்மண்ட் ஹிலாரி மற்றும் டென்சிங் போன்ற பலரும், தங்களின் முதல் முயற்சியிலேயே வெற்றி பெறவில்லை. அமெரிக்க ஜனாதிபதியாகி, அடிமைத்தனத்தை ஒழித்து, வரலாறு படைத்த ஆபிரகாம் லிங்கன், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன், ஐந்து முறை பல்வேறு தேர்தல்களில் தோல்வியைத் தழுவியவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தங்கள் பிள்ளை சரியாகப் படிக்கவில்லையே என்று புலம்பும் பெற்றோருக்கு, விஞ்ஞானி எடிசனின் நிஜவாழ்க்கைக் கதை தைரிய மூட்டும். மின்சார விளக்கு உட்பட, ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய கண்டு பிடிப்பு களுக்குச் சொந்தக்காரரான விஞ்ஞானி, தோமஸ் அல்வா எடிசனுக்கு, காது சரிவரக் கேட்காது. மூன்று மாதமே பாடசாலையில் படித்தவர். அடிமக்கு என்று, ஆசிரியர்களால் முத்திரை குத்தப்பட்டு, பாடசாலையில் இருந்து நிறுத்தப் பட்டார். ஆயிரம் முறை புதுப்புது வழிகளில் முயற்சி செய்தும், மின்சார விளக்கைக் கண்டு பிடிக்க முடியாமல் போனதைப் பார்த்து, மற்றவர்கள் கிண்டல் செய்தபோது, நான் ஆயிரம் வழிகளில் மின்சார விளக்கு எரியாது என்ற உண்மையைக் கண்டுபிடித்தேன் அல்லவா? என்று வேடிக்கையாகப் பதிலளித் தார். தனது 67 வயதில், இவரது ஆராய்ச்சி மையம், தீ விபத் தில் சாம்பலாகியது. அப்போது, அவர், பரவாயில்லை, கட வுள் புதிய கண்டுபிடிப்புக்கு வழி வகுத்துக் கொடுத்துள்ளார்... என்று கூறினார். விடா முயற்சிக்கும், மனவலிமைக்கும் எடிசனைத் தவிர, வேறு யாரை உதாரணமாகச் சொல்லுவது? முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், அதிகாலையில் வீடு வீடாகச் சென்று பத்திரிகை போட்டுவிட்டு, பாடசாலைக்குச் சென்றிருக்கிறார். இப்படிச் சொல்ல ஆரம்பித் தால், அடி மட்டத்திலிருந்து புகழின் உச்சத்தை அடைந்தவர்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.


மிகச் சிறந்த சாதனையாளர்கள் கூட, ஆரம்ப காலத்தில் தடுக்கி விழுந்திருக்கின்றனர். தோல்வியடைந்து விடுவோமோ, அவமானப்பட்டு விடுவோமோ என்று பயந்தே, பலர் முயற்சி செய்வதேயில்லை. தனக்கு நிறையத் திறமையிருந்தும், அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று ஆதங்கப் படுபவர்கள், ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். புகழின் உச்சிக்குச் சென்ற பலர், ஆரம்ப காலத்தில் அங்கீகாரம் கிடைக்காமல், போராட நேர்ந்தி ருக்கிறது. ஒரு துறையில் சாதனை படைக்க, இளம் மேதையாக இருந்திருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆர்வமும், ஈடுபாடும், திறமையும், உழைப்பும் இருந்தால், எந்த வயதிலும் சாதனை படைக்கலாம். மிகச் சிறந்த சாதனையாளர்கள் துரதிர்ஷ்ட வசமாகச் சறுக்கி விழ நேர்ந்தாலும், அவர்களுடைய தன்னம்பிக்கையும், கம்பீரமும் சற்றும் குறைவதில்லை. எல்லாத் தோல்விகளும், அனைவரையும் ஒரே மாதிரியாகப் பாதிப்பதில்லை. உதாரணமாக, தேர்வு, போட்டி, வியாபாரம் மற்றும் காதலில் தோல்வியடைந்தவர்களில், தற்கொலை செய்து கொள்பவர்கள் ஒரு ரகம். ஆனால், அவர்களைவிட மோசமான தோல்வியடைந்தவர்கள், பரவாயில்லை, எனக்கு இது ஒரு நல்ல பாடம்... என்று ஆக்கப்பூர்வமாக எடுத்துக்கொள்பவர்கள் மறு ரகம். நாம் இந்த இரண்டாவது ரகத்தைச் சார்ந்தவராக இருக்கலாம்! எப்போதெல்லாம் பிரச்சினை மற்றும் தோல்வியைச் சந்திக்க நேர்கிறதோ, அப்போது இரண்டு கேள்விகளை நாமே எம்மிடம் கேட்டுக் கொள்வோம், அத னால் என்ன? அடுத்து என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் தீர்வுக்கு பொது வாக்கெடுப்பு

## தமிழக கட்சிகள்–அமைப்புகள்–இயக்கங்கள் ஐ.நாவிடம் கூட்டாகக் கோரிக்கை





யாழ்ப்பாணம், செப். 29

முள்ளிவாய்க்கால் பேரவலமும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையும் அதன் பின்னரான அமெரிக்காவின் தீர்மானமும், தமிழீழ மக்களின் இனச் சிக்கலுக்கு ஒரே தீர்வு தமிழீழ விடுதலையே என்ற உண்மையை மேலதிக வலியோடு உணர்த்தியுள்ளன.

இந்தத் தீர்வை அமைதியான முறையில் ஜனநாயக வழியில் அடைந்திடத் தமிழீழத் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் பொது வாக்கெடுப்பு நடத்தும் படி ஐ.நா.வை வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறு தமிழகத்தில் தமிழீழ மக்களுக்காகக் குரல் கொடுக்கும் அனைத்து இயக்கங்கள் –அமைப்புக்கள்–அரசியல் கட்சிகள் என்பன இணைந்து கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுதன்னுயிர் நீத்த தியாகதீபம் திலீபனின் நினைவு நாள் தமிழகத்தில் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டது. இதன் போது தமிழீழ மக்களின் இன்றைய நீதிப் போராட்டத்தில் தோழமை கொண்டுள்ள தமிழக இயக்கங்கள், அமைப்புகள், அரசியல் கட்சிகள் சார்பில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அந்தக் கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ.நா. அறிக்கைக்கு வரவேற்பு

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றிய தீர்மானத்தின் படி அமைக்கப்பட்ட புலனாய்வுக் குழு அளித்த அறிக்கையை மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த 16 ஆம் திகதி வெளியிட்டுள்ளார். சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிராக நாம் இதுகாறும் கூறி வந்த பல்வேறு குற்றச்சாட்டுகளுக்குத் தக்க சான்றுகள் இருப்பதை இவ்வ றிக்கை உறுதிப்படுத்தியிருப்பதை வரவேற்கிறோம்.

எந்த மன்றத்தில் இலங்கை அரசு போர் நடத்திய விதத்தைப் பாராட்டி 2009 ஆம் ஆண்டு மே மாதம் தீர்மானம் இயற்றப்பட்டதோ, அதே மன்றத்தில் இலங்கை அரசு போர்க் குற்றங்களும் மானிட விரோதக் குற்றங்களும் புரிந்திருப்பதாகச் சொல்லும் அறிக்கை இப்போது முன்வைக்கப்பட்டிருப்பது உலகத் தமிழர்களின் அயரா உழைப்புக்கும் உறுதியான போராட்டத்துக்கும் கிடைத்துள்ள வெற்றி என்று உணர்கிறோம்.

### போராட்டத்துக்கு ஊக்கம்

நடந்திருப்பவை அமைப்புசார் குற்றங்கள், அதிகாரப் படிவரிசையில் இருப்பவர்கள் செய்த குற்றங்கள், தமிழர்களுக்கு எதிரான இனப்பாகுபாட்டு நோக்குடன் செய்த குற்றங்கள் என்றெல்லாம் புலனாய்வு அறிக்கை அறுதியிட்டுரைப்பது இலங்கையில் நடந்ததும் நடப்பதும் தமிழினப் படுகொலை என்பதையே காட்டுவதாக நம்புகிறோம்.

இனக்கொலைக் குற்றம் நடந்துள்ளது என்று புலனாய்வு அறிக்கை வரையறுக்காமல் விட்டது ஒரு குறைதான் என்றாலும், இனக் கொலை என்பதை இவ்வறிக்கை மறுக்கவில்லை. அப்படி வரையறுப்பதற்கு மேலும் புலனாய்வு தேவை என்று ஆணையாளர் கூறியிருப்பதும் இந்த அறிக்கையின் அடிப்படையில் நாம் தொடர வேண்டிய நீதிப் போராட்டத்துக்கு ஊக்கமளிக்கும் என்று நம்புகிறோம்.

### கலப்பு பொறிமுறை ஏற்க முடியாது

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு எவ்வகையிலும் ஒத்துழைக்காத இலங்கையிடமே கலப்பு நீதிமன்றம் அமைக்கும் பொறுப்பை வழங்குவது பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்பது போன்ற நிலைப்பாடே தவிர வேறன்று. இலங்கை சொல்லும் உள்நாட்டுப் பொறிமுறைக்கும், மனித உரிமைகள் ஆணையாளர் அவ்வரசின் பொறுப்பில் அமைக்கச் சொல்லும் கலப்புப் பொறிமுறைக்கும் விளைவளவில் வேறுபாடில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

ஐ.நா. அறிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளும் பல்வேறு கடுங்குற்றங்கள் புரிந்ததாகப் பட்டியலிடுகிறது. ஒடுக்குமுறையில் ஈடுபட்டுள்ள இனக் கொலைகார அரசின் நடவடிக்கைகளையும், இனக் கொலையிலிருந்து தம் மக்களின் உயிரும் உடைமையும் காக்க ஆயுத[illegible] விடுதலை இயக்கத்தின் செய[illegible]களையும் ஒரே துலாக்கோலில் நிறுத்துப் பார்க்க இயலாது என்ற வரலாற்றுப் பாடத்தை நினைவூட்ட விரும்புகிறோம்.

### ஈழம் வெல்ல உதவும்

ஐ.நா. மனித உரிமைகள் சபை அறிக்கையில் இலங்கையின் ஆட்சி மாற்றத்தைக் கணக்கில் கொள்ளும் புவிசார் அரசியல் அழுத்தங்கள் தென்பட்ட போதிலும், இந்த அறிக்கை உறையிலிட்ட கூர்வாள் போன்றது. தமிழ் மக்களின் போராட்டம் வளர்ந்து செல்லும் போது இந்தக் கூர்வாள் இலங்கையை இரண்டாகக் கூறு போட்டு ஈழத்தை வென்றெடுக்கும் அற வலிமையை நமக்குத் தரக் கூடியது என்பதைக் காலம் மெய்ப்பிக்கும் என்று உறுதியாக நம்புகிறோம்.

இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் கூண்டிலேற்றுமாறு, சிங்கள ஆக்கிரமிப்பில் உள்ள தமிழீழத் தாயகத்தில் ஒன்றரை இலட்சம் மக்களும், உலக அளவில் 14 இலட்சம் மக்களும் கையொப்பமிட்டு அளித்துள்ள விண்ணப்பத்தை ஏற்று ஆவன செய்யும் படி ஐ.நா. மனித உரிமைகள் சபையையும், பொதுச் சபையையும், பாதுகாப்புச் சபையையும் கேட்டுக் கொள்கிறோம்.

### பெற்றே தீருவோம்

தமிழீழ மக்களின் இனச் சிக்கலுக்கு ஒரே தீர்வு தமிழீழ விடுதலையே என்பதுதான் வரலாறு கற்பிக்கும் பாடம். முள்ளிவாய்க்கால் பேரவலமும், அது முதல் நீதிக்காக நடந்துள்ள போராட்டமும், அண்மைய ஐ.நா. அறிக்கை, அமெரிக்கத் தீர்மானம் வரையிலான ஐ.நா. நிகழ்வுகளும், இதே உண்மையை மேலதிக வலியோடு உணர்த்தியுள்ளன.

இந்தத் தீர்வை அமைதியான முறையில் ஜனநாயக வழியில் அடைந்திடத் தமிழீழத் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் பொது வாக்கெடுப்பு நடத்தும் படி ஐ.நா.வை வலியுறுத்துகிறோம்.

தமிழர்களுக்கு உரித்தான நீதியை உலகம் சட்ட வழியில் பெற்றுத் தர தவறுமானால், எவ்வழியிலும் அதனை அடையும் அறவுரிமை அவர்களுக்கு உண்டு என்பதைத் தொடர்[illegible] போது திலீபனின் இறுதி முழக்கமே எமதுமாகும், மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும் – என்று அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

## போதையில் சாரத்தியம்; சிப்பாய்க்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப். 29

மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய இராணுவச் சிப்பாய் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் முற் படுத்தப்பட்டார். அவரிடம் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதி, வருமான வரி பத்திரம் போன்ற ஆவணங்கள் இருக்கவில்லை. அத்துடன் அவர் தலைக்கவசமும் அணிந்திருக்கவில்லை. அவரை 13ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் தவறின் இரண்டு மாதகாலச் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் யாழ். நீதவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். (த–103)

## அனுமதியின்றி மதுபானம் விற்றவருக்கு 50,000 அபராதம்

அனுமதிப் பத்திரமில்லாமல் மதுபானத்தை விற்பனை செய்த மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். குற்றச்சாட்டை சந்தேகநபர் ஏற்றுக்கொண்டதையடுத்து அவரை 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் தவறின் ஐந்து மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் நீதவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார். (த–103)

## மரண அறிவித்தல்



**ப்ரம்மஸ்ரீ. தியாகராஜ ஐயர் பாலசுப்பிரமணிய குருக்கள்**

(முன்னாள் பிரதம குரு ஈச்சமோட்டை கலட்டிபுலம் ஞானவைரவர் தேவஸ்தானம்)

யாழ் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ப்ரம்மஸ்ரீ. தியாகராஜ ஐயர் பாலசுப்பிரமணியக் குருக்கள் நேற்று (28.09.2015) திங்கட்கிழமை அதிகாலை தேகவியோகம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜ ஐயர் -இராஜேஸ்வரி அம்மா தம்பதியரின் அன்புப் புத்திரனும், காலஞ்சென்ற நடேசக்குருக்கள்- நாகலக்சுமி அம்மா தம்பதி யரின் மருமகனும், ஸ்ரீமதி நாகேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும்; ஸ்ரீமதி கார்த்திகாயினி (கௌரி), ப்ரம்மஸ்ரீ பாலகிருஸ்ணக் குருக்கள் (பிரதம குருக்கள், ஈச்சமோட்டை ஞானவைரவர் தேவஸ்தானம்), ஸ்ரீமதி யசோதா (சுதா), ப்ரம்மஸ்ரீ ரவிசங்கரசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீமதி சகுந்தலாதேவி, ப்ரம்மஸ்ரீ. கிருபாகரசர்மா (பிரதமகுரு, பொன்னகர் விநாயகர் தேவஸ்தானம், ஹற்றன்), ப்ரம்ம ஸ்ரீ ரகுநாதசர்மா (கமநல சேவை நிலையம், பூநகரி) ஆகியோரின் அன்பு மாம னாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (28.09.2015) திங்கட்கிழமை 6/8 விதானையார் வீதி, ஈச்சமோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C/19104)(10.17) **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**அப்பாத்துரை பாலகிருஷ்ணன் (பாலா)**



**ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், இல.51, கோணாவில் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை பாலகிருஷ் ணன் நேற்று (28.09.2015) திங்கட்கிழமை காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - அருளம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான பத்மாதேவி, சகுந்தலா தேவி, பாலசூரியர் ஆகியோரின் சகோதரரும், மனோகரியின் அன்புக் கணவரும், கோபி, பகிரதன், அகிலன் ஆகியோரின் அன்புத் தகப்பனும், வினோதாவின் அன்பு மாமனாரும், லகிர்த்தியா வின் அன்புப் பேரனும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2015) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது நிரந்தர இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோணாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

**தகவல் :- குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GATEWAY TECH

## General English
### *for School Leavers*

பாடசாலைக் கல்வியை முடித்து உயர் கல்வி வாய்ப்புக்களை எதிர்பார்த்திருப்பவர்களும்,
அரச தனியார் துறைகளில் வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்திருப்பவர்களும்
இக் கற்கை நெறியில் அதிக பயன்பாட்டைப் பெறுவர்.
ஏற்கனவே அரச/தனியார் துறைகளில் தொழில் புரிவோரும்
இக் கற்கை நெறியில் குழுவாகவோ அல்லது தனியாகவோ இணைந்து
அலுவகை தேவைகளுக்கான ஆங்கிலத்தை கற்க முடியும்.

* நவீன முறை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுடன் வகுப்புகள் நடைபெறும்
* பேச்சு ஆங்கிலத்தை முன்னிலைப்படுத்திய பாடத்திட்டம்.
* 6 மாத கால கற்கை நெறி
* வார, வார இறுதி நாள் வகுப்புக்களும் இடம்பெறும்.

## General Sinhala
### *for School Leavers*

மேற்படிப்பிற்காக தலைநகர் செல்லவிருக்கும் மாணவர்களும்,
வேலை வாய்ப்புகளை எதிர்பார்த்திருப்பவர்களும்,
ஏற்கனவே தொழில் புரிபவர்களும் தமது சிங்கள மொழி தேர்ச்சியை
வளர்த்துக்கொள்ளக்கூடிய வகையிலான கற்கை நெறி.

* இலகுவாக கற்கக்கூடிய வகையில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட பாடவிதானங்களுக்கமைவான கற்கை நெறி.
* 6 மாத கால கற்கை நெறி
* கற்றல் கற்பித்தல் சூழல் மற்றும் செயற்பாடுகள் தனித்துவமானது.
* வார நாட்கள் மாலையிலும், வார இறுதி நாட்கள் காலை, மாலையிலும் இடம்பெறும்.
* இரவு நேர வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்படும்.

## Kids Programme
### *for School Childrens*

புலமைப்பரிசில் பரீட்சையை முடித்தவர்களும்,
இரண்டாம் நிலைக் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு
முன்னதாக தமது கணனிக் கையாளுகையை
மெருகேற்றிக் கொள்வதற்கேற்ற வகையில்
பாடநெறிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

* 6-10 வயதிற்கிடைப்பட்ட அனைவரும் கற்று பயன்பெறக்கூடிய வகையில்
* திட்டமிடப்பட்ட பாடவிதானங்களை உள்ளடக்கிய கற்கை நெறி.
* விரும்பிய நேரங்களில் கற்பதற்கான வாய்ப்பு

GATEWAY CfICT
GATEWAY Language Centre
GATEWAY KIDS SCHOOL of COMPUTING

## IELTS

மேற்படிப்பிற்காக வெளிநாடு
செல்ல இருப்பவர்கள்
IELTS பரீட்சைக்கான
தயார்படுத்தல் செய்பவர்கள்
அதிகம் பயன்பெறக்கூடிய
வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

* புள்ளி அடைவுமட்டத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான பாடவிதானம் பின்பற்றப்படுகிறது.
* 6 மாத கால கற்கை நெறி
* வார நாட்கள்- மாலை
* வார இறுதி நாட்கள் காலை, மாலை

## Microsoft Office
### *for Senior Citizens*

கணனிப் பாவனையைப் பழக விரும்புகின்ற
வயது வந்தவர்கள்/முதியவர்கள்
பயன்பெறக் கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட கற்கை நெறி.

* Skype, Email, Internet ஆகியவற்றை பயன்படுத்தக்கூடிய வகையிலான செயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்படும்.
* அரச/தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மேற்படி பயிற்சி தேவைப்படுபவர்களும் இக் கற்கை நெறியில் பங்குபற்றலாம்
* பிரத்தியேகமான வகுப்புக்கள் இடம்பெறும்
* விரும்பிய நேரசூசியை அமைத்துக் கொள்ளலாம்

## Microsoft Office
### *for Job Seekers*

மேற்படிப்பு, தொழில் வாய்ப்பு போன்றவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள
இருப்பவர்களுக்கு MS Office பயிற்சியின் முழுமையான
பயன்பாடுகளை உபயோகப்படுத்தத் தெரிந்திருத்தல் அவசியம்.
சாதாரண தட்டச்சு செய்தலில் இருந்து MS Office இன்
முழுமையான பயன்பாட்டையும் தெரிந்து பழகிக் கொள்ளக்கூடிய கற்கைநெறி.

* பிரத்தியேக வகுப்புகள்
* விரும்பிய நேர சூசி

மேற்படி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிகளில் பெற்றுக்கொள்ளலாம்

**Head Office**
**# 39, College Road, Neeraviady,Jaffna**

**Hotline: 021 493 6666**

Tel: 021 492 7456
Fax: 021 221 7780

Email: gatewayjfn@sltnet.lk
Web: www.gatewayworldwide.com

**Branches**

Nelliady Branch:
*#55, Point Pedro Road, Nelliady.*
*021 492 7457*

Chavakachcheri Branch:
*#1, New Market Building, Chavakachcheri.*
*021 492 7432*

Kilinochchi Branch
*Karadippokku Junction, A9 Road, Kilinochchi.*
*021 492 7454*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்குற்றம் குறித்து மகிந்தவே பொறுப்புக்கூற வேண்டியவர்

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

கொழும்பு, செப்.29

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் உரிய முறையில் இடம் பெறுவதோடு போர்க்குற்றங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே முற்று முழு வதுமாக பொறுப்பு கூற வேண்டியவர் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணதெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலு வலகம் வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கையை முன்னிலைப் படுத்தி இனவாதத்தைக் கட்டவிழ்த்து விட முயற்சிக்கும் பாசிச குழுக்களின் செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதோடு சர்வதேச நாடுகளின் நம்பிக்கையின் பிரகாரம் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவும் மூவின மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் ஐக்கிய நாடுகளின் பரிந்துரைகளை நிறை வேற்ற இந்த சந்தர்ப்பத்தை தேசிய அரசானது உரியவாறு பயன்படுத்தி கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள நவசம சமாஜக் கட்சியின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கையில் இடம்பெற்றுள்ள போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச நீதி பதிகள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக் கிய விசேடகலப்பு நீதி மன் றம் ஒன்றை அமைத்து விசாரணைகள் உரிய முறையில் இடம் பெற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் போர் நடவடிக்கையின் போது இடம் பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய வகையில் விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கையை நாம் வரவேற்கின்றோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் ஆட்சியை முன்னெடுத்த பாசிச குழுவினது சில மோசமான செயற்பாடுகளின் மத்தியிலேயே போரின் இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்தவகையில் இன்று போர் நடைபெற்ற காலப் பகுதியில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவல கம் வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற விடயங்கள் தொடர்பில் முன்னைய ஆட்சியின் அரசியல் பிரமுகர்கள் உட்பட முன்னாள் ஜனாதிபதியே பொறுப்புக் கூற வேண்டும்.

கடந்த காலங்களில் நாட்டில் சட்டம் மற்றும் நீதித்துறை என்பன சர்வாதிகார சக்திகளிடம் அடிபணிந்து காணப்பட்டது. இவ்வாறான நிலையிலேயே ஊடகவியலாளர்கள், றக்பி வீரர்கள் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக செயற்பட்ட அரசியல் பிரமுகர்கள் என பல்வேறு தரப்பினர் கடத்தப்பட்டு கொலை செய்யப் பட் டனர். இது தொடர்பில் அரசு உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறான விசாரணைகளை முன்னெடுக்கும் போது இராணுவத்தினர் அச்சம் கொள்ளத் தேவையில்லை. காரணம் கடந்த காலங்களில் நாட்டைப் பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டெடுக்க இராணுவத்தினர் உண்மையான அர்ப்பணிப்பை முன்னெடுத்த போதிலும் சர்வாதிகார ஆட்சியின் கீழ் செயற்பட்ட தரப்பினரின் கட்டுப்பாட்டுக்குள் சிக்கி மோசமான முறையில் அவர்கள் வழிநடத்தப்பட்டுள் ளனர்.

இவ்வாறான நிலையிலேயே இன்று நாட்டுக்காக போராடிய வீரர்கள் சர்வதேசத்தின் முன்னி லையில் குற்றவாளியாக நிற்கும் நிலை உருவாகியுள்ளது.

புதிய அரசானது ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் வெளியிட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதோடு விசாரணைகளை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி, சிறி லங்கா சுதந்திரக்கட்சி யைச் சேர்ந்த தேசிய அரசின் கீழ் இன்று அமைச்சு பதவிகள் தொடர்பில் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுவதோடு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவு தரப் பினரினால் இனவாத செயற்பாடு களும் முன்னெடுக்கப்படுகின்றன.

இவர்களே தேசிய அரசின் நல்லாட்சி செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாகவும் காணப்படுகின்றனர். கடந்த பொதுத் தேர்தலில் அனைத்து சிறுபான்மையின மக்களும் ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கே தமது ஆதரவை வழங்கினர். அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட தேசிய அரசா னது சிறுபான்மையின் மக்களின் உரி மைகளை பாதுகாக்க உரிய செயற்றிட் டங்களை முன்னெடுக்க வேண்டும்.

தேசிய அரசின் கீழ் இன்று தொழிற்படும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் உள் ளிட்டோர் இன்று மூவின மக்களின் உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பில் ஒரே பாதையிலேயே பயணிக்கின் றனர். இவ்வாறான நிலையில் இவர் களின் எதிர்கால செயற்பாடுகள் நாட் டில் பொருளாதார ஸ்திரத் தன்மைக்கும் எமது நாட்டின் மூவின மக்களின் வாழ்க்கை தரத்தையும் அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் துணை நிற்க வேண்டும் – என்றார். (ற)

# சீனா, ரஷ்யாவை அரசு உதாசீனம்

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 29

சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளை அரசு உதாசீனம் செய்து வருவதாகப் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பது ஆபத்தானது எனச் சுட்டிக்காட்டிய அவர் அமெரிக்காவும், ஐ.நாவும் இலங்கைக்கு வெள்ளையடித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த ஊடகவியவாளர் சந்திப்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக அமெரிக்காவும் ஐ. நாவும் கடுமையான குற்றச்சாட்டுக்களை கடந்த காலங்களில் முன்வைத்தன. கடந்த அரசு அமெரிக்காவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் இவ்வாறு அழுத்தம் பிரயோகிக்கப் பட்டது.

தற்போதைய அரசு பலவீனமடைந்துள்ளது. இதனாலேயே அமெரிக்காவின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு செயற்பட்டு வருகிறது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை, பிரதமர் ரணில் விக்ர மசிங்க கூறுவதனைப் போன்று இந்த அரசு பாதுகாக்கும் என கருதவில்லை.

மகிந்தவை மின்சார நாற்காலியில் இருத்தி தண்டிக்க முடியாது. ஏனெனில் ரோம் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை என கூறிய ரணில் தற்போது, இந்த அரசு மகிந்தவை மின்சார் நாற்காலியிலிருந்து காப்பாற்றியதாக பிரசாரம் செய்து வருகிறார்–என்றார். (த–வ)

# வங்கிக் கணக்கு ஆலயத்தினுடையதல்ல

யாழ்ப்பாணம், செப். 29

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய நிர்வாகத்திற்கு பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் 320195642 என்கிற வங்கிக் கணக்கிலக்கம் ஒன்று இல்லை என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த 11ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியில், வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவ காலத்தில் தொடர்ச்சியாக அன்னதானம் செய்யப்பட இருப்பதாகவும் அதற்காக மேற் சொன்ன வங்கிக் கணக்கிலக்கத்திற்கு விரும்புபவர்கள் வைப்புச் செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், ஆலய நிர்வாகத்தின் சார்பில் ஈ.அன்னலிங்கம் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள அறிக்கையில், அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்கிலக்கம் ஆலயத்துடன் தொடர்புபடா தது என்று தெரிவித்திருக்கிறார்.

அந்த வங்கியிலக்கம் மோசடி நோக்கத்துடன் பிரசுரிக்கப் பட்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். (உ)

**வேலையாள்கள் தேவை**

சங்கென் நிறுவனத்தின் யாழ் வேலைத் தளத்திற்கு ரைலர் Tiler (Tile பதிப்பவர்) தேவை.

தொடர்புகளிற்கு : 071 864 3635
077 312 6610
077 592 9304

**கண்ணீர் அஞ்சலி**

எமது சங்கத்தின் முன்னாள் கௌரவ தலைவர் அமரர் நா.சுகராசா அவர்களின் புதல்வி

**செல்வி சுகராசா வாசுகி**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்

இலங்கை செஞ்சிலுவைசங்கம்
வலி மேற்கு பிரிவு

# ஆசிரியர்களின் ஆசீர்வாதம் மாணவர்களுக்கு வேண்டும்

## யாழ்.இந்து 125ஆவது ஆண்டுவிழாவில் ஆறு.திருமுருகன்

யாழ்ப்பாணம், செப்.29

மாணவர்கள் ஆசிரியர்களிடம் அடிவாங்கவேண்டும். ஆசிரியர்களின் ஆசீர்வாதம் மாணவர்களுக்கு எப்பொழுதும் இருக்க வேண்டும். நாம் எமது ஆசிரியர்களிடம் அடி வாங்கிப் படித்ததனால்தான்– ஆசீர்வாதத்துடன் இன்று நல்ல நிலையில் உள்ளோம் என்று கௌரவ கலாநிதி ஆறு.திரு முருகன் தெரிவித்தார்.

யாழ்.இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிகழ்வு கல்லூரியில் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பமானது. கல்லூரியின் பழைய மாணவனான அவர் அங்கு நீண்ட உரையை ஆற்றினார். அதில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்லூரி எப்படி ஆரம்பிக்கப்பட்ட திலிருந்து தற்போது வரை தாம் கற்ற காலத்தில் ஆசிரியர்களுக்கு எவ்வாறு மதிப்பு, கௌரவம் கொடுத்து அவர்களது ஆசீர்வாதத்துடன் கல்வி கற்றோம் என்பதை அவர் அங்கு சுட்டிக் காட்டினார். அந்த உரையில், முன்னர் மதப் போட்டிகளுக்கு மத்தியில் ஒரு இந்துக் கல்லூரியை எப்படி ஆரம்பிப்பது என்று ஆறுமுக நாவலர் பெரும் கஷ்டத்தை எதிர் கொண்டார். அதற்காக அவர் எவ்வாறு அயராது பாடுபட்டார் என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

அது மட்டுமன்றி அவர் வழிப்படுத்தலில் இருந்த நிலையில் ஆறுமுக நாவலர் யாரும் எதிர்பார்க்காத நிலையில் உயிரிழந்துவிட்டார். தேர் போன்று ஒன்றை உருவாக்கி அதில் அவரது சடலம் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டபோது அதன் பின்னால் இளைஞர் மயானம் வரையிலும் அங்கப்பிரதட்சணம் எடுத்துச் சென்றிருந்தனர் என்று குறிப்பிடப் பட் டுள் ளது. அந்தளவுக்கு முன்னைய நிலைமை இருந்தது என்பதையும் தனது உரையில் கூறினார். தாம் முன்னர் அடிவாங்கிப் படித்தோம். மாணவர்களே ஆசிரியர்களிடம் அடி வாங்குங்கள். அதற்கேற்றதாகப் படியுங்கள். உங்கள் முன்னேற்றத்துக்காகவே, உங்கள் தவறுகளுக்காகவே ஆசிரியர்கள் உங்களை அடிப்பார்கள். என்பதனை உணரவேண்டும் என்றும் அவர் தனது உரையினூடாக வலியுறுத்தினார். (த–4)

# நேபாளத்தில் சமஷ்டி இலங்கை வரவேற்பு

கொழும்பு, செப். 29

நேபாளத்தில் சமஷ்டி ஆட்சி முறையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசு வரவேற்பைத் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் நேபாளத்தில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசியல் சாசனத்தை உலக நாடுகளுடன் இணைந்து இலங்கையும் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேபாளத்தின் நெருங்கிய நட்பு நாடு என்ற ரீதியில், நேபாளத்தின் அபிவிருத்தி மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நேபாளத்தில் மாநிலங்களுக்கு உச்சளவில் அதிகாரங்களை பகிரும் வகையிலான சமஷ்டி ஆட்சி முறைமை உருவாக்கப்பட்டு அரசியல் சாசனம் மாற்றியமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–வ)

உதயன்
advt@uthayan.com
021 493 1111

**பதவிக்கான தேடல்**

நீங்கள் O/L தகைமை உடையவரா? இவ்வாண்டு A/L எழுதியவர்களா? எமது Canadian நிறுவனமானது தனது புதிய கிளைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,மன்னார் ஆகிய மாவட்டங்களில் இவ்வாண்டில் ஆரம்பிக்கவுள்ளது.

- வயதெல்லை 18 - 27
- பயிற்சியின் போது 12, 500/= பின்னர் 45, 000/=
- முன் அனுபவம் அவசியமற்றது.
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.
- முந்தும் 15 பேர் மட்டும்.

தொடர்பு : 077 556 6224, 077 230 2795

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சுமொழியைபிரெஞ்சுமுறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**



பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSYயின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.

ஆரம்பம் 26.9.15 2.10.15வரை பதிவுசெய்யலாம்..

021 222 8093 61.கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி பலநிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளைமாடிக் கட்டடம்)

குறிப்பு யாழில் பல பொய்களை கூறிமோசடி செய்வோரிடம் ஏமாந்த பலர் எமது AFக்கு வந்துள்ளனர். நம்பிக்கை, கற்றல் கற்பித்தல் தரம், சர்வதேச அங்கீகாரம் உள்ள எமது நிறுவனத்தை தெரிவுசெய்யுங்கள். வெளிநாடு ஒன்றில் இருக்கும் போது பிரெஞ் பேச தேவையான ஆற்றலை வழங்குகிறோம். 021 222 8093

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்

வைத்தும் துப்பாக்கிச் சூடு நடத்தியும் கொலை செய்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் முதல் சாதாரண முன்னாள் போராளிகள் வரை அனைவருக்கு எதிராகவும் வழக்குத் தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரச படையினர் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்குப் பதிலடியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு ஜாதிக ஹெல உறுமய கட்சி தீர்மானித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குச் செவ்வி வழங்கியுள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் உயிரிழந்து விட்டார்கள். அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைத்து விசாரணை நடத்த முடியாது எனச் சிலர் கூறுகின்றனர்.இது முழுப் பொய்யான கருத்து. பல்வேறு வகைகளில் விடுதலைப் புலிகளுக்கு உதவியவர்கள் இருக்கிறார்கள். குற்றத்துக்கு உடந்தையானவர்கள் என்ற தத்துவத்தில் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைக்க முடியும். இதில் அரசியல், பொருளாதார மற்றும் பல வகையில் குற்றவாளிகளாக இனம் காணலாம். அத்துடன் புலிகளுக்கு அரசியல் ஆலோசகர்களாக பணியாற்றியவர்களையும் குற்றவாளிகளாக்கலாம். அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு வீடு, நிலம், நிதி மற்றும் வளங்களை வழங்கியவர்களுக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கலாம்.

பல வகைகளில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விசாரணைகளை மேற்கொள்ளலாம். உதாரணமாகக் காட்டிலிருந்து திருடப்பட்ட மரத்தில் செய்யப்பட்ட மேசையை வாங்கியவரும் குற்றவாளிதான்.

மூன்றாவது தேவை கலப்பு நீதிமன்றம் என்றால், முதலில், யார் போர் தொடுத்தவர்கள் எனக் கண்டறியவேண்டும். இலங்கைப் போரில் முதலில் போரை ஆரம்பித்தவர்கள் புலிகள் தான். இலங்கை அரசு அல்ல.விடுதலைப் புலிகள் சட்டவிரோத அமைப்பாகும். படையினர் சட்டபூர்வ அமைப்பாகும். எனவே இரண்டும் வேறுபட்டவை. இவை தொடர்பில் ஒன்றாகக் குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது– என்றார்.

படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும் என்ற கோரிக்கை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முன்வைக்கப்பட்டது. எனினும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்களை விசாரணை செய்வது எவ்வாறு? எனக் கேட்டதற்குப் பதிலளித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க,

புனர்வாழ்வு வழங்கப்பட்டுச் சமூகத்துடன் இணைக்கப்பட்ட 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட முன்னாள் போராளிகள் உள்ளனர். அவர்கள் நாட்டில் மக்களுக்கு எதிராகப் பல்வேறு குற்றங்களை இழைத்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் ஒரு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. எனினும் நாம் 1982 ஆம் ஆண்டு முதல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால், பொது மன்னிப்பு மீளப்பெறப்பட்டு அவர்கள் மீண்டும் கைது செய்யப்படவேண்டும். மேலும் இந்திய அமைதிப்படை மேற்கொண்ட குற்றங்கள். புலிகளுக்கு உதவிவழங்கிய வெளிநாட்டுக் கட்சிகள் மற்றும் புலனாய்வுத் தகவல் வழங்கிய நிறுவனங்கள் எனப் பலர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்க முடியும். அத்துடன் புலிகளின் எழுச்சியினால் 60 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

எனவே நாம் குற்றங்களைக் கண்டறிய முற்பட்டால் நாட்டின் மூன்றிலொரு பங்கினர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியும். இது ஒரு நடைமுறைத் தீர்வு அல்ல. சமரசம் செய்ய முடியாது. பின்னர் இந்த விடயம் ஏராளமான பிரச்சினைகளை உருவாக்கும். நாம் மட்டும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்ற கோணத்தில் பார்க்க முடியாது. சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டார்கள். சிங்கள, முஸ்லிம் மக்களிடமிருந்து நிலங்களை வலுக்கட்டாயமாக விடுதலைப் புலிகள் கைப்பற்றினார்கள். இதில் ஒரு சில நிலங்கள் மட்டுமே மீள வழங்கப்பட்டன.

இராணுவத்தினர் தமது நிலங்களை ஆக்கிரமித்துள்ளார்கள் எனத் தமிழ் மக்கள் பெரியளவில் அழுது பெரிய சாயல் செய்தாலும், புலிகள் சிங்கள மற்றும் முஸ்லிம்களுடைய பலவற்றை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். ஆனால் இவற்றை யாரும் முரண்பாடாகக் கருதுவதுமில்லை மற்றும் அந்த நிலங்களை மீள வழங்க எவரும் முயற்சிக்கவுமில்லை.

எனவே, நாம் ஒரு சீரான முறையில் இந்த பிரச்சினைகளை கையாள வேண்டும். எனவே இனப் பாகுபாடு இன்றி அனைத்து குடிமக்களுக்கும் நன்மையளிக்கும் தீர்வை வழங்க வேண்டும் என்பதே எமது நோக்கம்–என்றார். (த–வ)

## காங்கேசன்

தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான பொறுப்பைத் தன்னிடம் அளிக்குமாறு கொழும்பைக் கேட்டுக்கொள்வதற்கான உரிய தருணத்துக்காக இந்தியா காத்திருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தற்செயலானவை அல்லது அதிர்ஸ்டத்தினால் ஏற்பட்டவை இல்லை என்பதை நாடாளுமன்றத் தேர்தல்கள் நிரூபித்துள்ளதைத் தொடர்ந்து, இந்தியா மீண்டும் காங்கேசன்துறை துறைமுகம் குறித்து வற்புறுத்தத் தொடங்கியுள்ளது.

இலங்கைப் பிரதமரின் சமீபத்திய இந்திய பயணத்தின்போது இது குறித்து ஆராயப்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இரு நாடுகளினதும் பிரதமர்கள் மத்தியிலான உயர்மட்ட சந்திப்பின்போது இந்தியா காங்கேசன்துறை துறைமுகத்தைப் புனர்நிர்மாணம் செய்யும் தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளது.

இதற்குச் சாதகமான விதத்தில் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, இலங்கை இந்த விடயத்தில் ஒத்துழைப்பை வழங்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் இன்னமும் நிறைவேறாமல் இருக்கின்ற இந்தியத் திட்டங்களுக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பது தொடர்பில் இது முக்கியத்துவம் வாய்ந்த வாக்குறுதியாகும்.

காங்கேசன்துறை துறைமுகத்தைப் புனர்நிர்மாணம் செய்வது தொடர்பில் 2011ஆம் ஆண்டே இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்திருந்தது. இதனடிப்படையில் இரண்டு வருடங்களுக்குள் ஆறு கட்டங்களாக அந்தப் பணி முடிவடைந்திருக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளினால் தாக்குதலுக்கு உள்ளாகிச் சேதமடைந்துள்ள தற்போதைய துறைமுகத்துக்குப் பதில் புதிய துறைமுகத்தை அமைக்கும் திட்டமும் இந்த உடன்படிக்கையில் இடம்பெற்றிருந்தது. மேலும் 2013ஆம் ஆண்டுக்குள் இந்தியா நான்கு கட்டங்களைப் பூர்த்தி செய்திருந்தது. விடுதலைப் புலிகளினால் மூழ்கடிக்கப்பட்ட நான்கு கப்பல்களை அகற்றியிருந்தது.

எனினும் ஐந்தாவது கட்டப் புனர்நிர்மாணப் பணிகள் இடம்பெறவேயில்லை. அனைத்தும் ஒரு அரசியல் சூழலிலேயே இடம்பெறுகின்றது. இலங்கை வேண்டுமென்றே தாமதப்படுத்துகின்றது என இந்திய அதிகாரியொருவர் குறிப்பிட்டிருந்தார். இதன் மூலம் முன்னைய அரசுடனான உறவே இதற்குத் தடையாக உள்ளது என்பதை அவர் மறைமுகமாக வெளிப்படுத்தியிருந்தார்.

இதேவேளை, வீதிகளை அமைப்பது, மின் நிலையங்கள், அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு போர்ட் சிற்றி திட்டத்தை முன்னெடுப்பது என்ற போர்வையில் சீனா இலங்கையில் நாளுக்கு நாள் பல மடைந்து வந்தது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை முதலில் இந்தியாவுக்கு தான் வழங்குவதற்கு முன்வந்தவேளை அந்த நாடு மறுத்துவிட்டது. அதனால் தான் சீனாவுக்கு வழங்கினேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது நடவடிக்கையை நியாயப்படுத்தினார். ஜனவரி தேர்தலில் சிறிசேனவின் ஆச்சரிய வெற்றி சீனாவின் கணிப்பீடுகளை பொய்யாக்கியது.போர்ட் சிற்றி திட்டம் தற்போதைக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது. முன்னைய அரசின் காலத்தில் சீனாவுக்கு வழங்கப்பட்ட ஏனைய திட்டங்கள் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. காங்கேசன்துறை துறைமுகத்தின் மீது படர்ந்துள்ள சிலந்திவலையை அகற்றுவதற்கு இதுவே சரியான தருணம் என்பதை உணர்ந்துள்ள இந்தியா, ரணில் விக்கிரமசிங்கவின் பயணத்தின்போது அதற்கான காய்நகர்த்தலில் ஈடுபட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும் பட்சத்தில் இந்தியா, மியன்மார், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் துறைமுகங்களுக்கு அருகில் உள்ள துறைமுகமாக இது மாறும். மேலும் இலங்கையின் வடபகுதியைப் பிராந்தியக் கடல் மையமாக இது மாற்றும். இது இலங்கையின் வடபகுதிக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான வர்த்தக தொடர்புகளை மேலும் நெருக்கமாக்கும். இது நிச்சயமாக ஒரு அரசியல் இலக்கு என்கிறார் புதுடில்லி அதிகாரியொருவர். என நியூ இந்தியன் எக்பிரஸ் குறிப்பிட்டுள்ளது. (த–வ)

## எக்னெலிகொட

கீத் எக்னெலிகொட கடத்தப்பட்ட காலத்தில், இராணுவப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளராக இருந்த பிரிகேடியர் அருண வன்னியாராச்சியிடம் அண்மையில் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை நடத்தியுள்ளது.

அதேவேளை, கிரிதல இராணுவ முகாமுக்குள் விசாரணைகளை மேற்கொள்வதற்கு இந்தவாரம் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அனுமதி கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (த)

## அமெ.

முடிவு இத்தீர்மானத்தில் பிரதிபலிக்கும் அர்ப்பணங்களை வழங்குவதற்கு நாம் எல்லோரும் இணைந்து பணியாற்றுவதற்கான வழியை ஏற்படுத்தியுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசு ஜனநாய கத்தைப் பலப்படுத்தி இலங் கையில் சிவில் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும், கடந்தகால நிகழ்வுகள் மீண்டும் நடைபெறாதவண்ணம் கடந்த கால துன்பகரமான அனுபவங்களுக்கு தீர்வுகூறும் வகையிலும் துணிகரமான நடவடிக்கைகளை எடுத்திருப்பதனால் இலங்கைக்கான எமது ஒத்துழைப்பை இத்தீர்மானம் வெளிப்படுத்தி நிற்கிறது என்றும் ஜோன் கெரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எடுத்துரைத்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டுடன் இலங்கையர்களுக்கே உரிய ஒரு நம்பகமான நீதி செயன்முறையை நோக்கிய ஒரு முக்கிய படியாக இந்தத் தீர்மானம் அமைந் துள்ளது. இந்தத் தீர்மானம் காணாமல்போனவர்களது குடும்பங்கள், அவர்களது விருப்பத் திற்குரியவர்கள் தொடர்பாக அறிந்துகொள்வதற்கும் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இது உண்மை, நீதி, இழப்பீடு என்பவற்றை வழங்கு வதற்கான ஒரு பாதையை அமைத்துக் கொடுக்கும் அதேநேரம், இராணுவத்தினர் உள்ளிட்டவர்களின் நன்மதிப்பைப் பாதுகாப்பதோடு, பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு இத்தகைய நிகழ்வுகள் மீண்டும் நடைபெறாதிருப்பதை உத்தரவாதப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். (த–சி)

## சட்டவிரோதக்

புதிய பிரதமரும் அறிவித்துள் ளார். இந்த விடயத்தில் ஆஸ்திரேலியாவுக்கு இலங்கையின் ஒத்துழைப்பு உள்ளது. இவ்வாறு படகுகள் மூலம் வருபவர்கள் திரும்பவும் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் அல்லது ஆஸ்திரேலிய பிராந்தியமான பப்புவா நியூகினி மற்றும் நவ்ரூவில் தடுத்து வைக்கப்படுவார்கள். இவ்வாறு பப்புவா நியூகினி மற்றும் நவ்ரூவில் தடுத்து வைக்கப்படுபவர்களை ஒருபோதும் ஆஸ்திரேலியாவில் மீள்குடியேற்றப்பட மாட்டார்கள் எனப் பிரதமர் தெளிவாகத் தெரிவித்துவிட்டார்.

அத்துடன் சட்டவிரோதமாக ஆள்களைக் கடத்துபவர்கள் ஆஸ்திரேலியாவில் வேலை பெற்றுத்தருவதாகத் தெரிவிப்பதை மக்கள் நம்பிவிடக்கூடாது.

எனினும் சிரியா மற்றும் ஈராக்கில் தங்கியுள்ள அகதிகளைக் குடியேற்றுவதாக ஆஸ்திரேலியாவில் அரசு அறிவித்துள்ளது. இவ்வாறு குடியமர்த்தப்படுபவர்கள் ஐ.நா. அகதிகள் பேரவையினால் அகதிகளாகப் பதிவு செய்யப்பட்டு ஜோர்தான், துருக்கி மற்றும் லெபனானில் தங்கியுள்ளவர்களையே ஆஸ்திரேலிய அரசு குடியேற்றுவதாக அறிவித்துள்ளது.

எனினும் சட்டவிரோதமாகப் படகுகளில் வருபவர்களை ஒருபோதுமே ஆஸ்திரேலியா அனுமதிக்கமாட்டாது எனவும் தூதுவர் ரொபின் மூடி குறிப்பிட்டுள்ளார். (த–வ)

## ஜனாதிபதி

இந்த அறிக்கைகள் எதிர்வரும் ஒக்ரோபர் 6 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நடைபெற்று வரும் 30ஆவது அமர்வில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, குறித்த இரண்டு ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் விரைவில் வெளியிடப்படுமெனத் தெரிவித்திருந்தார். அத்துடன் இந்த அறிக்கைகள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படுமென ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணைந்து தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 6 ஆம் திகதியே இடம்பெறுமென்பதால் அன்று அறிக்கைகளைச் சமர்ப்பிக்க அரசு திட்டமிட்டுள்ளதாகக் கொழும்பு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிஷங்க உடலகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு 2005 ஒகஸ்ட் முதல் நடைபெற்ற பெரியளவிலான மனித உரிமைகள் தொடர்பில் விசாரணை செய்வதற்காகக் கடந்த 2006 ஆண்டு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக் குழு விசாரணைகளில் மூதூரில் 17 அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் படுகொலை, திருகோணமலையில் 5 மாணவர்களின் படுகொலை ஆகியனவும் அடங்கியிருந்தன. எனினும் குறித்த ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த–வ)

## தந்தையர்களை

பட்டனர்.

தமது தந்தையர்கள் விடுதலையின்றிச் சிறைச்சாலைகளில் வாடுவதால், தமது வாழ்க்கையும் பாடசாலைப் படிப்பும் பாதிப்படைவதுடன் தந்தையர்களின் அரவணைப்பும், பாதுகாப்புமின்றி சிரமப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறுவர்கள் தெரிவித்தனர்.

எனவே அவர்களை விடுதலை செய்ய ஆவன செய்யவேண்டும் எனப் புதிய அரசிடம் அவர்கள் கோரியுள்ளனர். சிறுவர்கள் சுலோக அட்டைகளைக் கைகளில் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை பலரது கவனத்தையும் ஈர்த்தது. (த)

## மனித உரிமை

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்து வதற்காக அரசுக்குச் சர்வதேச ரீதியாக மிகப் பெரும் ஆதரவு கிடைக்கப் பெற்றுள்ளது. மக்கள் எமக்கு வழங்கியுள்ள அதிகாரத்தை நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் உரியமுறையில் பயன்படுத்துவேன்–என்றார்.

நியூயோர்க் பௌத்த விகாரையின் விகாராதிபதி குருனேகொட பியதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட நியூயோர்க் நகரில் உள்ள பௌத்த விகாரைகளில் உள்ள மகா சங்கத்தினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டதோடு, அவர்கள் பிரித் ஓதி ஜனாதிபதியை ஆசீர்வதித்தனர். இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமெரிக்காவில் வாழும் இலங்கை மக்களுடன் ஜனாதிபதி நட்புறவுடன் கலந்துரையாடினார். (த–வ)

## கடலில்

டுள்ளதாவது:–

புத்தளம், காங்கேசன்துறை ஊடாக மன்னார், மாத்தறை, மட்டக்களப்பு ஊடாக அம்பந்தோட்டை கடல் பிரதேசங்களில் 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும். நாடளாவிய ரீதியில் அதிக இடியுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே பொது மக்கள் இந்த இயற்கைச் சீற்றங்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

இலங்கையின் அநேக பிரதேசங்களில் நேற்றுப் பிற்பகலின் பின்பு, மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நேற்று பிற்பகல் 2 மணியின் பின்பு மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவப் பிரதேசங்களில் மழைக்கான வாய்ப்புகள் அதிகம். சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. இடி மின்னலுடன் காற்று வீசக்கூடிய வாய்ப்புகளும் உண்டு–என்றுள்ளது. (த–ரி4)

## நவம்பர்

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும் ஒரு வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுக் கடந்த மாதம் வரையான நாடாளுமன்றத் தேர்தல்வரை இருந்தது. இந்நிலையில் புதிய அரசின் அடுத்த வருடத்துக்கான வரவு–செலவுத் திட்டம் நவம்பரில் சமர்ப்பிக்கப்படுகிறது என அமைச்சர் கூறினார். (த–4)

## பாடசாலை

தவிர்த்து மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனத்திற்கு செல்கின்றனர் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை நிறுத்தும் வகையில் தனியார் கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் வகுப்புகளை முழுமையாகத் தடைசெய்வது குறித்து ஆராய்ந்துவருவதாகவும், எதிர்வரும் சில நாள்களில் இது தொடர்பான முடிவுகள் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் தெரிவித்துள்ளார். (த–சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# இருதயராஜா, சென்.சேவியர் அணிகளிடம் கிண்ணம்

யாழ்ப்பாணம், செப். 29
தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புங்குடுதீவு சூழலியல் மேம்பாட்டு அமைவனம் (சூழகம்) புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும் பெண்கள் பிரிவில் சென்.சேவியர் அணியும் கிண்ணங்களைக் கைப்பற்றின.

***பெண்கள் பிரிவு***
நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை புங்குடுதீவு சண்ஸ்ரார் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் புங்குடுதீவு சென்.சேவியர் அணியை எதிர்த்து புங்குடுதீவு பாரதி அணி மோதிக்கொண்டது.



இதில் புங்குடுதீவு சென்.சேவியர் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. சிறந்த வீராங்கனையாக புங்குடுதீவு சென்.சேவியர் அணியின் தர்சினி தெரிவானார்.


***ஆண்கள் பிரிவு***
தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியை எதிர்த்து ஊர்காவற்துறை சென். ஜேம்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. சிறந்த வீரானாக மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியின் பிரசாந் தெரிவானார். (ம-23)



## இன்றைய மோதல்கள்

***நியூட்டன் வி.கழகத்தொடர்***
கரணவாய், செப். 29
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ம-108)

***பண்டாரவன்னியன் கிண்ணத்தொடர்***
வவுனியா லீக்கின் முதற்தர அணிகளுக்கு இடையில் பண்டாரவன்னியன் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் அல் ஹிஜிரா அணியை எதிர்த்து யங் ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)



இலங்கை சோட்டோக்கான் கராத்தே அக்கடமியின் பிரதம ஆசிரியர் அன்ரோ டினே எழுதிய தற்காப்புக் கலை வரலாறு மற்றும் நுட்பங்கள் எனும் நூல் குறித்த ஆசிரியரால் அமைச்சர் மனோகணேசனிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. (ம)

## சென்.மேரிஸ், நியூஸ்ரார் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், செப். 29
அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறைசென்.மேரிஸ்அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்த்து மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து துணைவி நியூஸ்ரார் அணி மோதிக் கொண்டது.
இதில் துணைவி நியூஸ்ரார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## கிண்ணத்தை வசப்படுத்தியது வாலிபர்

யாழ்ப்பாணம், செப். 29
நீர்வேலி சிறி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி சம்பியன் ஆனது.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறி காமாட்சி அம்பாள் கழக மைதானத்தில் இரவு 8மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி மோதிக் கொண்டது. இதில் தோப்பு வாலிபர் அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.
இரவு 9 மணிக்கு இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து மல்லாகம் நியூ வொரியஸ் அணி மோதிக்கொண்டது. இதில் மல்லாகம் நியூ வொரியஸ் அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ம-23)

## ஸ்ரான்லியிடம் வீழ்ந்தது மகாஜனா

யாழ்ப்பாணம், செப். 29
யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திவரும் 19வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரில் கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரியை 6 இலக்குகளால் வீழ்த்தியது ஸ்ரான்லிக் கல்லூரி.
முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 16 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரணவன் 19 ஓட்டங்களையும், தயூஸ்ரன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி சார்பில் வதுசன், சுஜிகரன் இருவரும் தலா 3 இலக்குகளையும் விஸ்ணுவானன், பிரசாந் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
115 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி 18 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சபிஸ் 48 ஓட்டங்களையும், விஸ்ணுவானன் 46 ஓட்டங்களையும் பெற்றனர் பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி அணி சார்பில் ஜெசிந்தன், துலக்சன் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)

## இந்தியாவுக்கு எதிராக பிளாசிஸ் இல்லை?

இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடரில் தென்னாபிரிக்காவின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட பிளாசிஸ் முழங்கால் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக உடற்தகுதி இன்மையால் அவதியுற்று வருகிறார். இதனால் இவர் இந்தியாவுக்கு எதிரான தொடரில் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது.
இந்தியாவுக்கு எதிரான தொடரில் விளையாட இந்தியாவுக்கு பிளாசிஸ் வந்திருப்பினும் அவரது உடல் நிலை தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே அமைந்து வருகிறது. ரி-20 தொடர் எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கிடையில் பிளாசிஸ் உடல்தகுதி பெறுவது சந்தேகமாகியுள்ளது. இந்திய ஆடுகளத்தில் சுழற்பந்தை எதிர்கொள்வதில் சிறந்தவரான அவர்



இந்திய அணிக்கு சவாலாக இருக்கக் கூடியவர். இதனால் பிளாசிஸ் விலகினால் அது நிச்சயம் தென்னாபிரிக்காவுக்கு பின்னடைவாக அமையும். மூன்று விதமான தொடர்களிலும் விளையாடும் 11 வீரர்கள் கொண்ட அணியில் பிளாசிஸ் இடம் பெற்றிருப்பதனால்அவர் விலகினால் பதிலாக மாற்று வீரரை தெரிவு செய்வதில் தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நிச்சயம் சிரமங்களை எதிர்கொள்ளும். பிளாஸிஸ் விலகுவது உறுதியானால் ரி-20 தொடருக்கும் தலைவராக வில்லியர்ஸே செயற்படுவார். (ம)

## ஆவரங்கால் மத்தி, இந்து இறுதியில் விளையாடத் தகுதி

யாழ்ப்பாணம், செப். 29
யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் கடந்த சனிக்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.
இரவு 7மணிக்கு இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த சிறி அணி மோதிக் கொண்டது. இதில் ஆவரங்கால் மத்திய அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது.
தொடர்ந்து இரவு 8மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதிக் கொண்டது.
இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதி யாட்டத்துக்குத் தகுதிபெற்றது. (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை இலங்கைக்கு புதிதல்ல

## இந்து நாளிதழ் விவரிப்பு

புதுடில்லி, செப்.29
இலங்கைக்கு சர்வதேச விசாரணைப் பொறிமுறை என்பது புதியதல்ல என இந்திய ஆங்கில நாளிதழான இந்து சுட்டிக்காட்டியுள்ளது.
இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்தியில் இந்து தெரிவித்துள்ளதாவது:–
இலங்கையின் கடந்த கால வரலாற்றில் சர்வதேச நீதிபதிகள், புல னாய்வாளர்கள் மற்றும் நிபுணர்களின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது.
இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் தொடர்பாக ஐ. நா மனித உரிமைகள் சபையால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கலப்பு நீதிமன்றம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
எனினும் இலங்கை அரசானது இந்தக் கலப்பு நீதிமன்றை ஏற்றுக் கொள்வதற்கான சமிக்ஞைகளை இன்னமும் வழங்கவில்லை. இந்த நிலையில் இலங்கையைப் பொறுத்தளவில் கடந்த 50 ஆண்டுகளாகத் தன்னால் தீர்க்கமுடியாத சில பிரச்சினைகளுக்குச் சர்வதேச நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்களின் உதவியை நாடியுள்ளதற்கான பல்வேறு ஆதாரங்கள் உள்ளன.
செப்ரெம்பர் 1959 இல் படுகொலை செய்யப்பட்ட இலங்கையின் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் கொலை வழக்குத் தொடர்பாக விசாரணை செய்வதற்காக எகிப்து மற்றும் கானா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய குழு, 1963 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நியமிக்கப்பட்டது.
இதேபோன்று 1993 ஆம் ஆண்டு ஏப்ரலில், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற குழுவுக்குத் தலைமை தாங்கிய லலித் அத்துலத்முதலி கொழும்பில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டபோது இலங்கைப் பொலிஸார் இந்த விசாரணையை மேற்கொள்வதற்கு ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் உதவியை வழங்கினர்.
இலங்கை இராணுவத்தின் வடபிராந்தியக் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக 1993ஆம் ஆண்டு மே மாதத்தில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக் குழுவில் கானா, நியூசிலாந்து மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள் உள்வாங்கப் பட்டனர்.
2006 ஆம் ஆண்டு நவம்பரில், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக உயர் நீதிமன்ற நீதிபதி நிசங்க குமார உடலகமவுடன் இணைந்து அப்போதைய மகிந்த ராஜபக்ச அரசால் ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உடலகமவின் ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட 11 பேர் கொண்ட சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவிற்கு பி.என்.பகவதி தலைமை தாங்கியிருந்தார்.
இவ்வாறானதொரு வரலாற்றுப் பின்னணியில் இலங்கை தனது நாட்டில் இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் தொடர்பான விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நிபு ணர்கள் மற்றும் நீதிபதிகளையும் உள்ளடக்க முடியும். ஏனெனில் சர்வதேச நீதி சார் தலையீடு என்பது இலங்கைக்குப் புதிதான ஒன்றல்ல–என்றுள்ளது. (த–வ)

# பாடசாலைப் பரிசோதகர்முறை ஆரம்பமாகிறது மீண்டும்

கொழும்பு, செப்.29
பாடசாலைகளில் பரிசோதனைகளை மேற்கொள்ளும் பாடசாலைப் பரிசோதகர் முறைமையை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாகக் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
நீண்ட காலத்துக்கு முன்னர் நடைமுறையில் இருந்த பாடசாலைப் பரிசோதகர்கள் முறை பின்னர் நீக்கப்பட்டிருந்தது.
முன்னைய காலத்தில் நிலவிய முறையைப் போன்றல்லாது நவீன முறைக்கு அமையப் பாடசாலை பரிசோதகர்கள் முறை நடைமுறைப்படுத்தப்படுமெனவும், வகுப்பறைகளில் கற்பித்தல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து ஆசிரியர்களிடம் வினா எழுப்புவதற்கும் பரிசோதகர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.
அதேபோன்று, ஒவ்வொரு பாடசாலையும் கொண்டுள்ள மனித மற்றும் பௌதிக வளங்கள் மற்றும் மாணவர்கள் போன்ற அனைத்துத் தரவுகளும் கணினி மயப்படுத்தப் படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (த–22)

# பிரதேச செயலர் பிரிவு ரீதியில் இரு தரம்மிக்க பாடசாலைகள்

## பிரபல பாடசாலைகளிலுள்ள மாணவர் நெரிசலை குறைக்க

கொழும்பு, செப்.29
பிரபல பாடசாலைகளில் மாணவர் நெரிசலைக் குறைக்க பிரதேச ரீதியாகப் பாடசாலைகளைச் சிறந்த பாடசாலைகளாக்கும் எண்ணக் கருவின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் குறைந்த பட்சம் இரு பாடசாலைகளைத் தெரிவு செய்து தரம் வாய்ந்த பாடசாலைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர், அதிபர் பயிற்சிகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெற்றுக் கொடுப்பதற்கான அனைத்துப் பொறுப்பையும் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் முறையற்ற இடமாற்றங்கள் உள்ளிட்ட பல தரப்பட்ட விடயங்களில் ஆசிரியர்கள் ஈடுபடுவதால் எமது குறிக்கோள் நிறைவேறமாட்டாது எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.
இது குறித்து மாகாணங்களின் அமைச்சர்கள், மாகாணக் கல்வி அமைச்சர்களை வரவழைத்து 5 ஆண்டு காலத்துக்கு அவசியமான செயற்பாடுகளை நிறைவு செய்து கையளிப்பதற்கு எதிர்காலத்தில் எதிர்பார்ப்பதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (த–22)

# உள்ளூர் பெரிய வெங்காயம் விலை கிடுகிடுவென உயர்வு

கொழும்பு, செப் 29
இறக்குமதி செய்யப் படும் பெரிய வெங்கா யத்துக்கு வரி விதிக்கப் பட்டுள்ளதோடு உள்ளூர் பெரிய வெங்கா யத்தின் விலை உயர்ந் திருப்பதாகத் தம்புள்ளை பொருளாதார மையம் தெரிவிக்கின் றது.
தம்புள்ளை வர்த் தகச் சந்தையில் 30 ரூபா முதல் 45 ரூபாவுக் கிடையில் விற்பனை யாகிய ஒரு கிலோ உள்ளூர் பெரிய வெங்காயம் கடந்த 23 ஆம் திகதி மாலை 80 ரூபாவிலிருந்து 90 ரூபா வரை விற்பனையாகியது.
வெளிநாடுகளிலிருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதன் காரணமாக உள்ளூர் பெரிய வெங் காயத்தின் விலை வெகுவாகக் கீழிறங்கியிருந்தது. இது குறித்து எந்தவொரு தரப்பினாலும் கவனம் செலுத்தப்படாதிருந்த நிலையில் விவசாயிகள் பொதுசன ஊடகங் கள் வாயிலாகத் தமக்கு ஏற்பட்டுள்ள நட்டம் குறித்து அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.
இதற்கமைய, அரசு கடந்த 22 ஆம் திகதி முதல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் வெங்காயத்துக்கு கிலோ ஒன்றுக்கு 20 ரூபா என மேலதிக விலை விதித்துள்ளது.
இதனால் தமது விளைச்சல்களுக்கு நியாயமான விலை கிடைத்திருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். (த–22)

# கீதா குமாரசிங்க உள்ளிட்ட நால்வருக்கு அழைப்பாணை

கொழும்பு, செப் 29
நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க உள்ளிட்ட நால்வருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.
இரட்டைக் குடியுரிமைக் கொண்டவர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாதென தெரிவித்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பிரகாரம், இவர் உள்ளிட்ட நால்வரை எதிர்வரும் 9ஆம் திகதி முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.
சுவிட்ஸர்லாந்து மற்றும் இலங் கையில் கீதா இரட்டைக் குடியுரிமை கொண்டுள்ள நிலையில, அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்குமாறு வலியுறுத்தி ஐவரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த கீதா குமாரசிங்க, தாம் சுவிட்ஸர்லாந்து குடியுரிமையை நீக்கியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். (த)

# இலங்கை எம்.பி.க்களுக்கு மிகக் குறைந்த சம்பளமாம்

கொழும்பு, செப்.29
உலகில் ஏனைய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை, துனிசியா, வெனிசுலா, நேபாளம், ஹெய்ட்டி, பனாமா ஆகிய நாடுகளின் நாடாளும்மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் குறைவானது எனக் கூறப் படுகிறது.
இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 54 ஆயி ரத்து 285 ரூபா சம்பளமாக வழங்கப்படுகிறது.
இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா சம்பளமாக வழங்கப்படுகிறது. இந்தியாவுடன் ஒப்பிடும் போது ஏனைய 5 நாடுகளின் சம்பளம் குறைவானது. (த)

# இரவில் வீடு புகுந்த சிப்பாய்க்கு மறியல்

யாழ்ப்பாணம், செப் 29
நள்ளிரவில் வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்த கடற்படைச் சிப்பாயை எதிர் வரும் 12 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
நெடுந்தீவு 9 ஆம் வட்டாரத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
வீட்டுக்குள்நுழைந்த குறித்த சிப்பாயைக் கண்டதும் அங்கிருந் தவர்கள் கூக்குரலிட்டு அயலவர்களையும் அழைத்தபோது அவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.
அவரது அடையாள அட்டைதவறிவிழுந்த தனையும் கவனிக்காது அவர் அவ்வாறு தப்பியோடியுள்ளார். அதனால் அவரது அடையாள அட்டையுடன் நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்யப்பட்டது.
அந்த அடையாள அட்டையின் அடிப்படையில் குறித்த சிப்பாயைப் பொலிஸார் கைது செய்து ஊர்காவற்றுறை நீதிவானிடம் முற்படுத்தினர். இதன்போதே குறித்த கடற்படைச் சிப்பாயை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க–4)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிராவோ, பொலார்ட்

## இலங்கைக்கு எதிராகவும் இல்லை?

இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியைத் தெரிவுசெய்யும் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தத் தொடரிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணியிலிருந்து பொலார்ட், பிராவோ இருவரும் நீக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் குறித்த விடயம் தொடர்பாக இன்னமும் உத்தியோகபூர்வமான முடிவுகள் எவையும் அறிவிக்கப்படவில்லை.

தெரிவுக்குழுவின் கூட்டத்தின் பொழுது பயிற்சியாளர் சிம்மன்ஸ் "பிராவோ, பொலார்ட் இருவரும் மீண்டும் அணியில் இணைக்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார். இந்தக் கருத்தைத் தீவுகளின் தலைவர் கோல்டர் ஆதரித்தார்.

ஆனால் பெரும்பாலானவர்கள் குறித்த வீரர்கள் இருவருக்கும் எதிராகவே கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இதனால் பொலார்ட், பிராவோ இருவரும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படும் நிலையிலேயே உள்ளனர். இருப்பினும் உத்தியோகபூர்வமான கருத்துக்கள் இன்னமும் வெளியாகவில்லை. (ம)

# நெருங்குகிறார் லூயிஸ் கமில்டன்

## கிண்ணத்தை தக்கவைக்கும் முனைப்புடன்

14ஆவது சுற்றின் பந்தய தூரமான 307.573 கிலோமீற்றர் தூரத்தை ஒரு மணித்தியாலம் 28 நிமிடங்களில் கடந்து அசத்திய கமில்டன் அதற்குரிய 25 புள்ளிகளை தட்டிச் சென்றார்.



நடப்பு வருடத்துக்கான உலக கார்பந்தயத் தொடர் வழக்கம்போல் 19 சுற்றுக்களாக நடைபெற்றுவருகிறது. இதன் 14ஆவது சுற்று ஜப்பானின் ஓடுதளத்தில் நேற்று நடைபெற்றது. முதலாவது சுற்றிலிருந்து கணிசமான ஆதிக்கம் செலுத்திவரும் நடப்புச் சம்பியனான லூயிஸ் கமில்டன் இந்தச் சுற்றிலும் முதலிடத்தைப் பிடித்து புள்ளிப்பட்டியலில் அசைக்க முடியாத ஆதிக்கம் செலுத்துகிறார். இதனால் நடப்பு வருடத்திலும் கமில்டனே முதலிடத்தைப் பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

14ஆவது சுற்றின் பந்தயத் தூரமான 307.573 கிலோமீற்றர் தூரத்தை ஒரு மணித்தியாலம் 28 நிமிடங்களில் கடந்து அசத்திய கமில்டன் அதற்குரிய 25 புள்ளிகளை தட்டிச் சென்றார். முடிவடைந்த 14 சுற்றுகளில் கமில்டன் பதிவுசெய்த 8ஆவது வெற்றி இதுவாகும். ரஸ்பேர்க் இரண்டாவது இடத்தையும், வெட்டல் மூன்றாவது இடத்தையும் தமதாக்கினர்.

நிறைவடைந்துள்ள 14 சுற்றுக்களின் முடிவில் 277 புள்ளிகளுடன் கமில்டன் முதலிடத்திலும் ரஸ் பேர்க் 229 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், வெட்டல் 218 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், கிமி நான்காவது இடத்திலும் உள்ளனர். முதலாவது இடத்திலுள்ள கமில்டனுக்கும் இரண்டாவது இடத்திலுள்ள ரஸ்பேர்க்குக்கும் அதிக புள்ளிகள் வித்தியாசம் காணப்படுவதால் இந்த வருடத்திலும் கமில்டனே கிண்ணத்தைத் தக்க வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# முதல்ல முடிய வெட்டுங்க ஜி



இந்தியா – தென்னாபிரிக்க அணிகளுக் கிடையிலான நீண்ட தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவித்த தென்னாபிரிக்க முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பானி வில்லியர்ஸ், இசாந் சர்மா முதலில் முடிவெட்ட வேண்டும் என்று தெரிவித்தமை சமூக வலைதளங்களில் சிலரைப் பொறுத்த மட்டில் நகைச்சுவைக்குரிய விடயமாகவும், சிலரைப் பொறுத்தமட்டில் சர்சைக்குரிய விடயமாகவும் மாறியுள்ளது.

சர்மா தொடர்பாக பானி வில்லியர்ஸ் தெரிவித்ததாவது:– இந்திய அணியில் திறமையாளர்கள் பலர் உள்ளனர். அப்படிப்பட்ட நிலையில் இசாந்த் சர்மா தனது செயற்பாடுகள் சுய கௌரவம் குறித்து சிந்திக்க வேண்டும். இலங்கைச் சுற்றுப் பயணத்தின்போது அவர் நடந்துகொண்ட விதம் மிகவும் தவறானது. இதற்கு அவரை மட்டும் குற்றம் கூறுவது முறையல்ல. இலங்கை வீரர்கள் சிலரிலும் தவறுள்ளது. ஆனால் அவர் நன்றாகவே பந்து வீசினார். எனவே அவரது குணத்தை அவர் மாற்றிக் கொள்ளவேண்டும். முதலில் இசாந்த் தனது தலைமுடியை வெட்டிக்கொள்ளவேண்டும். அவரைப் பார்த்தால் ஒரு விளையாட்டு வீரர் மாதிரியே தெரியவில்லை–என்றார். (ம)

# இந்தியாவுக்கு வந்தது தென்னாபிரிக்கா



இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ரி–20 தொடரின் முதலாவது ஆட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த தொடரில் பங்கேற்கும் பிளசிஸ் தலைமையிலான தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தினம் இந்தியா வந்தடைந்தது.

தென்னாபிரிக்க அணி இந்திய மண்ணில் மொத்தம் 12 நகரங்களுக்குச் சென்று விளையாட உள்ளது. இதில் மூன்று வடிவிலான தொடர்களிலும் அம்லா (டெஸ்ட் தொடரின் தலைவர்), வில்லியர்ஸ் (ஒருநாள் தொடரின் தலைவர்) பிளசிஸ் (ரி–20 தொடரின் தலைவர்), டுமினி, இம்ரான் தகிர், ரபடா ஆகியோர் இடம்பெற்றிருப்பது தென்னாபிரிக்க அணியை மேலும் பலம்பெறச் செய்யும் விடயமாக அமைந்துள்ளது. இந்திய அணி முழுவதும் அறிவிக்கப்படாவிடினும் (ரி–20, முதல் மூன்று ஒருநாள் ஆட்டங்களின் அணி விவரமே அறிவிக்கப்பட்டுள்ளது) கோக்லி, தவான், அஸ்வின், யாதேவ், ரகானே ஐவரும் அனைத்து விதமான தொடர்களிலும் இடம் பிடிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# கோக்லியிடம் தங்கியுள்ளது தலைமைத்துவத்தின் எதிர்காலம்

ஒரு லட்சியார்த்தமான கிரிக்கெட் உலகில், டெஸ்ட் கிரிக்கெட்டின் நுட்பங்களையும் சுவாரசியங்களையும் பரப்ப விரும்பும் கிரிக்கெட் நிர்வாகிகள் இருப்பார்களேயானால் அவர்கள் நிச்சயம் கோக்லி வகை தலைமைத்துவத்தின் பல குணாதிசியங்களை தம்பட்டம் அடித்துப் பரப்புவார்கள் என்பதில் ஐயமில்லை.

கிரிக்கெட் உலகில் சிறந்த தலைமைத்துவம் மிக்க ஒரு வீரர் இருக்கிறார். அவராலேயே கிரிக்கெட்டினதும் தலைமைத்துவத்தினதும் எதிர்காலம் தீர்மானிக்கப்படப்போகிறது. இந்திய டெஸ்ட் தலைவர் கோக்லிதான் அந்த நபர் இவ்வாறு தெரிவித்துள்ளார் இயான் சப்பல்.



கோக்லி தொடர்பாக சப்பல் தெரிவித்ததாவது:– கோக்லி ஆக்ரோஷமான அணுகுமுறையை இந்திய அணிக்குள் புகுத்தி அரிதான அயல்நாட்டு டெஸ்ட் தொடர் வெற்றியை இலங்கை மண்ணில் சாதித்துள்ளார். ஒரு லட்சியார்த்தமான கிரிக்கெட் உலகில், டெஸ்ட் கிரிக்கெட்டின் நுட்பங்களையும் சுவாரசியங்களையும் பரப்ப விரும்பும் கிரிக்கெட் நிர்வாகிகள் இருப்பார்களேயானால் அவர்கள் நிச்சயம் கோக்லி வகை தலைமைத்துவத்தின் பல குணாதிசியங் களை தம்பட்டம் அடித்துப் பரப்புவார்கள் என்பதில் ஐயமில்லை.

கோக்லியின் தலைமைத்துவம் ரசிகர்களின் ஆர்வத்தை அதிகமாக்குவது மட்டுமல்லாமல், தனது அணியை முன்னேற்றக் கூடிய சாதகமாக பாதையில் செயற்படும். கடந்த வருடம் ஆஸ்திரேலியாவில் வைத்து ஆஸ்திரேலியாவுக்கு எதிராகவே ஒரு சாத்தியமில்லாத வெற்றிக்காக இந்திய அணியை சவாலுக்குத் தயார்படுத்தினார். இதில் சவாலை விரும்பும் வீரர்களை ஒன்று திரட்டி வெற்றிக்கான வேட்டையைத் தொடங்கினார். கோக்லியின் தலைமைத்துவத்தை பலர் விமர்சிக்கிறார்கள். ஆனால் அவர் குவிக்கப் போகும் வெற்றிகளால் வேறுதெரிவின்றி அவரை ஏற்றுக் கொள்ளதான் போகிறார்கள் குறித்த விமர்சகர்கள். நானும் கோக்லிக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்தவன்தான். ஆனால் வேறு தெரிவில்லாமல் அவரை ஏற்றுக்கொண்டேன்–என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பான் பசிபிக் கிண்ணத்தை கைப்பற்றினார் ரட்வன்ஸ்கா

**தரப்படுத்தலில் எட்டாவது இடத்துக்கும் முன்னேற்றம்**

ஜப்பானில் நடைபெற்ற பான்பசிபிக் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்று தரப்படுத்தலில் மீண்டும் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளார் ரட்வன்ஸ்கா.

தரப்படுத்தலில் 13ஆவது இடத்திலிருந்த (ஆட்டம் ஆரம்பமாகுமுன்) ரட்வன்ஸ்கா தரப்படுத்தலில் 15ஆவது இடத்திலிருந்த (ஆட்டம் ஆரம்பமாகுமுன்) பெலின்டா பென்சிச்சை எதிர்கொண்டார். ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ரட்வன்ஸ்கா 6–2, 6–2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

கிட்டத்தட்ட ஒருவருட காத்திருப்புக்குப் பின்னர் அவர் கைப்பற்றிய முதல் கிண்ணம் இதுவாகும். மொத்தத்தில் இது ரட்வன்ஸ்காவின் 15 ஆவது கிண்ணமாகும். பான் பசிபிக் வெற்றிக்குப் பின்னர் தரப்படுத்தலில் 13 ஆவது இடத்திலிருந்த ரட்வன்ஸ்கா 8ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். தொடர்ந்தும் தரப்படுத்தலில் இதேநிலைமையில் அவர் நீடித்தால் முதல்தர வீராங்கனைகளின் ஆட்டத்துக்கு தகுதிபெறலாம். (ம)





Mahendra Singh Dhoni @msdhoni Follow

How many of u agree this was 1of the most exciting 2stroke single cylinder bikes to ride need to restore mine quickly

3:11 PM - 27 Sep 2015

737 1,540

Darren Gough @DGoughie Follow

@msdhoni not as good as this pic.twitter.com/1dhJuwy33d

3:22 PM - 27 Sep 2015




32 57

Mahendra Singh Dhoni @msdhoni Follow

@DGoughie ur right this one is better mate pic.twitter.com/gVAYNTXMHz

3:32 PM - 27 Sep 2015



332 501

# டோனியிடம் வீழ்ந்த டேரன்

இந்திய அணித்தலைவர் டோனி, இங்கிலாந்து முன்னாள் வீரர் டேரன் இருவரும் மோட்டார் சைக்கிள் தொடர்பாக ருவிட்டரில் பேசிக் கொண்ட பதிவு இணையத்தில் பிரபல்யமாகியுள்ளது. மோட்டார் சைக்கிள் பிரியரான டோனி தனது ருவிட்டரில் ஒரு மோட்டார் சைக்கிளின் படத்தை பதிவிட்டிருந்தார். அதற்கு பதிலளித்த டேரன் கண்டிப்பாக என்னுடைய பைக்கை போல வர முடியாது என்று குறிப்பிட்டு வேறு ஒரு நவீன ரக மோட்டார் சைக்கிளின் படத்தை பதிவிட்டிருந் தார். இதற்கு பதிலளித்து பதிவிட்ட டோனி, சரியாக சொல்கிறீர். ஆனால் இதை விட சிறந்தது இருக்க முடியாது என்று தனது நவீன கெல்காட் மோட்டார் சைக்கிளின் படத்தை பதிவிட்டார். டோனியிடம் பழைய முறைமையிலான மோட்டார் சைக்கிள்களிலிருந்து தற்போழுது வரை கிட்டத்தட்ட 57 விதமான மோட்டார் சைக்கிள்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

போட்டிப்பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு
விரிவுரையாளர் த.தவசேகரின் வழிகாட்டலின்கீழ் நடைபெறுகின்றன
T.P: 0766 88 3394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கோபர்லூஸ் வங்கியருகில்)

**கணக்காளர் தேவை**
கிளிநொச்சியில் இயங்கும் white stone (pvt) Ltd நிறுவனத்திற்கு கணக்காளர் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம், விண்ணப்ப முடிவு திகதி - 06.10.2015
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :
White stone (pvt) Ltd,
16, Kandy road, Vavuniya.
T.P - 0773136262

# லூசி சபரோவாக்கு திடீர் வாய்ப்பு

தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களில் மட்டுமுள்ள ரென்னிஸ் வீராங்கனைகள் பங்கேற்கும் ரென்னிஸ் தொடர் வருடத்தின் இறுதிப்பகுதியில் நடைபெறவுள்ளது. குறித்த தொடரில் விளையாடும் வாய்ப்பை தொடர்ந்தும் தக்க வைத்துள்ளார் லூசி சபரோவா.

நடப்பு வருடம் எதிர்பார்க்கப்பட்டதைப்போல் சபரோவாக்கு சிறப்பாக அமையவில்லை. இதனால் அவர் தரப்படுத்தலில் பின்தள்ளப்படுவார் என்ற கருத்துக் கணிப்பே நிலவியது. ஆனால் அவர் நேற்று புதிய தரப்படுத்தலில் ஐந்தாவது இடத்திலேயே நீடித்து தனக்கான வாய்ப்பை தொடர்ந்தும் தக்க வைத்துள்ளார். சபரோவா கிண்ணங்களைக் கைப்பற்றவில்லையாயினும் காலிறுதி, அரையிறுதி ஆட்டங்கள் வரை முன்னேறியமையாலேயே தரப்படுத்தலில் அவருக்கான நிலை தொடர்ந்தும் பேணப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. (ம)



# பாகிஸ்தான் - சிம்பாப்வே இரண்டாவது ரி-20 இன்று

பாகிஸ்தான் சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஏற்கனவே முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்று தொடரில் 1–0 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்குகிறது சிம்பாப்வே. இன்றைய ஆட்டத்தில் சிம்பாப்வே வென்றால் தொடர் 1–1 என்று சமநிலையாகும். சிம்பாப்வே தோல்வியடைந்தாலோ அல்லது ஆட்டம் கைவிடப்பட்டாலோ கிண்ணம் பாகிஸ்தானிடம் சென்றுவிடும். (ம)



# இந்திய வீரர்களுக்கு ராணுவ பயிற்சி

தென்னாபிரிக்க தொடருக்கு தயார்ப்படுத்தும் விதமாக இந்திய வீரர்களுக்கு இரண்டு நாள்கள் இராணுவ பயிற்சி வழங்கத் திட்டமிட்டுள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை.

பெங்களூரில் நடைபெற்ற 7 நாள்கள் கொண்ட பயிற்சிமுகாமைத் தொடர்ந்து இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள மலைப்பகுதியிலேயே இந்திய வீரர்களுக்கு ராணுவ பயிற்சி வழங்கப்படவுள்ளது. ராணுவ வீரர்களுக்கு வழங்கப்படும் இந்தப் பயிற்சியை துடுப்பாட்ட வீரர்களுக்கும் வழங்க வேண்டும் என்று டோனி விரும்பியமையாலேயே ராணுவ பயிற்சி வீரர்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுகிறது. (ம)

**Account's clerk தேவை**
பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு Account's clerk தேவை. உங்கள் சுயவிபரக்கோவையை 02.10.2015 இற்கு முன்னர் jaffnavacancy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
உலகிலுள்ள எல்லாக்குழந்தைகளும் 2 - 4 வயதிற்குள்ளேயே தத்தம் மொழியை கற்றுக்கொள்கின்றன! 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை இன்றுவரை ஏன் உங்களால் செய்யமுடியவில்லை? இலக்கணம் என்ற தவறான வழியில் கற்றமையே ஆங்கிலமொழியில் இன்றுவரை உங்களால் பேசமுடியாமைக்கான காரணம் ஆகும்.
2 வது சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 03-10-2015 சனி
பிரிவு 1 : காலை 08.00-10.00
பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பிப 01.00-03.00
பிரிவு 4 : மாலை 03.00-05.00
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள் தொழில்புரிவோர் வெளிநாடு செல்வோர் ஆசிரியர்கள் இணையமுடியும்!
SAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.